Registered as a Newspaper

சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை: 6 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 28 சனிக்கிழமை (12-07-1997) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்: 6

# பயணிகள் விமான சேவை ஒரு வாரம் இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஜூலை 12

பலாலியிலிருந்து கொழும்புக்கான பயணிகள் விமான சேவை இனி 22 ஆம் திகதிதான் நடைபெறும்.

நாளை தொடக்கம் 21 ஆம் திகதி வரை விமான சேவை நடைபெறாது என யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்று அறிவித்தது.

இக்காலத்தில் கொழும்பிலிருந்தும் பலாலிக்கு பயணிகள் விமானசேவை நடைபெறாது என்று மற்றொரு தகவல் தெரிவித்தது. (உ-3)

# கடற்படை பாதுகாப்புடன் மன்னார் கப்பல் சேவை!

## விரைவில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஜூலை 12

மன்னாருக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் கடற்படைப் பாதுகாப்புடன் "தாரகி" பயணிகள் கப்பலைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம் ஏற்பாடுகள் செய்துள்ளதாக அறியவருகின்றது.

இந்தக் கப்பலை வாடகைக்கு அமர்த்தி, மன்னாரில் தங்கியுள்ள அகதிகளை அதன் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப அத்தியாவசிய ஆணையாளர் நாயகம் அலுவலகம் நடவடிக்கை எடுத்திருப்பதாக யாழ். அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் கப்பல் சேவை எப்போது ஆரம்பமாகும் என்பது குறித்து இன்னமும் திட்டவட்டமான முடிவுகள் எடுக்கப்படவில்லை. என்றாலும் விரைவில் இச்சேவை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

'மிஷன்' பயணிகள் கப்பல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவிலில் மோதல்!

யாழ்ப்பாணம், ஜூலை 12

நேற்று முன்தினம் அதிகாலையில் மிருசுவிலில் உள்ள இராணுவக் காவலரண்களைத் தாக்க வந்த விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற சண்டையில் ஏழு விடுதலைப் புலிகள் உயிரிழந்ததாகவும் —

அவர்களிடமிருந்து துப்பாக்கிகள், கிரனேட்டுக்கள், தொடர்பு சாதனக் கருவிகள் ஆகியன இராணுவத்தால் கைப்பற்றப்பட்டதாகவும் —

கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் நேற்று அறிவித்தன.

மிருசுவிலில் நடந்த சம்பவத்தில் உயிரிழந்த ஏழு இளைஞர்களின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு நேற்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

# காணமற்போனோர் விவகாரம்: வெகுஜனப் போராட்டம் நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 12

குடாநாட்டில் காணாமற்போனோர் மற்றும் கைதானோர் கதி குறித்து தகவல்களை வெளியிடக் கோரி வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்த காணாமற்போனோர் கைதானோர் பாதுகாவலர் சங்கம் முயற்சி எடுத்து வருவதாகத் தெரியவருகின்றது.

ஒரு நாள் கடைகளைப் பூட்டி, பாடசாலைகளை மூடி, மறியல் போராட்டத்தை நடத்த ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

தமது விவகாரத்தை வெளியில் உள்ளவர்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில் இந்த வெகுஜனப் போராட்டம் அமையும் என சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இன்று சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும் வலிகாமம், யாழ்ப்பாணப்பகுதி பாதுகாவலர்களுக்கான கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## வாசுதேவ ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூலை 12

குடாநாட்டில் காணாமற்போனோர் விவகாரம் தொடர்பாக ஏற்பாடு செய்யப்படவிருக்கும் வெகுஜனப் போராட்டங்களுக்கு தாம் ஆதரவு வழங்குவதாக— அரசுத் தரப்பைச் சேர்ந்த—இரத்தினபுரி மாவட்ட எம்.பியான வாசுதேவ நாணயக்கார உறுதி கூறியுள்ளார்.

யாழ். காணாமற்போனோர், கைதானோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளை அண்மையில் சந்தித்தபோதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இறக்கக்கண்டியில் கடத்தப்பட்ட முஸ்லிம் மீனவர்களை விடுவிப்பதற்கு இணக்கம்?

திருகோணமலையில் இறக்கக்கண்டிக் கிராமத்திலிருந்து கடந்த வாரம் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 40 முஸ்லிம் மீனவர்களில் மூவரை மாத்திரம் தமது பாதுகாப்பில் வைத்துக் கொண்டு ஏனையோரை விடுவிக்க விடுதலைப் புலிகள் இணங்கி இருப்பதாக திருமலையைச் சேர்ந்த மூத்த பொலீஸ் அதிகாரி நெவில் விஜேயசிங்கா தெரிவித்தார்.

இதே நேரம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் இந்த மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக சாதகமான முடிவு எடுக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## செய்திச் சாரம்

### தோப்பூரில் 8 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 12

மூதூர் — தோப்பூரில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அமைந்திருந்த பொலீஸ் சோதனைச் சாவடிப் பகுதியில் நேற்றுக் காலை 10 மணிக்கு புலிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையில் மோதல் சம்பவம் இடம்பெற்றது.

அருகில் ஆஸ்பத்திரியிலிருந்த பொதுமக்களும் இச்சமரில் பாதிக்கப்பட்டனர்.

இச்சமரில் ஒரு கர்ப்பிணி, ஒரு கைக்குழந்தை உட்பட 6 பொதுமக்களும், இரு பொலீஸாரும் உயிரிழந்தனர்; 12 பொதுமக்களும் இரு பொலீஸாரும் காயமடைந்தனர். (உ-3)

### மின்மாற்றி தகர்ப்பு

கொழும்பு, ஜூலை 12

களுதாவளை இந்து ஆலயத்துக்கு அருகே மின் மாற்றி ஒன்று தகர்க்கப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடிக்கும், செட்டிக்குளத்துக்கும் இடையில் நேற்றுக்காலையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஆலய திருவிழா முடிந்த பின் மின்மாற்றி தகர்க்கப்பட்டதாகத் தெரிய வந்தது. (உ-3)

### லைசென்ஸ் எடுக்க உத்தரவு

திருகோணமலை, ஜூலை 12

திருகோணமலையில் சைக்கிள்கள், ஓட்டோக்கள் ஆகியவற்றுக்கான லைசென்ஸ் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் பெறப்படவேண்டும் என்று ஒலிபெருக்கி மூலம் பொலீஸார் நகரில் அறிவித்துள்ளனர். (உ-3-150)

### கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

தோட்டம் செய்வதற்காக காணி துப்புரவு செய்து கொண்டிருந்த ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

மல்லாகத்தில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஏழாலையைச் சேர்ந்த சரவணை சின்னத்தம்பி (வயது 73) என்பவரே கால் துண்டிக்கப்பட்டு படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

### மாணவர்கள் விடுவிப்பு

சாவகச்சேரி ஜூலை 12

சரசாலை வடக்குப் பகுதியில் புறாப்பிடிக்க மருத மரத்தில் ஏறிய சமயம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் மட்டுவில் வடக்கு பாடசாலை மாணவர்கள் இருவரும் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர். (உ-31)

## செய்திச் சாரம்

### நகருக்கு வெளியே செல்லத் தடை

திருகோணமலை, ஜூலை 12

திருகோணமலை நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த வாகனங்களை நகர எல்லைக்கு வெளியே கொண்டு செல்லக்கூடாது என்று இராணுவ அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

வாகனங்களில் வந்து தாக்குதல் நடத்தப்படுவதைத் தவிர்க்கும் நோக்குடன் இந்தப் பணிப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-150-3)

### வன்னியில் மோதல்

வன்னியில் நெடுங்கேணி பெரியமடுப் பகுதிகளில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றன.

நெடுங்கேணி மூன்றாவது நான்காவது மைல் கல் பகுதியில் நடந்த சண்டையில் 8 புலிகளும் —

பெரியமடுப் பகுதியில் இரு புலிகளும் —

உயிரிழந்ததாகக் கொழும்பில் அரசுத் தரப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (உ-3)

### பணிக்கு வராத டாக்டர்கள்

யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட டாக்டர்களில் இதுவரை 28 டாக்டர்கள் வேலைக்குச் செல்லவில்லை என அறிவிக்கப்படுகிறது.

இந்த 28 டாக்டர்களும் வேலையை இழந்ததாகக் கருதப்பட்டு அதுபற்றி அவர்களுக்கு உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று 'லங்காதீப' சிங்கள நாளிதழ் தெரிவிக்கிறது. (உ-3)

### ஒளிபரப்பு சேவை குறித்து விசாரணை

இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் நடத்தி வரும் ஒளிபரப்பு சேவைகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அந்நாடுகளிலுள்ள இலங்கைக்கான தூதுவர்களை வெளிநாட்டு அமைச்சு கேட்டுள்ளது.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த ஒளிபரப்பு சேவைகள் குறித்து அரசாங்கக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் இந்தியத் தமிழர்களுடன் இணைந்து இங்கிலாந்தில் 'ஐ.டி.சி. இல. 4' என்ற பெயரிலும் பிரான்ஸில் 'தமிழ் ஒளி' என்ற பெயரிலும் அண்மையில் ஒளிபரப்புச் சேவையை ஆரம்பித்துள்ளனர். (உ-10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

EL 9987, கறுப்பு நிறமுடைய மைனர் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு:- பொ. வன்னியசிங்கம் முக்குருணுப் பிள்ளையார் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். [48335]

பல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. கமலேஸ்வரி (குட்டி) 588/8, நாவலர் வீதி, (ஸ்ரான்லிக் கல்லூரி முன் ஒழுங்கை), காலை 11.00 மணியில் இருந்து பார்வையிடலாம். [48330]

504 கார் முன்பக்க புதிய கண்ணாடி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [48359]

## தவறிவிட்டது

குணரெத்தினம் கமலினி ஆகிய எனது விசேட அடையாள அட்டை, யாழ்ப்பாணம் மடத்தடி வீதி, வேம்படி வீதி, அரசினர் வைத்தியசாலை, ஆகிய வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும், கி. பரம்சோதி (ஆண் தாதி), யாழ் அரசினர் வைத்தியசாலை. [48343]

சண்முகலிங்கம் மேரி றெசிந்தா என்பவருடைய விஷேட அடையாள அட்டை மாவடிக்கும், மூளாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் J/171 மூளாய் கிராம சேவகரிடம் அல்லது கா. முத்துராசா கி.மு வேரம் மூளாய் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். [48361]

## தேவை

புதிய, பழைய பாவனைக்கு உதவாத தட்டச்சு இயந்திரங்கள், றோனியோ, இயந்திரங்கள் தேவை. தொடர்பு: R. மருதம் 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். [48264]

## திருமண சேவை

செவ்வாய் குற்றமுள்ள அரசாங்க கௌரவமான, உத்தியோகத்தருக்கு பட்டதாரி ஆசிரியை தேவை. வேறு பல தொழில்களிலும் மணமக்களுண்டு. விவரங்கட்கு நேரில்/ கடிதமூலம் ஜாதகத்துடன் தொடரவும். இயக்குனர் விநாயக திருமண சேவை, 11, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [48339]

## திருத்துதல்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், றோனியோ இயந்திரங்கள், சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: R, மருதம், 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். [48263]

## இடமாற்றம்

ஆனைப்பந்தியில் இயங்கிய விநாயக திருமண சேவை, தற்பொழுது 11, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதியில் இடமாற்றப்பட்டுள்ளது. எனவே பெற்றோர்கள் விவாகங்களுக்கு அவ்விடம் தொடரவும். [48340]

## விண்ணப்பப்படிவம்

அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் உள்ள சிற்றூழியர்களுக்கான பதவி உயர்வு போட்டிப் பரீட்சை விண்ணப்பப் படிவம் விற்பனையாகிறது. தபாலில் பெறுவதாயின் ரூ. 10/- அனுப்பவும். நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். [48354]

## மரம்

சர்க்கரை வேம்பு, வேம்பு, பலா, கரிசலாங்கண்ணி, அகத்தி, பொன்னாவரசு, யோகாசனப் படம் மில்க்வைற் சோப்/சலவைத்தூள் வெற்றுறைகள் 10 அல்லது ரூ. 10/- ஸ்ரீராமகிஷ்ண விஜயம் ரூ. 20/- 'நீமியா' தென்னம் பிள்ளை, பெற்றுக் கொள்ளலாம். 'மில்க்வைற்' [சி/1106]

## வீடு விற்பனைக்கு

நாயன்மார்கட்டு, 363, ஆனந்தன் வடலி வீதியில் பேய்ச்சியம்மன் கோயிலுக்கருகில் (5¼பரப்பு+16தென்னை) தென்னை மரங்களுடன் கூடிய காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. வீடு, 3 படுக்கை அறைகள், சாப்பாட்டறை, 'மலசலகூடம், கிணறு' குளியலறை முதலிய வசதிகளுடையது. தொடர்பு: M. சின்னத்தம்பி, C/o. இராஜபூபதி, ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை, நாயன்மார் கட்டு. [48350]

## மல்லிகா மிக்சர்

சுத்தமான பசு நெய் சேர்த்து, அதிவிசேடமாகத்தயாரிக்கப்பட்ட, மிக்சர், பகோடா பொரிகடலை வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு கிலோ ரூபா 120/- மட்டுமே!

**மல்லிகா ஸ்ரோர்ஸ்**

மத்தியசந்தை முன்பாக
மானிப்பாய். (சி-1107)

## புலமைப்பரிசில் - மாதிரிப் பரீட்சை

06 - 07 - 97 எமது நிறுவனத்தில் நடந்த 1 ஆவது மாதிரிப் பரீட்சையில் உயர்ந்த புள்ளி பெற்றவர்கள்:

1) தியாகராஜா சுகந்தன் — 179 புள்ளிகள்,
2) இரங்கநாதன் கோகுல்நாத் — 176 ,,
3) பிரியங்கரி சத்தியசீலன் — 171 ,,
3) மதுராந்தகா செல்வரத்தினம் — 171 ,,

இவர்களுக்கு எமது பாராட்டுதல்கள்

13 - 07 - 97 ஞாயிறு 2 ஆவது மாதிரிப் பரீட்சை வழமைபோல் 7 பிரிவுகளாக நடைபெறும்.

**BOND INSTITUTES**

யாழ்ப்பாணம். [48344]

## 2 ஆம் தவணை மாதிரிப் பரீட்சை

| | | | |
|---|---|---|---|
| ஆண்டு 3, 4, 5 | — | 12 - 07 - 97 | சனி |
| ,, 6, 7, 8 | — | 13 - 07 - 97 | ஞாயிறு |
| ,, 9, 10 O/L | — | 18 - 07 - 97 | வெள்ளி |

பரீட்சைக்குப் பின் வினாத்தாள்கள் விடைகளுடன் பெறலாம்.

பரீட்சைப் பகுதி

**BOND INSTITUTES**

யாழ்ப்பாணம்.

(48360)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்; 15 — 05 — 1946

ஆண்டவன் அடியில்: 03 — 06 — 1997

### அமரர் இளையதம்பி சிவலிங்கம்

(முன்னாள் சாரதி வ. பி. போ. ச. கோண்டாவில் சாலை, அளவெட்டி, பழந்தோட்டம்)

03 - 06 - 97 அன்று இளவாலையில் இடம் பெற்ற அசம்பாவிதத்தில் அகால மரணமான எங்கள் குல தீபத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கட்கும் உடன் வந்து ஆறுதல் கூறியவர்கட்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கட்கும், எமக்கு தேவையான உதவிகளைப்புரிந்து உறுதுணையாய் நின்ற வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர்க்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதோடு; 13 - 07 - 97 (நாளை) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அன்னாரது 41 ஆம் நாள் நினைவு நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

உப்புமடம் வீதி,
கோண்டாவில். (48347)

உ
சிவமயம்

## போட்டோஸ்ரற்

இல. 11, சேர். பொன். இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

**மஹாத்மா அச்சகம்**

(ஏழாலை)

★ பிரதிகள் பெருப்பித்தல் — சிறுப்பித்தல்
★ புத்தகங்கள் பிரதி செய்தல்
★ பைண்டிங் செய்தல்

தரமான சேவை — நிதான விலை

இன்றே

வருக வருக என அன்புடனும் பணிவுடனும் வரவேற்கின்றோம். (சி/1100)

## இடமாற்றம்

**நெக்ரா இன்**

★ சமையல் வசதி ★ பிரயாண வாகன வசதி
★ வெளிநாட்டு உள்நாட்டு தொலைபேசி வசதி
★ நாள் மாத வாடகை

இல: 115, அலிஸ்டொப் வீதி, கொழும்பு 12 இல் இயங்கி வந்த எமது ஸ்தாபனம், தற்சமயம்

**இல- 198 டாம் வீதி, கொழும்பு - 12 இல்**


இயங்கிவருகின்ற தென்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொலை பேசி எண், 337316
074 - 712939

நெக்ரா இன்,
198, Dam Street,
Colombo - 12

(48345)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 20 — 04 — 1949

உதிர்வு: 12 — 07 — 1989

அமரர்

### மரியாம்பிள்ளை வில்லியம் ஜெயராஜா

(சில்லாலை)

(நீர்ப்பாசன திணைக்களம், வவுனிக்குளம்)

எங்கள் அருமைத் தெய்வமே!
ஆண்டு எட்டு அல்ல ஆயிரம் தான் சென்றாலும்
மறைந்திடுமோ உங்கள் நினைவலைகள்

உங்கள் பிரிவால் துயருறும்:

**மனைவி, மகள், தாய், சகோதரர்கள்.**

265, ஆஸ்பத்திரி றோட்,
யாழ்ப்பாணம். (48357)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 07 — 08 — 1928

விண்ணில்: 11 — 06 — 1997

### அமரர் P. K. வேலப்பகுட்டி

(ஸ்தாபகர் யாழ்ப்பாணம் ஜீவா ஸ்டோர்ஸ், ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ் கொழும்பு ஜீவா சோப் இன்டஸ்றீஸ், ஜீவா எண்ரர் பிரைசஸ், ஜீவா றெக்ஸ், கோல்டன் பெட்டிக்ஸ், றிச்சார்ட்ஸ் எவர் சில்வர் டிரேடர்ஸ்)

- திரு.ப. தவராஜா
குடும்பத்தினர்

26, யாழ். வீதி,
யாழ்ப்பாணம். (48355)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'செய் அல்லது செத்துமடி!' நடவடிக்கையின் 3 ஆம் பாய்ச்சலுக்கு பிரபா தயாராகிறார்?

''ஸ்ரீலங்காப் படைகளின் பலத்த தாக்குதல்கள் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் நாட்டை விட்டு ஓடுகின்றார். லாகோஸ் அல்லது கம்பூச்சியா அல்லது பர்மாவில் அவர் தஞ்சம் புகலாம்.''

—இவ்வாறு அரச சார்பு தகவல் தொடர்பு சாதனங்கள் இவ்வார முற்பகுதியில் விழுந்தடித்துக் கொண்டு செய்திகளை வெளியிட்டன.

உலக அளவில் 'தனித்துவமான' (Exclusive) தாகக் குறிப்பிடக் கூடிய இந்தச் செய்தி குறித்து கொழும்பில் சுதந்திரப் பத்திரிகையாளர்கள் வாய் பிளந்தனர்!

இச்செய்தியை அரச வானொலி மூலம் கேட்ட போது—


1989 இல் அகில இந்திய வானொலியும் சில தகவல் தொடர்பு சாதனங்களும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார் என இரண்டு, மூன்று நாள்களாகப் 'போட்டு அடித்த' செய்திதான் பலருக்கும் நினைவுக்கு வந்தது.

இந்தியப் படைகள் வடக்கு, கிழக்கில் நிலை கொண்டிருந்த காலம் அது. இந்தியப் படைகளின் முதுகில் ஏறி வடக்கு, கிழக்கு மாகாணத்தை — மாகாண முதலமைச்சர் என்ற பெயரில் — வரதராஜப்பெருமாள் சவாரி விட்டுக்கொண்டிருந்த வேளை அது.

''பிரபாகரன் அங்கு சுடப்பட்டார். அவரின் சடலம் இங்கு மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் தகனக்கிரியைகள் நடக்கவுள்ளன.''—என்றெல்லாம் வன்னியின் பல இடங்களின் பெயர்களையும் குறிப்பிட்டு வரதராஜப்பெருமாள் கொடுத்த 'கயிற்றை' வாங்கித் தின்று கொண்டு இந்திய செய்தி ஸ்தாபனங்களும், அவற்றைப் பின்பற்றி கொழும்புப் பத்திரிகைகளும் விழுந்தடித்துக் கொண்டு செய்திகளை வெளியிட்டன.

இந்தக் கயிற்றைத் தின்பதற்கு மறுத்து விட்டதால் அவ்வேளை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'உதயன்' உட்பட உள்ளூர் தமிழ்ப் பத்திரிகைகள் இந்தியப் படையினதும், வரதராஜப்பொருமாள் அணியினதும் கோபாவேசத்துக்கு ஆளானதும்—

அதனால் இந்தப்பத்திரிகைகளைத் தடை செய்து, அவற்றின் பணிமனைகளில் இருந்த மூலப்பொருள்களை வலுக்கட்டாயமாக அபகரித்தும், ஊழியர்களைக் கடத்தியும் கொண்டு போய்




புதிய பத்திரிகை ஒன்றை வரதராஜப்பெருமாள் சார்பு அணியினர் வெளியிட்டதும்—

பின்னர் நடந்த நிகழ்ச்சிகள்.

இந்தச் சம்பவங்கள் நடந்து சில மாதங்கள் கழிந்த பின்னர் — இந்தியப் படை நாட்டை விட்டு வெளியேறிய கையோடு யாழ்ப்பாணம் நாவலர் வீதிக்கு அண்மையில், தற்போது யாழ்.கல்வித் திணைக்களத்தின் வலயம் — I அலுவலகம் இயங்கும் வீட்டில், இந்தப் பத்தி எழுத்தாளர் உட்பட சில பத்திரிகையாளர்களை பிரபாகரன் சந்தித்தார்.

அவருடன் மாத்தையா, யோகி போன்ற புலிகளின் அப்போதைய தலைவர்களும் உடனிருந்தனர்.

அப்போது, தமக்கு அருகில் உட்கார்ந்திருந்த மாத்தையாவைச் சுட்டிக் காட்டி ''இதோ என்னைச் சுட்டதாக நீங்கள் குறிப்பிட்ட மாத்தையாவும் இறந்து போனதாக நீங்கள் கூறிய நானும் (பிரபாகரனும்) அருகருகே இருக்கின்றோம். சந்தேகம் தீர்ந்ததா?'' —என்று பத்திரிகையாளரைப் பார்த்துக் கேட்டார் பிரபாகரன்.

பின்னாளில் பிரபாகரனின் உத்தரவின்பேரில்மாத்தையா கைது செய்யப்பட்டு, அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு, அது நிறைவேற்றப்பட்ட சூழ்நிலை உருவானது வேறு விடயம்.

ஆனால் இவ்வாரம் அரச சார்பு தொடர்பு சாதனங்கள் வெளியிட்ட மேற்படி செய்தி இந்தச் சம்பவங்களைத்தான் நினைவுபடுத்தின.

தமது முதலாம், இரண்டாம் 'செய் அல்லது செத்துமடி' நடவடிக்கைகள் மூலம் வன்னிக்குள் ஸ்ரீலங்காப் படைகளின் படை நகர்வைத் தடுத்து நிறுத்தும் வகையில் பிரபாகரன் நடத்திக் காட்டியுள்ள துணிச்சலான பாய்ச்சல்கள், நாட்டை விட்டு ஓட நினைக்கும் ஒரு கெரில்லாத் தலைவரின் செயற்பாடுகளைக் காட்டவில்லை. உள்ள வரை அழித்தொழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் ஓர் ஆயுத அணித் தலைவரின் வேகத்தையே காட்டுகின்றன என்கின்றார் ஓர் இராணுவ ஆய்வாளர்.

### வன்னிக் களம்

'வெற்றி உறுதி' படை நடவடிக்கையை ஆரம்பித்து வவுனியா — கிளிநொச்சிப் பாதையை இணைக்க முயன்ற படைகளை தாண்டிக் குளத்திலும் ஓமந்தைக்கு அப்பால் பெரியமடுவிலும் ஊடுருவித் தாக்கி அந்த நடவடிக்கைகளை இடைநிறுத்த வைத்துவிட்டனர் புலிகள்.

'வெற்றி உறுதி' நடவடிக்கை ஆரம்பித்து இன்றுடன் இரண்டு மாதங்கள் பூர்த்தியாகுகின்றன.

இந்த இரண்டு மாத காலத்தில் சுமார் 16 கிலோ மீற்றர் தூரமே படைகளால் முன்னேற முடிந்தது. அதாவது ஒரு மோட்டார் வாகனத்தில் சாதாரண வேகத்தில் போனால் 15 நிமிடத்தில் கடக்கக் கூடிய தூரத்தை இருபதாயிரம் படைகள் அறுபது நாள்களில் 'இட்ட அடி நோக, எடுத்த அடியில் குண்டு வெடிக்க' கடந்து கொண்டிருக்கின்றன.

தற்போது புளியங்குளத்துக்கு சுமார் ஒரு கிலோ மீற்றர் முன்னால் வரை படைகள் முன்னேறியிருக்கின்றன.

அதாவது அரச படைகள் தமது முழு வளத்தையும், பலத்தையும் திரட்டி —

இராணுவத்துக்கு மேலதிகமாக கடற்படை, விமானப் படைத் துருப்புகளையும் பொலீஸாரையும் தரைத் துருப்புக்களாகக் களத்தில் இறக்கி —

பாரிய ஆட்லறிகள், யுத்த டாங்கிகள், குண்டு வீச்சு

## பாசுபதுன்

ஜெட்டுகள், ஹெலிக்கொப்டர்கள் சகிதம் —

பெருத்த எடுப்பில் ஆரம்பித்திருக்ம் ட படை நடவடிக்கை இரண்டு மாத காலத்தில் கால்வாசித் தூரத்தைக் கடந்த நிலையில் இழுத்துப் பறித்துக் கொண்டு நிற்கின்றது.

படையினரிடமிருந்து கைப்பற்றிய ஆட்லறிகள், ஷெல்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி படையினரையே திருப்பித் தாக்கி வருகின்றார்கள் புலிகள்.

இதனால் 'உண்மை வெற்றி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள— முன்னரங்க பாதுகாப்பு நிலைகளில் உள்ள— துருப்புக்கள் பாதுகாப்பான நிலைகளில் பதுங்கியிருந்து கொண்டு, மேலிடத்தின் அடுத்த கட்ட நகர்வுக்கான உத்தரவை எதிர்பார்த்துக் காத்த வண்ணம் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

''பிரபாகரன் நாட்டை விட்டு ஓட முயற்சிப்பதாக'' அரச தகவல் தொடர்பு சாதனங்கள் செய்திகளை வெளியிட—

இராணுவத்தின் உளவுப் பிரிவின் உயர்பீடம் வேறு விதமாகத் தகவல் வெளியிடுகின்றது.

''செய் அல்லது செத்துமடி'' தொடர் தாக்குதலின் மூன்றாவது பாய்ச்சலை மேற்கொள்வதற்கு புலிகளின் தலைவர் தயாராகி வருவதாக அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஈழத் தமிழர்களின் கடந்த 15 வருட ஆயுதப் போராட்டத்தில் ஜூலை மாதம் மிக முக்கியமானது. பல சம்பவங்களைக் கொண்ட (தனிச் செய்தி பார்க்க) இந்தக் கறுப்பு ஜூலையில் தனது மூன்றாவது பாய்ச்சலை 'வெற்றி உறுதி' நடவடிக்கைத் துருப்புகள் மீது பிரபாகரன் மேற்கொள்ளக்கூடும் எனக் கருதப்படுகின்றது.

வவுனியாவிலிருந்து ஓமந்தை ஊடாக முன்னேறிய 55 ஆவது படையணியின் மேற்கு சேனைப் பக்கமாக அதன் தலைப்பகுதி மீது —

அல்லது வெலிஓயாவில் இருந்து நெடுங்கேணி வழியாக முன்னேறிய 53 ஆவது படையணியின் வால் பகுதி மீது—

புலிகளின் மூன்றாவது பாய்ச்சால் இடம் பெறலாம் என இராணுவ உளவுப் பிரிவு வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

புளியங்குளத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் நிலை கொண்டுள்ள படைகள் புளியங்குளத்தைக் கைப்பற்றினால் அப்படைகள் மீது மிகப்பெரும் தாக்குதலை நடத்துவதற்கான வியூகங்களைப் புலிகள் வகுத்திருப்பதாக வேறு சில செய்திகள் தெரிவித்தன.

புளியங்குளத்தை அண்டி, பாரிய பதுங்கு குழிகளையும், தரைக் கால்வாய் ஊடாக நகரக்கூடிய பல பாதைகளையும் திட்டமிட்டுப் புலிகள் அமைத்திருப்பதாகத் தெரிகின்றது.

எனவே இதுவரை சந்தித்த புலிகளின் எதிர்ப்பை விட பல மடங்கு எதிர்ப்பை புளியங்குளத்திற்கு அப்பால் படையினர் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் கூறப்படுகின்றது.

### புலிகளுக்கு சாதகமான நிலை

★ படையினரிடமிருந்து அண்மையில் பெரிய அளவில் அள்ளிச் சென்ற ஆட்லறிகள், ஷெல்கள், வெடிமருந்துகள் போன்றவை புலிகள் வசம் உள்ளன. இவற்றுடன் சேர்த்து, ஆயுதங்களை பற்றி சிந்திக்காமலேயே மோதக் கூடிய அளவுக்கு புலிகளிடம் ஆயுதக் கையிருப்பு உள்ளது. ஏ. கே. 47, ரி. 56 போன்ற ஆயுதங்கள், ரவைகள் புலிகளிடம் ஆள்பலத்தை விட அதிகம் உள்ளனவாம்.

★ 'செய் அல்லது செத்துமடி' இரண்டு கட்ட நடவடிக்கைகள் மூலம் புலிகளின் மனோபலம் உயர்ந்திருக்கின்றது; 'வெற்றி உறுதி' நடவடிக்கைத் துருப்புக்களின் மனோபலம் வீழ்ச்சியடைந்துள்ளது.

★ இது தவிர, வன்னி நிலப்பரப்பை அங்குலம் அங்குலமாக புலிகள் அறிந்து வைத்துள்ளனர்.

இந்தக் காரணங்களினால் வன்னி களநிலைமை இப்போது புலிகளுக்குச் சாதகமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, கிளிநொச்சியில் நிலை கொண்டுள்ள படையினர் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என படை வட்டாரங்கள் எதிர்பார்ப்பதாக மற்றொரு செய்தி கூறுகின்றது.

கிளிநொச்சியில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகளை ஊடுருவி உளவு அறிய முற்பட்ட புலிகள் இயக்கத்தினர் இருபத்தி ஐந்து பேர் வரை இதுவரை படையினரால் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் —

இதனால் புலிகளின் அடுத்த தாக்குதல் இலக்காக கிளிநொச்சி இருக்கக் கூடும் என்றும் —

அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எது, எப்படி என்றாலும் 'செய் அல்லது செத்துமடி' நடவடிக்கையின் மூன்றாவது பாய்ச்சலை கறுப்பு ஜூலையில் மேற்கொள்ள புலிகள் தயாராகின்றனர் என்பது ஓரளவு தெளிவானது. இலக்கு எது என்பதுதான் தெரியவில்லை.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்பு ஜூலையில் நிகழ்ந்தவை

★ 1983 ஜூலை 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இடம் பெற்ற முதலாவது கண்ணிவெடிச் சம்பவத்தில் 13 இராணுவத்தினர் உயிரிழந்தனர். அதனைத் தொடர்ந்து தென்னிலங்கையில் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள், கலவரங்கள் காரணமாக நூற்றுக்கணக்கில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர்; பல கோடி ரூபா பெறுமதியான அவர்களின் சொத்துக்கள், உடைமைகள், கொள்ளையிடப்பட்டன; நாசமாக்கப்பட்டன; ஜூலைக் கலவரத்தை அடுத்த ஈழத் தமிழர்கள் மத்தியில் எழுந்த ஆவேசம் தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தின் பேரெழுச்சியாகப் பரிணமித்தது.

★ வடமராட்சிப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்ட 'ஒப்பரேஷன் லிபரேஷன்' நடவடிக்கைக்கு எதிராக முதல் கரும்புலித் தாக்குதல் 1987 ஜூலை 5 ஆம் திகதி இடம்பெற்றது.

★ 1989 ஜூலை 13 ஆம் திகதி புலிகளினால் கொழும்பில் வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம், மற்றும் யோகேஸ்வரன் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர். மூன்று நாள்கள் கழித்துக் கொழும்பில் 'புளொட்' தலைவர் உமா மகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1993 ஜூலை 23 ஆம் திகதி மணலாறில் உள்ள ஜானகபுர படைமுகாம் மீது புலிகள் பெரும் தாக்குதல் நடத்தினர்.

★ 1995 ஜூலை 9 ஆம் திகதி வலிகாமத்தில் 'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையை அரசுப் படைகள் ஆரம்பித்தன. அதை முறியடிக்க ஜூலை 14 ஆம் திகதி 'புலிப் பாய்ச்சல்' நடவடிக்கையைப் புலிகள் மேற்கொண்டு வெற்றி கண்டனர்; ஆர்ஜென்ரீனத் தயாரிப்பான புக்காரா குண்டு வீச்சு விமானம் ஒன்றும் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

மூன்று நாள்கள் கழித்து காங்கேசன் துறை துறைமுகத்துக்கு வெளியே கடற் கரும்புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் கடற்படையின் கட்டளைக் கப்பலான 'எடித்ரா' மூழ்கடிக்கப்பட்டது.

ஆனால் ஜூலை 28 ஆம் திகதி மணலாறு தொடர் காவலரண்களை அழிக்கப் புலிகள் எடுத்த பெரு முயற்சி அரசுப் படைகளால் முறியடிக்கப்பட்டது; இருநூற்றுக்கும் அதிக புலிகள் உயிரிழந்தனர்.

★ 1996 ஜூலையில் பல சம்பவங்கள் இடம் பெற்றன.

1996 ஜூலை 4ஆம் திகதி யாழ்.ஸ்ரான்லி வீதியில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் உயிருக்குக் குறி வைத்துத் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. அவர் தப்பினார். ஆனால் யாழ். நகரக் கமாண்டர் பிரிகேடியர் ஆனந்த ஹாமாங்கொட, ஓய்வு பெற்ற சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் காலைல் டயஸ் உட்படப் பலர் கொல்லப்பட்டனர்.

இலங்கையின் இராணுவ வரலாற்றில் மிகப் பெரிய இராணுவ இழப்பான முல்லைத்தீவு இராணுவ முகாம் தகர்ப்பு 1996 ஜூலை 17 ஆம் திகதி இடம்பெற்றது. அங்கிருந்த சுமார் ஆயிரத்து 300 படையினரும் உயிரிழந்தனர். பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் புலிகளால் அள்ளிச் செல்லப்பட்டன.

ஜூலை 19 ஆம் திகதி கடற்படைக் கப்பலான 'ரணவிரு' புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.

ஜூலை 24 ஆம் திகதி தெஹிவளை ரயில் நிலையத்துக்கு அருகில் கொழும்பு—அளுத் கம [illegible] அறுபது பேர் கொலையுண்டனர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'செய் அல்லது செத்துமடி!'....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### தாக்குதல் இரகசியமாக

சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இதே கறுப்பு ஜூலையில் மணலாறு (வெலிஓயா) முகாம் மீது புலிகள் தொடுத்த பெரும் தாக்குதல் புலிகளுக்கு பாரிய தோல்வியில் முடிந்தது. தாக்குதல் திட்டம் பற்றிய தகவல் படையினருக்குக் கசிந்ததே அத்தோல்விக்குக் காரணம் என்பது புலிகளுக்கு நன்கு தெரியும்.

இந்த அனுபவம் காரணமாக இப்போதைய பெரும் தாக்குதல்கள் பற்றிய திட்டங்கள் முக்கிய தளபதிகள் தவிர வேறு எவருக்கும் முன்கூட்டியே தெரிவிக்கப்படுவதில்லையாம்.

வன்னியில் தாண்டிக்குளம் மற்றும் பெரியமடு ஊடறுப்புத் தாக்குதல்களும் இறுதி நேரம் வரை இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்ததாம். தாக்குதலுக்கு சில மணி நேரத்துக்கு முன்புதான் தாக்குதலில் பங்கு பற்றிய புலிகளுக்கு வரைபட விளக்கம் கொடுக்கப்பட்டது.

தாண்டிக்குளம் ஊடறுப்புத் தாக்குதலுக்கு, தாக்குதல் ஆரம்பிக்க சில மணி நேரத்துக்கு முன்புதான்—இறுதி நேரத்தில்தான் —வவுனியா மேற்குப் புறமிருந்து இருபது பஸ்களில் புலிகளின் தாக்குதல் அணிகள் கொண்டு வந்து இறக்கப்பட்டன.

தற்போதைய நிலையில் பல திசைகளிலும் உளவறியும் புலிகள் அனுப்பப்படுகின்றனர். இறுதித் தாக்குதல் இலக்கை பிரபாகரனே தீர்மானித்து திட்டம் வகுக்கின்றார். அத்திட்டங்கள் மிக இரகசியமாக வைக்கப்படுகின்றன.

இதனால் புலிகளின் தலைமைப் பீடத்தின் திட்டங்கள், நோக்கங்கள் தொடர்பாக முன்கூட்டியே தகவல்களைப் பெறமுடியாமல் படை வட்டாரங்கள் தவிப்பதாகவும்—

படையினர் இராணுவ வெற்றிகளைப் பெறுவதற்கு இந்த வசதியீனம் பெரும் இடையூறாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

### தங்கத்துரை படுகொலை

கடந்த வாரம் பரபரப்பை ஏற்படுத்திய செய்திகளில் ஒன்று திருகோணமலை மாவட்ட எம். பியான அ. தங்கத்துரையின் படுகொலைச் சம்பவம்.

கூட்டணியின் தற்போதைய ஐந்து எம். பிக்களில் ஜோசப் பரராஜசிங்கம், கே. துரைராஜசிங்கம், பி. செல்வராஜா போன்றோர் புலிகளின் அனுதாபிகள் என்றும் —

நீலன் திருச்செல்வம், தங்கத்துரை போன்றோர் மறு பக்கத்தில் உள்ளவர்கள் என்றும் —

பொதுவான அபிப்பிராயம் நிலவுவது தெரிந்ததே.

திருகோணமலை மாவட்டத்தில் கூட்டணிக்குள் தங்கத்துரைக்கு நிகரான தலைவராக இருக்கும் இரா. சம்பந்தரும் புலிகளுக்கு அனுதாபமான போக்கைக் கடைப்பிடிப்பவர் என்று கருதப்படுகின்றது.

இந்தக் காரணத்தினாலும் —

கரும்புலிகள் தினத்தன்று தங்கத்துரை படுகொலை செய்யப்பட்டதாலும் —


புலிகளே இந்தப் படுகொலையைப் புரிந்ததாக அரசு சார்ந்த செய்தி நிறுவனங்கள் சில உடனடியாக அறிவித்ததாலும் —

பொதுவாக இக் கொலைக்குப் புலிகளே காரணம் என்ற அபிப்பிராயம் மக்கள் மத்தியில் பரவியது.

இப் படுகொலைக்கும் தங்களுக்கும் சம்பந்தம் ஏதுமில்லை என்று புலிகளின் சில வட்டாரங்கள் மறுத்த போதிலும் ஆரம்பத்தில் அது மக்கள் மத்தியில் எடுபடவில்லை.

எனினும் திருகோணமலைத் தமிழ் மக்களில் பெரும்பான்மையானோர் இப்படுகொலைச் சம்பவத்துக்குப் புலிகளுடன் முடிச்சுப் போட்டுப் பார்க்கவில்லை. உள்ளூர் அணிகளின் வேலையாகவே இது இருக்கும் என்று அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

அவர்களின் கருத்து உண்மை என்ற சாரப்பட செய்திகள் இப்போது வெளியாகிக்கொண்டிருக்கின்றன. எனினும் கொலைக்கான நோக்கம் (Motive) என்னவென்பது இன்னும் வெளி



தங்கத்துரை

யாகாதவரை எது உண்மை, எது பொய் என்பதை இப்போதைக்குக் கூறமுடியாது.

என்றாலும் உள்ளூர் அணிகளே இக்கொலையைச் செய்தன என்ற சாரப்பட பொலீஸ் தரப்பினால் கசிய விடப்படும் செய்திகளை நம்ப முடியாது என்று குறிப்பிட்டார் திருகோணமலைப் பிரமுகர் ஒருவர்.

திருமலை நகருக்குள் ஊடுருவி, எம். பி. ஒருவர் மீது கிரனேட் வீசி, வேட்டுக்களையும் தீர்த்து, அவரைக் கொலை செய்துவிட்டு, புலிகள் தப்பிச் சென்றுவிட்டார்கள் என்ற நிலை உருவாகுமானால் —

அதன் பின்னர் நகரின் பாதுகாப்பே கேள்விக் குறி என்ற பதற்ற நிலை உருவாகும். நகரின் வழமை நிலை — மாகாணசபை நிர்வாகம் — போன்றவை பாதிக்கப்படும். இதன் காரணமாகப் புலிகளின்றி வேறு உள்ளூர் அணிகளே இத்தாக்குதலை நடத்தியுள்ளன என்று மக்களை நம்ப வைக்கவேண்டிய தேவை பாதுகாப்புத் தரப்புக்கு உள்ளது. எனவே அப்பாவிகளான உள்ளூர் வாசிகள் சிலரைப் பிடித்து, குற்றத்தை அவர்கள் மீது சுமத்தி, நிலைமையைச் சமாளிக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கலாம் என்கிறார் அந்தப் பிரமுகர்.

இதே வேளை முன்பு நடந்த லலித் அத்துலத்முதலி கொலைச் சம்பவத்தை அடுத்து அடுத்த நாள் காலையில் சயனைட் அருந்திய நிலையில் தமிழர் ஒருவரின் சடலம் அப்பகுதியில் கிடக்கக் காணப்பட்டதையும் —

அதன் மூலம் லலித் கொலையை அந்த நபரே செய்தார் என்று திசை திருப்பும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதையும் —

அந்தத் திருமலைப் பிரமுகர் சுட்டிக்காட்டினார்.

கொலைக்கு யார் காரணம் என்பது போகப் போகத்தான் தெரிய வரும். சில சமயங்களில் வெளியே தெரிய வராமலும் போகலாம்.

### அடிக்கடி வரும் அமெ. ஜெனரல்கள்

அமெரிக்காவின் உயர்பாதுகாப்பு அமைப்பான பென்ரகனில் இருந்து ஜெனரல்களும்—

அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் கட்டளைப் பீடம், பசுபிக் விசேட நடவடிக்கைக் கட்டளைப் பீடம் ஆகியவற்றிலிருந்து உயரதிகாரிகளும்—

அடிக்கடி கொழும்புக்கு வந்து பேச்சு நடத்திவிட்டுச் செல்கின்றார்கள். அதன் பின்னணி என்ன? அடுத்து வரும் மாதங்களில் விடயங்கள் அம்பலத்துக்குக் வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் சில முன்னோட்டத் தவளைகள் — அவை ஊர்ஜிதப்படுத்தப்பட்டால் —அடுத்த வார சமர்க்களத்தில் பார்ப்போம்.

### கடத்தப்படும் கப்பல்கள்

தனியாருக்குச் சொந்தமான 'மிஷன்' பயணிகள் கப்பலையும், 'மொரங்பொங்' சரக்குக் கப்பலையும் புலிகள் கடத்தியுள்ளனர்.

இதில் 'மிஷன்' புலிகளால் எரிக்கப்பட்டது; மற்றைய சரக்குக்கப்பல் கிழக்கில் அலம்பில் கடற்பகுதியில் தரித்து நிற்கின்றது.

'மிஷன்' கப்பலிலிருந்த இரு இந்தோனேஷிய மாலுமிகளும் விடுவிக்கப்பட்டு விட்டனர். இலங்கையைச் சேர்ந்த எஞ்சிய சிப்பந்திகள் ஏழு பேரும் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

வடகொரியாவைச் சேர்ந்த 'மொரங் பொங்' சரக்குக் கப்பலில் இருந்த 38 வடகொரியச் சிப்பந்திகளில் புலிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த ஒருவரின் சடலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் புலிகளால் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. எஞ்சிய மாலுமிகள் எந்நேரமும் விடுவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

கப்பல் கடத்தல் சம்பவங்களால் வடக்கிற்கான பொருள்களைத் தருவிக்கும் பணியும், பயணிகள் கப்பல் சேவையும் பாதிப்புற்றுள்ளன.

இந்த நடவடிக்கை மூலம் வடக்கு கிழக்குக் கடலில் சேவையில் ஈடுபடும்— செஞ்சிலுவைக் கொடிபறக்காத— அனைத்துக் கப்பல்களுக்கும் கடற்படைப் பாதுகாப்பை கட்டாயம் வழங்கவேண்டிய ஒரு நிலையைப் புலிகள் உருவாக்கியிருக்கின்றார்கள்.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம்—

கடற்படைக்கு வலிமைக்கு அதிக கடமைப் பளுவைச் சுமத்தி, கடற்படையினரை பரவலாக கடலில் அலைய வைத்து, அதன் மூலம் அவர்களைத் தாக்கி அழிப்பதற்கான வாய்ப்பை அதிகரிக்கலாம் என்று புலிகள் கருதியிருக்கக் கூடும்.

புலிகளின் திட்டத்தை முறியடிக்க அரசு என்னசெய்யப் போகின்றது என்பது அடுத்த வாரம் தெரியவரும் என எதிர்பார்க்கலாம்.

### கூரே விவகாரம்

'கடைசியாகக் கோணிப் பைக்குள் இருந்த பூனை வெளியே வந்துவிட்டது.

தடுப்புக் காவலில் இருக்கும் முன்னாள் அமைச்சர்



கூரே

சிறிசேன கூரேக்கு எதிரான குற்றச் சாட்டுக்களின் விவரங்களைத்தான் இப்படிக் கூறுகின்றோம்.

ஆனால் அது நிஜப் பூனையா அல்லது வெறும் பொம்மையா என்பதை நீதிமன்றம்தான் தீர்மானிக்க [illegible]

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நித்தம்புவ

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடி அரங்கு

கல்வித் திணைக்களத்தின் மூத்த அதிகாரியின் மனைவியான ஆசிரியை ஒருத்தியை யாழ்ப்பாணத்தின் மூத்தமகளிர் கல்லூரி ஒன்றுக்கு திடீர் இடமாற்றம் செய்ததன் மூலம், 'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த வேலையை' கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக கடந்த 17 ஆம் திகதி உதயனின் அதிரடி அரங்கில் குறிப்பிட்டிருந்தோம்.

சங்கைத் தொடர்ந்து ஊதிக் கெடுக்கும் வேலைக்கு முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது போல் தெரிகின்றது; அந்த ஆசிரியை மீண்டும் பழைய இடத்துக்கு அனுப்பப்பட்டு விட்டார்.

இது விடயத்தில் இழுத்தடித்த பின்னரேனும்— ஊர்ப் பற்றைத் துறந்து— உரிய நடவடிக்கை எடுத்த ராஜாவுக்கும் அதற்குத் தடைபோடாமல் ஒத்துழைத்த அவரின் ராஜ மந்திரிக்கும் பாராட்டுக்கள்.

சம்பந்தப்பட்ட பாடசாலை நிர்வாகமும், சமூகமும் நடந்ததை மறந்து இரத்தினக் கம்பளம் விரித்து ராஜாவை வரவேற்கும் என எதிர்பார்க்கலாம்.

★ ★ ★

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வீதிகள் எல்லாம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு குண்டும் குழியுமாகிக் கிடக்கின்றன. வாகனங்கள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் பள்ளந் திட்டிகளில் விழுந்து விழுந்து எழும்புவதால் பயணம் செய்பவர்களுக்கும் பாதிப்பு; வாகனங்களுக்கும் பாதிப்பு.

இந்தச் சிக்கலிலிருந்து தப்புவதற்காக யாழ்ப்பாணத்தில் சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரை தமது சைக்கிள்களை, மோட்டார் சைக்கிள்களை, 'சர்க்கஸ்' வித்தைக்காரனுக்கு நிகராக பள்ளம், திட்டிகளுக்கு வெட்டி ஓடும் லாவகத்தை வீதிகளில் நின்று வைத்த கண்வாங்காமல் ரசித்துப் பார்த்துக் கொண்டு நிற்கலாம்.

அவர்களுக்கு இப்போது சில எதிரிகள் யாழ்ப்பாணத்தில் முளைத்திருக்கின்றார்கள்.

தார் வீதியில் பெருங் கிடங்குகள் காணப்படுவதால் சில இடங்களில் வீதியில் தார் போட்ட பகுதிகளைத் தவிர்த்து அதை அண்டியுள்ள மண் பாதை வழியாக சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் செல்லுவது வழமை. அத்தகைய இடங்களில் உள்ள சில வீட்டுக்காரர்கள் தமது கேற்றுக்கு முன்னால் — வீதியில் உள்ள தரைப்பகுதிக்குக் குறுக்காக — வீதியின் தார்ப்பகுதி வரை— பெரிய கற்களை வரிசையாக அடுக்கி வைத்திருக்கின்றார்கள். அதாவது தமது வீட்டுக்கு முன்னால் வீதியில் உள்ள தார்ப் பகுதி மட்டுமே பொதுச் சொத்து; அதன் வழியேதான் யாரும் பயணம் செய்யலாம். தார்ப்பகுதிக்கு வெளியேயுள்ள தரைப்பகுதி வீதியுடன் சேர்ந்ததல்ல; தங்களுக்குச் சொந்தமானது; அதன் வழியே எவரும் பயணம் செய்யக்கூடாது — என்று அவர்கள் நினைக்கின்றார்கள் போலும்.

தார் வீதியில் கிடக்கும் பள்ளத்துக்குப் பயந்து கரைக்கு வெட்டினாலோ அங்கு குறுக்காக் கிடக்கும் பெரிய கற்களுடன் முட்டி மோதி விழவேண்டியதுதான்.

வீதியில் சைக்கிளிலோ, வாகனத்திலோ செல்பவர் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் வேகத்தைத் தணித்து, அந்த வீடுகளுக்குள் இருந்து ஆள்கள் யாரேனும் வீதிக்குள் நுழைகின்றார்களா என்று பார்த்து, அவர்களுக்கு இடம் விட்டு, வாகனத்தைச் செலுத்த முடியாது. வீட்டுக்குள் இருந்து வருபவர்கள் தான் தமது கேற்றுக்கு வெளியே வரமுன்னர் வீதியில் ஏதும் குறுக்காக வருகின்றதா என்பதைத் பார்த்து வீதிக்குள் பிரவேசிக்க வேண்டும். அதை விடுத்து வீதிக்குக் குறுக்கே கல் அடுக்குவது வெறும் சுயநலமியின் வேலை என்றே கருத வேண்டும்.

உதாரணத்துக்கு நாவலர் வீதியில் ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில் இவ்வாறு கல் அடுக்கி சாதனை புரிந்துள்ள வீட்டைக் காணலாம்.

சில காலத்துக்கு முன்னர் வீதிகளின் இரு மருங்கிலும் — ஒழுங்கைகள், வீட்டு வாசல்கள் போன்றவற்றுக்குக் குறுக்காவும் — வாய்க்கால்களை வெட்டி மக்களின் எரிச்சலை வாங்கிக் கட்டிக்கொண்ட மாநகரசபை அதிகாரிகள், ஊழியர்களின் கண்களில் இத்தகைய குறுக்கு வேலைகள் மட்டும் படாமல் இருப்பது ஏனோ?

சம்பந்தப்பட்ட வீட்டுக்காரர்கள் வீதிக்கரையோரத்தை விலைக்கு வாங்கி விட்டார்களா?

★ ★ ★

கப்பல் சேவை தடைப்பட்டு இரண்டு நாள்களுக்குள் ஏதோ இரண்டு மாதமாகப் பொருள் விநியோகம் இல்லாத மாதிரி சந்தையில் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு.

ஒரு புறம் வியாபாரிகளின் பதுக்கல். மறுபுறம் தட்டுப்பாட்டுக்குப் பயந்து முன்கூட்டியே விழுந்தடித்து வாங்கிக் குவிக்கும் பொது மக்களின் அளவுக்கு கூடுதலான— தேவைக்கு மிஞ்சிய — அவா.

இரண்டும் சேர்ந்து படையினரும் பெரும்பான்மை இனத்தவரும் உலகத்தவரும் எம்மைப் பார்த்துச் சிரிக்க வைக்கும் அவலத்தைத் தோற்றுவித்து விட்டன.

'திருடனாகப் பார்த்துத் திருந்த வேண்டும்' என்று சொல்லுவார்கள். அதைப் போல பல வருடங்களாகப் பதுக்கல் மூலம் சம்பாதித்துப் பழகிய வியாபாரிகளும், பதுக்கல் பாதிப்பை எதிர்கொள்வதற்காக பொருள்களை விழுந்தடித்து வாங்கிக் குவித்து, பதுக்கலையும், விலை உயர்வையும் ஊக்குவித்துப் பழகிவிட்ட எமது சமூகமும் தானாகத் திருந்தினால்தான் உண்டு. சட்டத்தினால் — அதிகாரிகளால் — திருத்த முடியுமா என்பது கேள்விக் குறியே.

சமூகம் எக்கேடு கேட்டாலும் நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி 'எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்' என்ற மாதிரி நெருக்கடியில் சிக்கிய சமூகத்திடமிருந்து பிடுங்க முடிந்ததைப் பிடுங்கிக் கொள்வோம் என்று சிந்திக்கும் மனோபாவம் நமது வர்த்தகர்களிடமிருந்து ஒழியவேண்டும். அப்போதுதான் சமூகம் உருப்படும்.

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநபர் சுகாதாரத்தைப் பேணுவது தொற்று நோய்த் தடுப்புக்கு அவசியம்

**கடந்த திங்கட்கிழமை முதல் நாளை வரை இவ்வருடத்துக்கான சுகாதார வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இவ்வருடத்திற்கான தொனிப்பொருள் "தலையெடுக்கும் தொற்று நோய்களும் அதற்கான உலகளாவிய அவதானமும் எதிர் நடவடிக்கைகளும்" என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது தெரிந்ததே. அந்தத் தொனிப்பொருளின் அடிப்படையில் வரையப்பட்ட கட்டுரை இது.**

மனிதருக்கு உண்டாகும் நோய்களை தொற்றும் தன்மையுள்ளவை, தொற்றும் தன்மையற்றவை என இரு வகைகளாகப் பிரிக்கலாம். வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல், கசம், குடற்புழு வியாதிகள் போன்றவை சில தொற்றும் நோய்கள். மாரடைப்பு, சலரோகம், அதி குருதி அமுக்கம் போன்றவை சில தொற்றா நோய்கள்.

தொற்று நோய்கள் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு தொற்றும் தன்மை உள்ளவை. தொற்றுக்கு காரணியாக அமைவது பெரும்பாலும் நுண்ணுயிர்க் கிருமிகளே. தொற்று நோய்களை உண்டாக்கும் காரணிகளை பொதுவாக கீழ் வருமாறு வகைப்படுத்தலாம்.

★ **வைரசுகள்:-** பொக்களிப்பான், செங்கமாரி, எய்ட்ஸ் முதலிய நோய்களை உண்டாக்குவன.

★ **பற்றீரியங்கள்:-** நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம் முதலிய நோய்களை உண்டாக்குவன.

★ **பங்கசுகள்:-** பல வித சரும நோய்களை உண்டாக்குவன.

★ **ஒருகல அங்கிகள்:-** வயிற்றுளைவு, மலேரியா முதலிய நோய்களை உண்டாக்குவன.

★ **புழுவகைகள்:-** வட்டப்புழு, கொழுக்கிப் புழு, தானப்புழு, யானைக் கால் நோய் முதலிய நோய்களை உண்டாக்குவன.

மேற்குறிப்பிட்ட நோய்க் காரணிகள், ஒரு தேக்கத்தில் (Reservoir) இருக்கும், இந்த தேக்கம் ஒரு நோயாளியாகவோ, நோயின் அறிகுறிகளை வெளிக்காட்டாத ஒரு நோய்க் காவியாகவோ (Carrier) இருக்கலாம்.

இந்தத் தேக்கத்திலிருந்து வெளியேறும் நுண்ணுயிர்க் கிருமிகள் சுற்றாடல் ஊடாக சுகதேகி ஒருவரை வந்தடையும். சுகதேகியின் உடலினுள் செல்லும் நுண்ணுயிர்க் கிருமி அவரின் போஷாக்கு நிலை, நோய் எதிர்ப்புச் சக்தி போன்றவற்றைப் பொறுத்து அவரின் உடலில் நிலை கொண்டு பெருகி அவரை நோயாளியாக்கும்; அல்லது அழித்து விடும்.

சமூகத்தில் நோய்க்கிருமிகளின் தேக்கம் இருக்கும் வரை, அந்த சமூகத்திலிருந்து நோய்களை அகற்ற முடியாது. முழுமையான சிகிச்சை எடுக்காத ஒவ்வொரு மலேரியா நோயாளியும், தொழு நோயாளியும், காச நோயாளியும், புழு வியாதி உள்ளவரும், குறிப்பிட்ட அந்தக் கிருமிகளின் தேக்கமாக அமைந்து, சமூகத்திலிருந்து அந்த நோய்களை அகற்ற முடியாதபடி செய்து வருகிறார்கள். வளர்ச்சி அடைந்த நாடுகளில், பல நோய்கள் அகற்றப்படக் கூடியதாக இருந்தமைக்கு, நோயாளிகள் இதை உணர்ந்து, தாமாக முன்வந்து முழுமையான சிகிச்சையைப் பெற்றது ஒரு முக்கிய காரணமாகும்.

ஒரு நோயாளியின் உடலிலிருந்து நுண்ணுயிர்க் கிருமிகள் பல வழிகளில் வெளியேறும். இக்கிருமிகள் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் வெளியேறி, ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் சுகதேகியைச் சென்றடையலாம். ஆனால் குறிப்பிட்ட ஒரு நோய்க்கிருமி சாதாரணமாக குறிப்பிட்ட வழிகளாலேயே வெளியேறி சுகதேகியைச் சென்றடையும்.

தடிமன், காசநோய், தொண்டை அழற்சி, பொக்களிப்பான், சின்னமுத்து போன்றவை சுவாசத் தொகுதியுடன் சம்பந்தப்பட்ட நோய்க் கிருமிகள். இவை சுவாசம் மூலமாகவோ, இருமி எடுக்கும் சளி மூலமாகவோ வெளியேறும். இந்த நுண்கிருமிகள் ஒருவருக்குள் இருந்து வெளியேறு மற்றவர் சுவாசிக்கும் காற்றி மூலம் உட்செல்லலாம். நோய் பரவும் தன்மை, ஒவ்வொரு நுண்கிருமியும் உடலிற்கு வெளியே வாழக்கூடிய சக்தியையும், சூழலின் தன்மையையும் பொறுத்தது. தடிமன், சின்னமுத்து முதலிய நோய்களை உண்டாக்கும் வைரசுகள் உடலிற்கு வெளியே அதிக நேரம் உயிர் வாழ முடியாதவை. நோயாளியின் உடலிலிருந்து வெளியேறியதும் இன்னொருவரின் உடலினுள் செல்லாவிடில் உயிர் வாழ முடியாதவை. ஆகவே இத்தகைய நோய்கள், நோயாளியின் அருகில் சென்றால் மட்டுமே தொற்றும்.

ஆனால் காசநோயை உண்டாக்கும் பற்றீரியா, சூரிய ஒளி குறைந்த, ஈரலிப்புள்ள இடங்களில் பல நாள்களுக்கு வாழக்கூடியவை. ஆகவே காசநோயாளி ஒருவர் துப்புகின்ற சளியில் உள்ள பற்றீரியா, அதற்குச் சாதகமான சூழலில் பல நாள்கள் உயிருடன் வாழ்ந்து, தூசுடன் கலந்து, வீசும் காற்றினால் எடுத்துச் செல்லப்பட்டு, இன்னொருவர் சுவாசிக்கும் காற்றின் மூலம் அவரின் சுவாசப் பையினுள் சென்று நோயை உண்டாக்கும்,

வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல், வட்டப் புழு, கொழுக்கிப்புழு போன்ற நோய்களுக்குக் காரணியாக உள்ள நுண்கிருமிகள் (அல்லது குடல் புழுக்களின் முட்டைகள்) நோயாளியின் மலம் மூலம் வெளியேறுகின்றன. மல கூடத்துக்கு வெளியே மலம் கழிக்கப்பட்டால் அல்லது எறியப்பட்டால், அது மழைகாலங்களில் கழுவப்பட்டு கிணற்றில் உள்ள நீருடன் கலந்து விடும். ஈக்கள் மலத்தின் மீது இருந்து பின் உணவுகளின் மேல் இருப்பதால், மலத்திலுள்ள நுண்கிருமிகள் உணவை வந்தடைகின்றன. இந்த உணவையோ, நீரையோ அருந்துவதால், இக்கிருமிகள் குடலை வந்தடையும். சுத்தமான உணவைக் கழுவாத கையினால் உண்ணும் பொழுது கையிலுள்ள நோய்க்கிருமிகள் குடலினுள் செல்லும். குடலுடன் சம்பந்தப்பட்ட நோய்களை உண்டாக்கும் நுண்கிருமிகள் சுகதேகி ஒருவரின் குடலை வந்தடைவதற்கு இன்னும் பல வழிகள் உள்ளன.

தமிழர் செறிந்து வாழும் மாவட்டங்களில் உள்ள வீடுகளில் 50 வீதம்—அதாவது அரைவாசி வீடுகளில் மல கூடம் இல்லை. அவர்களின் மலம் எமது நிலத்தை, நோய்க்கிருமிகள் நிறைந்த நிலமாக மாற்றுகிறது. இந்த மண்ணில் விளையாடும் குழந்தைகளின் கைகளிலே ஏராளமான நுண்கிருமிகள் ஒட்டிக் கொள்கின்றன, கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவாது உணவை உண்ணும் பொழுது நுண்கிருமிகள் உணவுடன் குடலினுள் சென்று விடுகின்றன.

அசுத்தப்படுத் தப்பட்ட மண்ணில் நடக்கும் பொழுது நோய்க்கிருமிகள் பாதங்களில் ஒட்டிக்கொண்டு வீட்டுக்குள்ளேயும் வந்து சேரும். பின் மண்ணிலே விளையாடாத — வீட்டிற்குள்ளேயே தவழுகின்ற— குழந்தைகளின் கைகளிலேயும் இக்கிருமிகள் ஒட்டிக் கொண்டு குழந்தை கையையும், விரலையும் சூப்பும் பொழுது குடலினுள் சென்று வயிற்றோட்டத்தையும், வேறு குடலுடன் சம்பந்தப்பட்ட நோய்களையும் உண்டாக்கும்.

மலம் கழித்தபின் தங்களை சுத்தம் செய்கின்ற கைகளை சவர்க்காரம் போட்டுக் கழுவாவிட்டால், இந்நோய்க் கிருமிகள், கையிலே இருந்து அவர் தொட்ட இடமெல்லாம் பரவி மற்றவரின் உணவுடன் கலந்து, குடலினுள் சென்று நோயை உண்டாக்கும். குடலுடன் சம்பந்தப்பட்ட நோயுள்ளவர்களை பராமரிப்பவர்கள் (முக்கியமாக குழந்தைகளின் தாய்மார்) இந்த வகையிலேதான் வீட்டிலுள்ள மற்றவர்களுக்கு நோயைப் பரப்புகிறார்கள். நோயுள்ள ஒருவரைத் தொட்டபின் வேறு வேலை செய்வதற்கு முன் கைகளை சவர்க்காரம் போட்டு நன்கு கழுவுவது அவசியம்.

நெருப்புக்காய்ச்சல், கொலரா, வயிற்றோட்டம் முதலிய நோய்களை பரப்பும் நுண்கிருமிகள் நீரில் பல வாரங்கள் வாழ முடியும் என்பதையும் வட்டப்புழுவின் முட்டைகள் எமது சூழலில் 8 வருடங்கள் வரை அழியாது இருக்க முடியும் என்பதையும் நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

சிரங்கு, தேமல் போன்ற தோல் சம்பந்தப்பட்ட நோய்

**மலைஅரசி சிவராஜா**

கள் தொடுகை மூலம் பரவுவன. இப்படியான நோய்கள் பரவுவதற்கு நெருக்கமான உறவு அவசியம், சிரங்கு, தேமல் உள்ளோர் அணிந்த உடைகளை அணிவதாலும், அவர்களது படுக்கையைப் பயன்படுத்துவதாலும் இந்நோய்கள் தொற்றலாம்.

பாலியல் நோய்கள் (சிபிலிசு, எய்ட்ஸ் போன்றவை) பாலுறவு மூலமாகவும், தாயிலிருந்து கர்ப்பத்திலுள்ள சிசுவிற்கும் தொற்றும், நோயாளியைத் தொடுவதாலோ, அவர் உடைகளை அணிவதாலோ அல்லது அவர் படுத்த படுக்கையில் படுப்பதாலோ பாலியல் நோய்கள் பரவுவதில்லை. ஒருகர்ப்பவதிக்கு ரூபெல்லா, சிபிலிசு, எயிட்ஸ் போன்ற குறிப்பிட்ட சில நோய்கள் ஏற்பட்டால் அந்த நோய்க் கிருமிகள், கர்ப்பத்தில் உள்ள குழந்தையை பாதிக்கும். இப்படியான நோய் ஏற்பட்ட ஒரு தாய்க்குப் பிறக்கும் குழந்தைக்கு சில பிறப்புக் குறைபாடுகள் உண்டாகலாம்.

மலேரியா, யானைக்கால் நோய், மூளைக்காய்ச்சல் முதலிய நோய்கள் நுளம்புகளின் மூலம் பரப்பப்படுகின்றன. பெண் நுளம்புகளின் வயிற்றிலுள்ள முட்டைகள் முதிர்ச்சி அடைய குருதி தேவை. குருதியைத் தேடி பெண் நுளம்புகள் வீட்டினுள் வந்து மனிதரிடமிருந்து குருதியை உறிஞ்சும். நுளம்பினால் கடிபடுபவர் மலேரியா நோயாளியாயின் மலேரியா ஒட்டுண்ணிகள், உறிஞ்சப்படும் குருதியுடன் நுளம்பின் வயிற்றினுள் செல்லும். நுளம்பின் வயிற்றினுள் இந்த ஒட்டுண்ணிகள் வளர்ச்சி அடைந்து ஏழு எட்டு நாள்களின் பின் நுளம்பின் உமிழ்நீர் சுரப்பிகளை [illegible] இந்த நுளம்பு, கடிக்கும் ஒவ்வொருவரின் குருதிக்குள்ளும் மலேரியா ஒட்டுண்ணிகளைப் பாய்ச்சும்.

மலேரியா, யானைக்கால் நோய், மூளைக்காய்ச்சல் போன்ற நோய்கள் வெவ்வேறு வகையான நுளம்புகளால் பரப்பப்படுகின்றன. இந்த நுளம்புகள் பெருகும் இடங்களும் வேறுபடும். மலேரியா நோயைப் பரப்பும் நுளம்பு பெரும்பாலும் தெளிந்த நீரிலும், யானைக்கால் நோயைப் பரப்பும் நுளம்பு அசுத்தமான மலசல கூடக்குழி போன்ற இடங்களிலும், மூளைக்காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு நீருள்ள சிறு பாத்திரங்களிலும் பெருகுகின்றன. இந்நோய்கள் பரவாது தடுப்பதற்கு நுளம்புகள் பெருகாது தடுத்தல் ஒரு முக்கிய வழியாகும்.

சுகதேகி ஒருவரின் உடலினுள் நுண்கிருமிகள் உட்செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவருக்கு நோய் ஏற்படுவதில்லை. குறிப்பிட்ட தொகை நுண்கிருமிகள் உட்சென்றால் மாத்திரமே நோய் உண்டாகும். இத்தொகை நோய்க்கு நோய் வேறுபடும். மேலும், நோய் உண்டாவதற்கு சுகதேகியின் உடம்பில் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருத்தல் வேண்டும். போதுமான நோய் எதிர்ப்புச்சக்தி இருந்தால், உள்ளே செல்கின்ற நுண்கிருமிகள் அழிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நோய்க்கிருமிகளுக்கும் எதிராக உண்டாகும் எதிர்ப்புச்சக்தி வித்தியாசமாக இருக்கும். ஒருமுறை நோய்க் கிருமிகள் உடலினுள் சென்றால் அதற்கு எதிராக எதிர்ப்புச்சக்தி உண்டாகத் தொடங்கும். ஆனால் அந்த எதிர்ப்புச்சக்தி ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரமே இருக்கும். தடிமனை உண்டாக்கும் வைரசுக்கு எதிராக உற்பத்தி செய்யப்படும் எதிர்ப்புச்சக்தி சில நாள்களுக்கு மாத்திரமே இருக்கும். அதே சமயம், பொக்களிப்பான், சின்னமுத்து போன்ற நோய்களை உண்டாக்கும் வைரசுகளுக்கு எதிராக உற்பத்தி செய்யப்படும் எதிர்ப்புச் சக்தி பலவருடங்களுக்கு உடலில் இருக்கும்.

நோய் உண்டாகி ஏற்படும் எதிர்ப்புச் சக்தியைப்போன்ற எதிர்ப்புச்சக்தியை, செயற்கையாக தடுப்பு மருந்துகள் கொடுப்பதன் மூலம் உருவாக்கலாம். இவ்வகையில் தான் ஏற்பு, தொண்டைக்கரப்பான், குக்கல், சின்னமுத்து, போலியோ, கசம் போன்ற நோய்களுக்கு எதிராக தடுப்பு மருந்துகள் குழந்தைகளுக்கு சிகிச்சை நிலையங்களில் கொடுக்கப்படுகின்றன.

எய்ட்ஸ் நுண்கிருமி, ஏனைய நுண் கிருமிகளைவிட வித்தியாசமானது. இக்கிருமி எதிர்ப்புச் சக்தியை உண்டாக்கும் கலன்களை ஆக்கிரமித்து அவற்றை செயலிழக்கச் செய்கிறது. ஆகவே எய்ட்ஸ் நோயாளியின் உடலினுள், சாதாரண நுண் கிருமிகள் உட்சென்றாலும், அவற்றை எதிர்க்க முடியாது நோயாளி இறந்து விடுகிறார்.

எமது சமூகத்தின் பாரிய சுகாதாரப் பிரச்சினையாக இருப்பது தொற்றுநோய்கள். இவற்றை சமூகத்தில் இருந்து அகற்றுவதில், தடுப்பு மருந்துகளுடன், சுற்றாடல் சுகாதாரம், தனிநபர் சுகாதாரம் முதலியவற்றைப் பேணுவது மிக அவசியம். இதற்கு எங்கள் பழக்க வழக்கங்களில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டி இருக்கும்; கஷ்டமாகவும் இருக்கும்; எனினும் மனம் வைத்தால் இது முடியாததொன்றல்ல. மன மாற்றம் ஏற்படுவதற்கு அவசியமான சுகாதார அறிவை சமூகத்தில் வளர்ப்பது அத்தியாவசியமானதாகும். ★

## மண்வெட்டி விநியோகம்

உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் இன்று சனிக்கிழமை முழுநேர விவசாயிகளுக்கு மண்வெட்டிகள் விநியோகிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் மண்வெட்டிகளை எடுத்து வந்ததற்கான கட்டணமாக 150 ரூபாவைச் செலுத்தி அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ 90)

★ ★ ★

நவாலி விவசாய சம்மேளனப் பிரிவுக்குட்பட்ட முழுநேர விவசாயிகளுக்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு உடுவில் கமநல சேவை நிலையத்தில் வைத்து மண்வெட்டிகள் வழங்கப்பட உள்ளன.

மண்வெட்டிக்கான கட்டணமாக 150 ரூபா மட்டும் அறவிடப்படும். (ஐ)

## செய் அல்லது...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது ஹொரகொல்ல அல்லது அத்தனகலைக்கு விஜயம் செய்யும் போது அங்கு வைத்து அவரைக் கொல்வது குறித்து சொத்தி உபாலி போன்ற பாதாள உலகக் கிரிமினல்களுடன் கூரே பேச்சு நடத்தியிருந்தார். — இவ்வாறு இரகசியப் பொலீஸார் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள பதில் மனுவில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

கூரே கைதானதை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவுக்கு தாங்கள் சமர்ப்பித்த பதில்மனுவிலேயே இரகசியப் பொலீஸ் பொறுப்பதிகாரி ரி. வி. சுமணசேகரா இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இக்கொலைச் சதித் திட்டம் தொடர்பாக கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் உள்ள படுபயங்கர கிரிமினல்களுடன் கூரே தொடர்புகளை வைத்திருந்தது பற்றிய தகவல்கள் தங்களுக்குக் கிடைத்துள்ளன என்றும் ரி. வி. சுமணசேகரா குறிப்பிட்டுள்ளார்.

கூரே அமைச்சராக இருந்த சமயம் றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள்களாக நியமிக்கப்பட்டு, விசேட அதிரடிப் படையினரால் பயிற்சியளிக்கப்பட்ட சிலரை இது தொடர்பாக சம்பந்தப்பட்டோர் நாடியுள்ளனர்.

தமது கொலைத் திட்டத்தை நிறைவேற்ற வசதியாக ஜனாதிபதியின் மூதாதையர்களின் இல்லம் அமைந்துள்ள ஹொரகொல்லப் பகுதியில் சொத்தி உபாலி அல்லது அவரின் உறவினரின் பெயரில் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. — இவ்வாறு இரகசியப் பொலீஸ் பொறுப்பதிகாரி தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கடந்த ஜூன் 16 ஆம் திகதி விடுத்த — மூன்று மாத கால — தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் கூரே தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்.

அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவில் கூறப்பட்டவை உண்மையான தகவல்களா? அல்லது கூரேயைத் தடுத்து வைப்பதற்கு எதிராக நீதிமன்றத்தால் எழக்கூடிய உத்தரவுகளைத் தடுப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட வெறும் கற்பனைகளா என்பது இனிமேல்தான் தெரியவரும்.

இது விடயத்தில், கூரேயின் பழைய நடவடிக்கைகள், செயற்பாடுகள், முன் மாதிரிகள் என்பனவற்றை இலகுவில் மறந்துவிட முடியாது என்பதையும் —

லலித் கொலை விசாரணைகளில் கூட கூரேயின் பங்கு குறித்து பல கட்டங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டதையும் —கொழும்பு வட்டாரங்கள் சில சுட்டிக்காட்டின. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி அப்புத்துரை
(தெல்லிப்பளை)

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தைத் தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட சி. அப்புத்துரை நேற்றுக் (11-07-97) காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், தவநாயகி, லைலா (ஜேர்மனி), ராதா, குணநாயகி (ஜேர்மனி), ஜெயம் (மாங்குளம்), சூட்டி (ஜேர்மனி), இராஜநாயகி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் முருகதாஸ் (ஜேர்மனி), சற்குணசிங்கம், நவராஜா (ஜேர்மனி), ஆனந்தசோதி (ஜேர்மனி), ரஜனி, வதனி ஆகியோரின் மாமனாரும், சுரேஸ், நிரேஸ், சுஜாத்தா (ஜேர்மனி), தர்ஷனி, தனுஷா, தர்ஷன், நிஷாந், சுரேன், நிரோஷன், ஜெயந்தி, ஜெயந்தன், ஜெனா, காந்தன், ரூபி, நிரோஜன், செல்வி, றொபின், கிருஷ்ணா, ஜோர்ஜ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-07-97) சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியால் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சற்குணசிங்கம்
(மருமகன்)

கே.கே.எஸ். வீதி,
(இலங்கை வங்கி அருகில்)
சுன்னாகம்.

(48362)

## திருமதி கனகம்மா சின்னராசா

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருமதி கனகம்மா சின்னராசா 11-07-97 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் சு. சின்னராசாவின் அருமை மனைவியும் காலஞ்சென்றவர்களான ஜீவமலர், ஜீவகுமார், மற்றும் திருமதி சி. விஜயமலர் (சுவிற்சர்லாந்து), சிறீதரன், திருமதி ர. உமாராணி, ரவிக்குமார் (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அருமைத் தாயாரும், சிறீஸ்கந்தவேள் (சுவிற்சர்லாந்து), ரவீந்திரநாதன், ரேவதி, சிவசக்தி (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அருமை மாமியாரும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் குணரெத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், வேதிகா, கார்த்திகா, கீர்த்திகா, கௌதமன், ராகுலன், ஆரூரன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று(12-7-97) மு.ப. 10.00 மணிக்கு மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எருக்கலம்பிட்டி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சிறீதரன்
(மகன்)

மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

(48363)

## திருமதி கயிலாயபிள்ளை சுந்தரம்

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது காத்தான்குடி ஆரையம் பதியில் வசித்து வந்தவருமாகிய கயிலாயபிள்ளை சுந்தரம் 09-07-97 இரவு காலமானார்.

இவர் விஜயலட்சுமி, யோகாம்பிகை, ஏகாம்பரம் (வர்த்தகர், திருநெல்வேலி), கோபாலபிள்ளை (பர்மா அரிசி ஆலை, ஆரையம்பதி), லீலாவதி, கமலாதேவி, உருக்குமணி ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற சோமசுந்தரம் (ஆசிரியர்), காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை, கமலாதேவி, சிவமணி, நவரத்தினம் (தர்மா அரிசி ஆலை, ஆரையம்பதி), சோமசுந்தரம் (வர்த்தகர், ஸ்கந்தபுரம்), ஏகாம்பரம் (தபாற் கந்தோர், காரைநகர்) ஆகியோரின் அன்புமாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-07-97 அன்று மாலை 4-00 மணிக்கு நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க. ஏகாம்பரம்
(மருமகன்)

அல்வின் வீதி,
காரைநகர்.

(48349)

## நல்லதம்பி முத்துத்தம்பி
(முன்னாள் உரிமையாளர், கிருஷ்ணபவான்)

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய நல்லதம்பி முத்துத்தம்பி காலமாகிவிட்டார்.

இவர் நல்லதம்பி செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், புஸ்பத்தின் அன்புக் கணவரும், பிறேமினி (கனடா), குமுதினி (கனடா), சாந்தினி, பிறேம்குமார் (கனடா), தவக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும். சிவராஜா (கனடா), மகேசன் (கனடா) ஆகியோரின் மாமனாரும். சின்னம்மாவின் பெறாமகனும், காலஞ்சென்ற கனகசுந்தரம் (S. N. K) மற்றும் ஐயம்பிள்ளை, காலஞ்சென்ற சுப்பிரமணியம் (C. T. B) மற்றும் மாணிக்கவாசகம், கனகரத்தினம், பத்மநாதன், பாக்கியலட்சுமி, பத்மாவதி, காலஞ்சென்ற இரத்தினசிங்கம் ஆகியோரின் சகோதரரும், மனுஷா, மாஷா, மாகுலன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13 - 07 - 1997 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
திருமதி புஸ்பம் முத்துத்தம்பி
(மனைவி)

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(47320)

## நாளை

ஆனி 29
ஞாயிற்றுக்கிழமை
**திதி:** அட்டமி
பிற்பகல் 1.11 வரை.
**நட்சத்திரம்:** சித்திரை
முன்இரவு 8.29 வரை.
**சுபநேரம்,** 8.59 - 10.29
**ராகுகாலம்:** 4.29 - 5.59
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## 7,500 ஆசிரிய வெற்றிடங்கள்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள 7 ஆயிரத்து ஐந்நூறு ஆசிரிய வெற்றிடங்கள் உட்பட தற்போது நாடெங்கும் 28 ஆயிரத்து அறுநூறு ஆசிரிய வெற்றிடங்கள் இருப்பதாக கல்வி அமைச்சுதெரிவித்துள்ளது,

அழகியற் கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்ப பாடங்கள், தமிழ் மொழி, விவசாயம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கே பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இன்று

மானிப்பாய், ஜூலை 12

மானிப்பாய் மேற்கு கட்டுடை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் பாலர் பாடசாலை விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2. 30 மணிக்கு சி. பொ. வா. முதலியார் தலைமையில் நடைபெறவுள்ளது.

வலி. தென் மேற்கு பிரதேச செயலர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

★ ★ ★

பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் உள்ள யாழ். வீதி ஞானக்குழந்தை இல்லத்தின் ஐந்தாவது வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். [ஐ-4]

★ ★ ★

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி றிபேர்க் கல்லூரியில் நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூக நிலைய அறவழி மழலைகள் பூங்கா அபிவிருத்திச்சங்கம்நடத்தும் தடகள விளையாட்டுப் போட்டி இஸ்று காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தனராக வலி. தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் கலந்துகொள்வார்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இந்த விழாவில் ஆசியுரை வழங்குவார், வரலாற்றுத்துறை விரிவுரையாளர் செ. கிருஷ்ணராஜா கருத்துரையாற்றுவார்.

★ ★ ★

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே 'யுனெஸ்கோ' நிறுவனம் நடத்திய இலக்கியப் போட்டிகளின் கோட்டங்களுக்கு இடையிலான இறுதிப் போட்டிகள் இன்று காலை 10.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (ஐ)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை மணலியம்பதி ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலயத்தின் வருடாந்தபொங்கல் திருவிழா இன்று காலை 7. 30 மணிமுதல் நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

வதிரி பூவற்கரை ஸ்ரீ பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும். (ஐ-30)

# நிமால்சிறிபாலவுக்குஎதிராக ஊழல் குற்றச்சாட்டுகள்

கொழும்பு, ஜூலை 12

அரசின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான நிமால் சிறிபால டி சில்வாவின் அமைச்சில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பாகக் கிடைத்துள்ள முறைப்பாடுகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

செவன நிதியத்தை நிதியமைச்சிடம் ஒப்படைத்து, வீடமைப்பு, நகர அபிவிருத்தி பொதுவசதிகள் அமைச்சர் பதவியிலிருந்து நிமால் சிறிபால டி சில்வாவை வேறு அமைச்சர் பதவிக்கு மாற்றும் அளவுக்கு அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பலமானவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

செவன நிதியம் மற்றும் செவன லொத்தர் தொடர்பான அனைத்துக் கோவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் —

லொத்தர் சீட்டுகள் அச்சடிக்கும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன எனவும் — தெரிய வருகிறது.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பணி திறைசேரியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் தலைமைஅதிகாரியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

செவன லொத்தர் சீட்டுகள் அச்சிடுவது தொடர்பாக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டன எனவும்—

அவற்றில் குறைந்த கேள்வித் தொகையைக் குறித்தவருக்கு அச்சிடும் பணி வழங்கப்படாது ஆகக்கூடிய தொகையைக் குறித்தவருக்கு அப்பணி வழங்கப்பட்டதாகவும்—

இந்த இரு தொகைகளுக்கும் இடையேயான வித்தியாசம் 8 கோடியே 58 லட்சத்து 11 ஆயிரத்து 500 ரூபா எனவும் தெரிய வந்துள்ளது.

மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் நிமால் சிறிபால டி சில்வா குற்றவாளி எனக் காணப்பட்டால் அவரது அமைச்சர் பதவி மாத்திரமன்றி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிபோகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பேர்னாட்டின் அமைச்சர் பதவி மற்றொருவருக்கு!

கொழும்பு, ஜூலை 12

விஞ்ஞான, தொழில் நுட்ப மனித வள அமைச்சர் பேர்னாட் சொய்ஸா தாம் உடல் நலம் குன்றி இருப்பதால், தான் வகித்துவரும் அமைச்சர் பதவியை தனது கட்சியைச் சேர்ந்த வேறு ஓர் எம், பிக்கு வழங்குவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு சமசமாஜக் கட்சியின் அரசியல் குழுவைக் கேட்டுள்ளார்.

அத்தாவுட செனிவிரத்தினாவுக்கு எதிராக கட்சியில் எழுந்துள்ள ஒழுங்கு முறைப்பாடுகள், வாசுதேவ நாணயக்காரா, பேட்டி வீரக்கோன் ஆகியோர் அமைச்சர் பதவியை நிராகரித்துள்ளமை ஆகிய சூழ்நிலையில் பேர்னாட் சொய்ஸாவின் அமைச்சர் பதவி பெரும்பாலும் காலி மாவட்ட எம். பியான அசோக வீரசிங்க டி சில்வாவுக்கு வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-10)

## நாளை

கதிர் தணிகாசலம் எழுதிய ''தமிழ் மொழியின் மாட்சியும் பரந்த பண்பாடும்'' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9. 30 மணி முதல் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

★ ★ ★

போதைப் பொருள் ஒழிப்பு தினத்தை ஒட்டி வடமராட்சி றோட்டறிக் கழகம், சாந்திகம் உளவளத்துணை நிலையத்துடன் இணைந்து நடத்தும் கருத்தரங்கு நாளை ஞாயிறு முற்பகல் 9 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

''பதார்த்தங்களின் துஷ்பிரயோகம்'' என்னும் தலைப்பில் திரு நந்தகுமார் கருத்துரை வழங்குவார். (ஐ)

★ ★ ★

குரும்பசிட்டி சன்மார்க்க சபை நடத்தும் திருவாசக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இணுவில் கிழக்கு 'முதாகர பவனத்'தில் நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் கோண்டாவில் துர்க்கா பாலர் பாடசாலையின் நான்காவது ஆண்டு பாலர் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

ஊர்காவற்றுறை உப்புக்குள வீதி அண்ணா சனசமூக நிலையத்தின் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் சனசமூக நிலையத்தை திறந்து வைப்பார். (ஐ-4)

## மிருசுவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

முன்தினம் எடுத்து வரப்பட்டது தெரிந்ததே.

இதற்கிடையில் மிருசுவில் பழைய வாய்க்கால் பகுதியில் அன்று அதிகாலை 4. 30 மணிக்குக்கேட்ட துப்பாக்கிச் சத்தங்களை அடுத்து அதிகாலை 4. 30 மணிக்கு ஹெலிக்கொப்டர் ஒன்று அப்பகுதியில் இறங்கிச் சென்றதாக செய்தி ஒன்று தெரிவித்தது.

இச்சம்பவம் தொடர்பாக புலிகள் தரப்புச் செய்தி ஏதும் கிடைக்கவில்லை. (உ-10-117)

## கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்)

பேசாலையில் எரிக்கப்பட்டதையும்—

'மொறாங் பொங்' சரக்குக் கப்பல் வடக்குக் கடலில் கடத்தப்பட்டதையும்—

தொடர்ந்து வடபகுதிக்கான கப்பல் சேவைகள் பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே,

திருகோணமலைக்கான கப்பல் சேவை குறித்து திட்டவட்டமான முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை எனத் தெரியவந்தது. (உ-3)

## வாசுதேவ...

(முதலாம் பக்கத் தொடர்)

கொழும்பிலும் இந்த விவகாரம்தொடர்பாக போராட்டம் நடத்த தாம் ஏற்பாடு செய்வதாகவும் அவர் உறுதி கூறினார் என்று சங்கப்பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

நவசமசமாஜக் கட்சித் தலைவர். விக்கிரமபாகு கருணாரத்தினாவும் இப்போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்தார் என்றும் அவர் கூறினார். (உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12-07-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ அழகுக்கு அழகுசேர்க்கும்
அழகு சாதனப் பொருள்கள்,
வெளி நாட்டு தயாரிப்புகள் (லக்மி)

★ கரன்டி நகைகள்,
மற்றும் அன்பளிப்புப் பொருள்கள்,
ஸ்கூல் பாக்குகள், வேண்டிய தரத்தில்
பெற்றிட நாடுங்கள்:

சிவா பன்ஸி பலஸ்
185, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(சி/ 1097)



## கருத்துக் கலசம்

### சுதேசவைத்தியம்

உடல் — உணவு — நோய் இந்த மூன்றுக்கும் பெரும் தொடர்பு — சம்பந்தம் உண்டு. சரியான, சத்தான, உணவுகளை இனங்கண்டு அளவோடு சாப்பிட்டால் நோயைத் தூரத்தில் வைத்திருக்கலாம். இதனையே எமது முன்னோர்கள் கைக்கொண்டார்கள். அதனால், மூப்பு வந்த பின்னரும் அவர்கள் திடகாத்திரம் உள்ளவர்களாகவும் நோய் அணுகாமலும் வாழ்ந்தார்கள்.

உணவே மருந்தாக அமையும் வகையில் அவர்களின் உணவுப் பழக்கங்கள் அமைந்திருந்தன. அதனால் அவர்களுக்கு நோய்த் தொல்லை குறைவாக இருந்தது. ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. உணவுப் பழக்கங்கள் மட்டுமன்றி சமையற் பாகங்களும் பழக்கங்களும் வளைந்து போயின. அவசர உலகம், அறிவியல் வளர்ச்சி என்று பேசிக் கொண்டு நோயை வலிந்து தேடிக் கொள்ளும் பழக்கங்களுக்கு அடிமையாகி விட்டது இன்றைய சந்ததி. அதன் விளைவு நோய் மலிந்து நோஞ்சன் இளசுகள் என்றாகி விட்டது.

இயற்கையோடு இசைந்த வாழ்க்கை முறை மறைந்து போயிற்று. இயற்கை தரும் மருந்துகளும் பாவனை இழந்து போயின. உணவும் சக்கை; நோயும் கொடூரம்; உடலும் 'தொக்கை' என்ற பரிதாப நிலை இப்போது! இளமையில் முதுமை பொது விதி என்றாகிவிட்டது.

அது போலவே, ஆங்கில மருந்துகள் என்றழைக்கப்படும் பிற வைத்தியச் கிசிச்சைகளும் மருந்து வகைகளும் நோய்களைப் பெருக்கி, உடம்பினை வருத்தி, உயிரைக் காவி, வாழ்க்கையைச் சுருக்குகின்றன.

சுதேச வைத்தியமும் மருந்தும் உடனடி நிவாரணம் தரும் குணாம்சம் குன்றியவை. மருந்துண்ணும் காலம் அதிகமாக இருப்பினும் பூரண சுகம் தந்து உடலைப் பாதுகாத்து நோயைத் துரத்தி விரட்ட வல்லது சுதேச வைத்தியமே.

ஆயினும் இந்த அருமந்த சுதேச வைத்தியப் பாரம்பரியம் எமது பிரதேசத்தில் அருகிப் போகிறது. முறையாகச் சீராக வைத்தியம் செய்து வந்த மூத்த பரம்பரை மறைந்ததோடு சித்த வைத்தியமும் சிதைந்து போய்விட்டது. பலரும் தமது வைத்திய முறைகளை, வாகடங்களைக் குடும்பச் சொத்தாக்கி முடக்கி வைத்தனர். தமது பிள்ளைகளை வேறு தொழில்களுக்கு ஆற்றுப்படுத்தினர். அதன் விளைவு, சித்த வைத்தியம் வேகமாகச் சாகும் என்ற பெறுபேறாகியுள்ளது.

மருந்தரைக்க மூலிகை இல்லை; வாகடத்தை விளங்கிக் கொள்ள தமிழறிவு குறைவு; மருந்து தயாரிக்கும் செய்முறைகளில் மினக்கெட நேரமில்லை என்ற பின்னணியில் ஆயுர்வேத வைத்தியம் பயின்றோரும் ஆங்கில மருந்து கொடுக்கும் பரிதாப நிலை!

சுதேச வைத்தியம் புனர்ஜென்மம் எடுக்க வேண்டும். சாத்தியம் உண்டா? அதற்கான மக்கள் ஆதரவும் பயிற்சியும் தேவை. கிடைக்குமா?

# செவ்வாயின் தரையில் இறங்கி ஓடித்திரியும் "மினி றோவர்"

செங்கிரகமான செவ்வாயில் உயிரினங்கள் — ஆகக் குறைந்தது நுண்ணுயிர்களாவது — உள்ளனவா? அங்கு தண்ணீருக்கான அடிப்படைகள் காணப்படுகின்றனவா?

பல தசாப்தங்களாகக் கிளப்பப்பட்டு வரும் இக்கேள்விகளுக்குத் தற்போது செவ்வாய்க் கிரகத்தில் இறங்கியிருக்கும் அமெரிக்காவின் விண்வெளிக் கலம் பதில் தருமா? — இதுதான் இன்று பல்வேறு மட்டத்திலும் எழுப்பப்படும் புதிய வினா.

ஆனால், செவ்வாயில் இறங்கியிருக்கும் 'பாத் பைண்டர்' Path—finder (மார்க்கம் நோக்கி) விண்கலத்தின் முக்கிய இலக்கு இந்தக் கேள்விகளுக்குப் பதில் கண்டுபிடிப்பதல்ல.

குறைந்த செலவில் — பாதுகாப்பாக — செவ்வாயைச் சென்றடைவதற்கான மார்க்கத்தைக் கண்டுபிடித்துச் செயற்படுத்திக் காட்டுவதும்—

செவ்வாயில் சிறிய 'றோவர்' (வாகனம்) ஒன்றை ஓட்டிப் பார்ப்பதும்—

செவ்வாயின் தரையமைப்பை ஓரளவு தெளிவுபடுத்துவதுமே —

இந்த விண்கலப் பயணத்தின் முக்கிய நோக்கம் என்கின்றது நாஸாவின் ஜெட் உந்து ஆய்வுகூடம்.

எதிர்காலத்தில் செவ்வாய்க்கு அனுப்பப்படக் கூடிய விண்கலங்கள் நிச்சயம் தற்போதைய பாத் பைண்டரின் வடிவமைப்பையும், செயற்பாட்டையும் பின்பற்றப் போகின்றன என்றும் அது கூறுகின்றது.


### விண்கலத்தின் வடிவம்

1996 டிசம்பரில் பாத் பைண்டர் அமெரிக்காவின் நாஸா தளத்திலிருந்து விண்ணுக்கு ஏவப்பட்டது.

அடித்தளத்தையும் சுமார் மூன்று அடி உயரமுடைய மூன்று முக்கோணப் பக்கங்களையும் கொண்ட — [illegible] வடிவுடைய — பயணம் புறப்பட முன்னர் சுமார் 890 கிலோ (சுமார் 1,962 இறாத்தல்) நிறையுடையதுமாக — இந்த விண்கலம் அமைந்திருந்தது. அதனுடன் சுமார் நூறு கிலோ (220 இறாத்தல்) நிறை கொண்ட றொக்கட் இயக்க அமைப்பும் மேலதிகமாகப் பொருத்தப்பட்டிருந்தது.

புறப்பட முன்னர் விண்கலமும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த ஏனைய உதிரி உபகரணங்களும் சுமார் எட்டரை அடி விட்டமும், ஐந்தடி உயரமும் கொண்ட அமைப்பாக இருந்தன.

செவ்வாய்க் கிரகத்தில் விண்கலம் தரையிறங்கிய பின்னர் ஓடித்திரிய வேண்டிய றோவர் வாகனமும் இதற்குள் மடித்து வைக்கப் பட்டிருந்தது.



செவ்வாயில் ஓடித் திரியும் 'மினி றோவர்'. அதன் சக்கரங்கள் தென்படுகின்றன. விண்கலம் தரையிறங்கிய சமயம் பயன்படுத்தப்பட்ட காற்றுப் பைகளும் சுருங்கிக் கிடக்கின்றன.

### ஏழு மாதப் பயணம்

சுமார் ஏழு மாத கால விண்வெளிப் பயணத்தின் பின்னர் 'பாத்- பைண்டர்' கடந்த ஜூலை 4 ஆம் திகதி செவ்வாயை நெருங்கியது.

அச்சமயம் அதிலிருந்த பெரும் பகுதி எரிபொருள் தீர்ந்து போய் ஆக எஞ்சியிருந்தவை பிரதான விண்கலம், அதனுள் மடித்து வைக்கப்பட்ட றோவர் வாகனம், பரசூட், காற்றுப் பைகள் மற்றும் சிறிய றொக்கட் இயந்திரங்கள், மேலும் சிலகருவிகள் தாம். சுமார் ஒரு தொன் நிறையுடன் (2,192 இறாத்தல்) அமெரிக்காவை விட்டுப் புறப்பட்ட 'பாத் லைண்டர்' செவ்வாயை நெருங்கிய சமயம் ஆக 560 கிலோ (1,256 இறாத்தல்) மட்டுமே நிறையுடையதாக இருந்தது.

செவ்வாயின் சூழல் (வளி) மண்டலத்துக்குள் மணிக்கு 17 ஆயிரம் மைல் (செக்கனுக்கு 7.6 கிலேமீற்றர்) என்ற வேகத்தில் — 14.2 பாகை சரிவில் — ஊடுருவிப் புகுந்தது பாத் — பைண்டர்.

செவ்வாயின் வளிமண்டலத்துடன் வேகமாகப் புகுவதால் ஏற்படும் உராய்வினால் விண்கலத்தின் வெளிச் சுவர் வெப்பம் கூடி அழிந்து போவதைத் தடுப்பதற்காக — உராய்வைக் குறைக்கும் நோக்கத்துடன் — செவ்வாயின் சூழல் மண்டலத்துக்குள் நேரடியாக — செங்குத்தாக — உட்புகாமல் சரிவாக மெல்ல, மெல்ல ஊடுருவியது விண்கலம்.

(உராய்வால் ஏற்படும் வெப்பத்தைத் தாங்கக் கூடியதாக விண்கலத்தின் சுவர் விசேட உலோகத்தால் தயாரிக்கப்பட்டிருந்தது.

செவ்வாயின் சூழல் மண்டலத்துக்குள் ஊடுருவிப் புகுந்த விண்கலம் செவ்வாயின் தரையை நோக்கி விரைந்தது. தரைக்கு ஆறு முதல் பத்து கிலோ மீற்றர் (சுமார் 4 முதல் ஆறு மைல்) உயரத்தில் விண்கலம் இருந்த போது, அதன் பின்புறத்தில் பொருத்தப்பட்டிருந்த றொக்கட்டுக்கள், அதன் பாதைக்கு நேரெதிர்த் திசையில் உந்து விசையைத் தோற்றுவிக்கக் கூடிய வகையில் வெடிக்க வைக்கப்பட்டன. இதனால் கலத்தின் நிலத்தை நோக்கிய ஆர்முடுகல் வேகம் திடீரென கணிசமான அளவு குறைக்கப்பட்டது.

அதே வேளை, கலத்தின் தரையிறங்கு பகுதியில் இருந்த காற்றுப் பைகளுக்குள் காற்றுச் செலுத்தப்பட்டு அவை 'குஷன்' மெத்தை போன்று வடிவத்தைப் பெற்றன. அத்தோடு பாரிய பாரசூட்டுகளின் உதவியுடன் தரையிறங்கியது விண்கலம்.

பூமியிலிருந்து முன்னர் அனுப்பப்பட்ட 'வைகிங்—1' விண்கலம் 1976 இல் தரையிறங்கிய பிரதேசத்திலிருந்து தென்கிழக்கே சுமர் 850 கிலோ மீற்றர் (527 மைல்) தொலைவில் ஏர்ஸ் பள்ளத்தாக்கில் 'பாத் பைண்டர்' பாதுகாப்பாகத் தரையிறங்கியது.

### சூரியசக்தி மூலம் இயக்கம்

செவ்வாயின் தரையில் அதற்குத் தொடர்ந்து சூரிய சக்தி கிடைக்கக்கூடிய வசதியைக் கணக்கிட்டு அதற்கு வாய்ப்பான பிரதேசத்திலேயே விண்கலம் தரையிறக்கப்பட்டது.

கடைசியாக வெடித்த றொக்கட்டுக்கள், தரையிறங்கியபோது வெடித்து காற்றையும் இழந்த காற்றுப் பைகள் ஆகியவற்றின் நிறை போக இப்போது விண்கலத்தின் எடை 360 கிலோ (793 இறாத் தல்) ஆகக் குறைந்தது.

விண்கலம் விண்வெளியில் பறந்துகொண்டிருந்த போது அதற்கு 178 வாட்ஸ் சக்தி தேவைப்பட்டது. அப்போது சூரியனிலிருந்து சக்தியைப் பெறும் அதன் ('சோலர்') பற்றரிகள் தாராளமாக சக்தியை உறிஞ்சிக் கொண்டிருந்தன.

விண்வெளியில் சஞ்சரித்த சமயம் கலத்தின் வெளிப்புறத்தில் பரந்து காணப்பட்ட 'சோலர்' பற்றரிகள் தாராளமாக சூரிய சக்தியைப் பெறக் கூடியதாக சூரியக் கதிர்கள் கலத்தின் பல பகுதிகளிலும் பட்டும் தெறித்துக் கொண்டிருந்தன.

ஆனால் கலம் செவ்வாயில் தரையிறங்கியதும் சூரியக் கதிர்கள் தெறிக்கும் பிரதேசத்தின் அளவு குறைந்து விட்டது.

என்றாலும் சூரியக் கதிர்கள் படக்கூடிய—கலத்தின் 3.3 சதுர மீற்றர் வெளிப் பரப்பில் உள்ள — பற்றரிகள் மூலம் தினசரி நூறு வாட்—மணி சக்தியை கலம் தயாரித்துக் கொள்கின்றது.

அதில் உள்ள வெள்ளி—நாக Rechargeable பற்றரிகள் மூலம் விண்கலம் இரவில் தனது பணிகளை மேற்கொள்கின்றது.

### கமராக்கள் இயங்கத் தொடங்கின

விண்கலம் தரையிறங்கியதும் அதில் பொருத்தப்பட்டிருக்கும் — நகர்வு மற்றும் திசை திரும்பும் வசதியுடைய— உயர் வலுக்கொண்ட— ஸ்டீரியோ மற்றும் பல வர்ண உருக்காட்டிக் கமராக்கள் மூலம் செவ்வாயின் சுற்றுப்புறச் சூழல்களை இரு செக்கனுக்கு ஒரு பிரேம் என்ற வீதத்தில் அது படம் பிடித்து பூமிக்கு அனுப்பத் தொடங்கியது.

அதேசமயம், தரையிறங்கிய பகுதியில் உள்ள மண் மற்றும் கற்பகுதிகளை வேறு கருவிகள் கவ்வி எடுத்து ஆராயத் தொடங்கின.

### மினிறோவர் ஓடத் தொடங்கியது

தரையிறங்கி சிலமணி நேரம் கழித்ததும் விண்கலம் தனது உடலில் இருந்து மினி றோவர் போன்ற சிறிய வாகனம் ஒன்றை பிரசவித்து, செவ்வாயின் தரையில் ஓடவிட்டது.

சோஜோனர் —Sojourner (இடைத்தங்கல்) என்ற இந்த சிறிய வாகனம் பத்து கிலோ (22 இறாத்தல்) எடையுடையது.

விண்கலத்தினுள் மடித்து வைக்கப்பட்டிருந்த போது இதன் உயரம் 7 அங்குலம் தான். ஆனால் தரையிறங்கி தன்னை அது நிமிர்த்திக் கொண்டதும் இரண்டடி நீளமும், ஒன்றரை அடி அகலமும், ஓரடி உயரமும் உடையதாகி விட்டது,

அசைந்தாடிச் செல்லக் கூடிய ஆறு சக்கரங்களைக் கொண்ட சோஜோனர் செக்கனுக்கு ஒரு சென்ரி மீற்றர் (மணிக்கு 36 மீற்றர்) நகரக்கூடியது.

நாஸாவில் உள்ள விஞ்ஞானிகள் அங்கிருந்தது உரிய சமிக்ஞைகளை வழங்கி மினி றோவரை இயக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

(XII ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்து! யானைகளுக்கு!!

வன விலங்குகள் தொடர்பான சர்வதேச சட்டங்களை வகுக்கும் ஐ. நா. அமைப்பான "அழியும் அபாயத்தில் இருக்கும் ஜீவராசிகளின் சர்வதேச வர்த்தக ஒப்பந்த அமைப்பு'' ஆபிரிக்காவில் கடந்த ஏழு ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக யானைத் தந்த வணிகத்துக்கு விதிக்கப்பட்டிருந்த தடையைத் தளர்த்தியுள்ளது.

ஆபிரிக்காவில் யானைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச அமைப்பு மேற்கொண்ட பிரசாரம் எதிர்பார்க்கப்பட்டதை விட அளவுக்கு மிஞ்சி வெற்றியளித்துள்ளதால் ஆபிரிக்காவின் சில பகுதிகளில் யானைகளின் எண்ணிக்கை பெருகி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்தே உலகில் யானைத்தந்த வணிகத்துக்கு முதல் முறையாக அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஜூன் மாதம் 9 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை சிம்பாப்வே தலைநகரான ஹராரேயில் "அழியும் அபாயத்தில் இருக்கும் ஜீவராசிகளின் சர்வதேச வர்த்தக ஒப்பந்த அமைப்பின்'' 10 ஆவது மாநாடு நடைபெற்றது.

150 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் உலகிலேயே மிக அதிகமாக யானைத் தந்தத்தைப் பயன்படுத்தும் ஜப்பான் போன்ற நாடுகள் உலகில் யானைகளின் எண்ணிக்கை போதுமான அளவு அதிகரித்துவிட்டதாகக் கூறி யானைத் தந்த வணிகத்துக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும் எனவற்புறுத்தின.

தன்வசம் மறைத்து வைத்துள்ள சுமார் 190 தொன் யானைத் தந்தத்தையும் பயன்படுத்தும் எண்ணத்துடனேயே இது விடயத்தில் ஜப்பான் தீவிர அக்கறை காட்டியது.

உலகில் அதிகமாக யானைகளைக் கொண்டிருக்கும் சிம்பாப்வேயும் யானைத் தந்த வணிகத்துக்கு அனுமதி அளிக்குமாறு விடாப்பிடியாக வற்புறுத்தி வந்தது.

ஆபிரிக்காவில் மொத்தம் 5லட்சத்து 80 ஆயிரம் யானைகள் உள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் மூன்றில் ஒரு பங்கு யானைகள் சிம்பாப்வே, பொட்ஸ்சுவானா, நமீபியா ஆகிய மூன்று நாடுகளிலும் வசிக்கின்றன.

யானைகளின் தாயகம் என வர்ணிக்கப்படும் இந்த மூன்று நாடுகளும் தம்மிடம் கையிருப்பில் உள்ள சுமார் 60 தொன் யானைத் தந்தங்களை ஜப்பானுக்கு விற்பதற்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் கிடைக்கும் சுமார் 3 கோடி டொலர் பணத்தைக் கொண்டு இந்த நாடுகளில் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

ஆபிரிக்காவில் இவ்வாறு யானைத் தந்த வணிகத்துக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டிருப்பதை மேற்கு நாடுகளைச் சேர்ந்த வனவிலங்கு பாதுகாப்பு அமைப்புகள் கண்டித்துள்ளன.

அழியும் அபாயத்தில்இருக்கும் ஜீவராசிகளின் சர்வதேச வர்த்தக ஒப்பந்த அமைப்பின் மாநாட்டில் எடுக்கப்பட்ட இந்த முடிவு உலகில் அருகிவரும் விலங்கினங்களை வேட்டையாடும் துப்பாக்கிகளில் மீண்டும் குண்டுகளைப் பொருத்தச் செய்திருப்பதாக மேற்குலக வனவிலங்கு பாதுகாப்பு அமைப்பினர் அச்சம் தெரிவித்துள்ளனர்.

பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

ஆபிரிக்காவில் யானைத் தந்த வணிகத்துக்கான தடை தளர்த்தப்பட்டிருப்பது ஆசிய நாடுகளின் வன விலங்குப் பாதுகாப்பு ஆர்வலர்களுக்குப் பெரும் கவலையை அளித்திருக்கிறது.

ஆசியாவிலேயே அதிக எண்ணிக்கையான யானைகளைக் கொண்டுள்ள நாடு இந்தியா ஆகும்.

ஆபிரிக்க யானைத் தந்த வணிகத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பது இந்திய யானைகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஏனெனில் உலகில் மிகவும் விலை மதிப்பு மிக்கதாக விளங்கும் ஆபிரிக்க யானைத் தந்தத்துக்கும், இந்திய யானைத் தந்தத்துக்கும் இடையே வித்தியாசம் காண்பது சிரமம். எனவே ஆபிரிக்க யானைத் தந்தங்கள் என்ற பெயரில் அதிகளவு இந்திய யானைத் தந்தங்கள் முக்கிய சந்தைகளான டுபாய், ஹொங் கொங், சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்கு கடத்தப்படும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இதனால் இந்திய யானைகளின் எண்ணிக்கையில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று மத்திய சுற்றுச் சூழல் அமைச்சின் வனவிலங்குப் பாதுகாப்புப் பிரிவு அஞ்சுகிறது.


இந்தியாவில் யானைகள் அழிக்கப்படுவது கடந்த சில மாதங்களாக அதிகரித்து வந்துள்ளது. நீலகிரிமலைப் பகுதியில் மட்டும் கடந்த மார்ச் மாதம் 17 யானைகள் பலியாகியுள்ளன. இந்தியாவில் வருடாந்தம் சராசரி 200 யானைகள் கொல்லப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை — யானைகள் அழிக்கப்படுவதால் இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் மற்றொரு பிரச்சினையும் தலைதூக்கியுள்ளது. அங்கு உள்ள பெண் யானைகளை விட ஆண் யானைகளின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்திருப்பதாக ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியாவின் இதர பகுதிகளில் 400 பெண் யானைகளுக்கு ஓர் ஆண் யானை என்ற எண்ணிக்கையில் யானைகள் உள்ளன. இதனால் விரக்தி அடையும் பெண் யானைகள் கோபாவேசம் கொண்டு குடியிருப்புக்குள் புகுந்து அட்டகாசம் புரியும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இதற்கு எதிர்மாறாக மேற்கு வங்க மாநிலத்தில் ஆண் யானைகள் பெருகியுள்ளதால் அங்கு அவற்றின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

இவ்வாறு அட்டகாசம் புரியும் யானைகளை இனங்கண்டு பிடிக்கும் முயற்சியில் வனவிலங்கு பாதுகாப்புத் துறையினர் ஈடுபட்டுள்ளனர். ★



# திருமணம் புரிவதில் சாதனை செய்த ஜோடி!

உலகிலேயே அதிக திருமணங்கள் செய்தவர் என்ற கின்னஸ் சாதனையை அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தின் ரெட்லான்ட்ஸைச் சேர்ந்த க்ளேன் ஸ்காட்டி உல்ஃப் (வயது 88) என்பவர் புரிந்திருக்கிறார்.

உலக சாதனைகளை வெளியிடும் கின்னஸ் புத்தகம் இச்சாதனையை வெளியிட்டிருக்கின்றது.

இவர் 29 முறை விவாகம் புரிந்து கொண்டிருக்கின்றார். லிண்டா எஸ்ஸெக்ஸ் என்ற பெண்மணிதான் இவரது 29 ஆவது மனைவி.

லிண்டாவும் தன் கணவரை இந்த விஷயத்தில் மிஞ்சியவர்தான். உலகிலேயே மிக அதிகத் திருமணங்கள் செய்து கொண்ட பெண்மணி என்ற ஓர் அரிய சாதனையை நிகழ்த்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவர் லிண்டா. இவரது கணவர்களின் எண்ணிக்கை 23.

லிண்டா எஸ்ஸெக்ஸ்க்ளேன் ஸ்காட்டி உல்ஃப் தம்பதியரின் திருமண முதலாம்ஆண்டு விழா முடிந்த பத்தாவது நாளில் கணவர் க்ளேன் ஸ்காட்டி இறந்துபோனார். இவருக்கு 19 குழந்தைகள், 40 பேரக் குழந்தைகள் 19 கொள்ளுப் பேரக் குழந்தைகள் இருக்கிறார்கள்.

## 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' 3 ஆம் இடத்தில்!

'டைம்', 'நியூஸ் வீக்' ஆகிய இரண்டு சஞ்சிகைகளும் உலகப்புகழ் பெற்றவை. ஆனால் அமெரிக்காவில் மிக அதிகமாக விற்கும் பத்து பத்திரிகைகளில் இந்த இரண்டு வார இதழ்களும் இல்லை!

இந்த வரிசையில் முதல் இடம் பெறுவது 'ஓடிசி' என்ற பத்திரிகை. இதன் விற்பனை இரண்டு கோடியே 11 லட்சத்தைத் தாண்டி விட்டது.

சுமார் ஒன்றரைக் கோடிக்கும் அதிகமான பிரதிகள் விற்பனையாகும் 'ரீடர்ஸ் டைஜஸ்ட்'சஞ்சிகைக்கு இந்த வரிசையில் மூன்றாமிடம்.

உலகப் புகழ்பெற்ற 'நஷனல் ஜோகரபி' சஞ்சிகை ஒன்பது லட்சம் பிரதிகள் விற்பனையாவதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

# கைரேகை வழியில் மரபணு அடையாளம்

குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கு கைரேகை அடையாளங்களைப் போல மரபணுக்களையும் பயன்படுத்தும் புதிய முறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருகின்றது.

அலுவலகங்களில் உள்ள மேசைகளின் மீது காணப்படும் பேனாக்கள், பென்சில்கள், சாவிக்கொத்துக்கள் இவற்றின் மீது மரபணுக்கள் (டி. என். ஏ.) காணப்பட்டதாக சமீபத்தில் நியூயோர்க்கில் நடத்தப்பட்ட ஆய்வுகள் கூறுகின்றன. இதனால் இவற்றை உபயோகப் படுத்தியவர்களை வெகு சுலபமாகக் கண்டு பிடித்து விடலாம் என்றும் —

இந்தஆய்வுகுற்றப்புலனாய்வில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் —

அந்த ஆய்வை நடத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

# டயானாவின் ஆடைகள் ரூ. 25 கோடிக்கு ஏலம்!

பிரிட்டிஷ் இளவரசி டயானா உடுத்திக் களைந்த ஆடைகள் சுமார் 25 கோடி ரூபாவுக்கு விற்கப்பட்டன.

லண்டனைச் சேர்ந்த கிறிஸ்டி என்ற ஏல நிறுவனம் அண்மையில் இந்த ஆடைகளை ஏலத்தில் விற்றது.

ஏலத்தை நேரில் பார்க்வும், முடிந்தால் வாங்கவும் மொத்தம் 1, 100 பேர் வந்திருந்தனர். நேரில் வந்திருந்தவர்கள் மட்டுமல்லாமல் தொலைபேசி மூலமும் பலர் ஏலம் எடுத்தனர். இரண்டரை மணி நேரம் ஏலம் நடைபெற்றது. மொத்தம் 80 ஆடைகள் ஏலம் விடப்பட்டன.

ஏலத்தில் கிடைக்கும் தொகை பிரிட்டனின் எயிட்ஸ் நோயாளிகளுக்கான அறக்கட்டளைக்கும் லண்டனில் புற்று நோயாளிகளுக்காக அரச குடும்பத்தினர் நடத்திவரும் மார்ஸ்டன் மருத்துவமனைக்கும், சில அமெரிக்க அறக்கட்டளை நிறுவனங்களுக்கும் பிரித்து அளிக்கப்படும். இந்த ஆடைகளை ஏலத்தில் விட்டு அதிலிருந்து கிடைக்கும் வருவாயை அறக்கட்டளைகளுக்கு அளிக்கலாமே என்ற யோசனையை டயானாவுக்குக் கூறியவரே அவருடைய 14 வயது மகன் இளவரசர் வில்லியம் தான்.

அரச குடும்பத்தினர் தாங்கள் அணியும் ஆடைகள் பழையதாகிப் போனால் அதைத் தங்களுக்கு நெருக்கமான குடும்பத்தவர்களுக்கு நினைவுப் பொருளாகக் கொடுப்பது வழக்கம். எம்மவரைப்போல பழைய கோட்காரனுக்குப் போட வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை அல்லவா?

டயானா தன்னுடைய ஆடைகளை ஏலம் விடுவதன் மூலம் கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்துவிடுவார் என்று லண்டனிலிருந்து வரும் வாரப்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

அரச குடும்பத்துடன் தனக்கிருந்த உறவுகளையும், அதன் மூலம் தனக்குக் கிடைத்த அந்தஸ்து, வசதி ஆகியவற்றையும் கொண்டு வியாபார நோக்கில் எந்த வகையிலும் லாபம் அடைய மாட்டேன் என்று தனது விவாகரத்துப் பத்திரத்தில் டயானா உறுதி கூறியிருக்கின்றார்.

அப்படியிருக்க, பொது நலனுக்காக நிதி திரட்டுவதற்கு இந்த ஏலம் விடும் நடவடிக்கைக்கு அவர் இணங்கினார்.

என்றாலும் சில லண்டன் வாரப் பத்திரிகைகள் அவரின் இந்தச் செயலைக் கொச்சைப்படுத்திச் செய்திகள் வெளியிட்டதும்—குறிப்பிடத்தக்கது.

டயானா அணிந்த ஆடைகள் அவற்றின் நிறம், தரம், தன்மை மற்றும் அவற்றை அவர் அணிந்த தருணம் ஆகியவற்றைப் பொறுத்து விறுவிறுப்பாக விலை போயின. ஏலதாரர்கள் அந்த ஆடையைப் பற்றி வருணித்த விதம், கையில் காசில்லாதவர் கூட வாங்கி விட வேண்டும் என்று நினைக்கும் வண்ணம் இருந்தது. அந்த ஆடைகளை வீட்டில் வாங்கி வைத்திருப்பதே பெருமை என்ற எண்ணத்தை ஏலம் கோர வந்தவர்களிடம் ஏற்படுத்தியிருந்தன.

கறுப்பு நிற டஃபேட்டா துணியில் நெய்யப்பட்ட மாலை நேர கவுன், யானை தந்த நிறத்தில் தயாரான சாட்டின் கவுன், கரும் பச்சைக் கவுன் ஆகியவை அதிகம் விரும்பப்பட்டன. இவை உள்ளூர் மக்களிடம் நன்கு பிரபலமாக இருந்தன.

# மகளிடம் தகாத முறை: கணவனை கொன்ற மனைவி!

மகளிடம் தகாத முறையில் நடந்து கொண்ட தந்தையை அவரது மனைவியே எரித்துக் கொன்றார்.

காஞ்சிபுரம் புண்ணிய கோடீஸ்வரர் தெருவில் பத்துத் தினங்களுக்கு முன்னர் இச்சம்பவம் இடம் பெற்றிருக்கின்றது.

கணேசன் (வயது40) என்பவரே இவ்வாறு கொல்லப் பட்டவராவார்.

இவருக்குக் குடிப்பழக்கம் இருந்தது. தினமும் குடித்துவிட்டு மனைவி சாந்தி (வயது 35) யுடன் தகராறு செய்வாராம்.

சம்பவ தினமும் அளவுக்கதிகமாக குடித்து விட்டு வீட்டுக்கு வந்த கணேசன் தனது மகள் ராதிகாவிடம் (வயது 16) தகாத முறையில் நடக்க முயன்றாராம்.

தந்தையின் செயலைக் கண்டு அதிர்ச்சியடைந்த ராதிகா கூச்சலிட்டு தனது தாயாரை அழைத்துள்ளார்.

மகளின் சத்தம் கேட்டு ஓடி வந்த சாந்தி கணவனைப் பிடித்துக் கீழே தள்ளியுள்ளார்.

ஆனால் மகள் மீது வெறியுடன் பாய்ந்துள்ளார் கணேசன். இதனால் ஆத்திரமடைந்த சாந்தி அருகிலிருந்த இரும்புத் தடியால் கணேசனின் தலையில் அடித்துள்ளார்.

கீழே விழுந்த கணேசன் மீண்டும் எழ முயற்சித்துள்ளார். உடனே மண்ணெண்ணையை அவர் மீது ஊற்றி நெருப்பு வைத்துள்ளார் சாந்தி. அந்த இடத்திலேயே கணேசன் இறந்தார்.

காஞ்சி மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் நெல்சன் உத்தரவின்பேரில் விஷ்ணுகாஞ்சி போலீசார் சாந்தியைக் கைது செய்து வழக்குப் பதிவு செய்தனர்; விசாரணை தொடர்கிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தரங்கெட்ட செயலைத் தடுத்திடலாகாதோ?

வெப்பமாய்த் தகிக்கிறது வெய்யிலின் கொடுமை
தெப்பமாய் நனைக்கிறது தேகத்தை வியர்வை
செப்பமாய் ஒருவழி சென்று திரும்பமுன்
அப்பமாய் வெந்திடுவோம் ஐயகோ ஆற்றுவதார்?

வீதியிலே நின்ற விருட்சங்களை யெல்லாம்
பாதியிலே வெட்டி பார்ழடித்து விட்டதனால்
நாதியென ஒருநிழலை நாட முடியாத
சோதனை யாரிடம் செப்பிடுவோம் சேமமுற?

பாதையிலே செல்வோர் பதைபதைத்து வெய்யில்
போதையிலே சரிய தருக்களைத் தறித்த
பேதையர் அவரின் விபரீதச் செயலால் விளைந்த
வாதையைக் கூறி வழக்குரைப்ப தாரிடமோ?

மரங்களை வெட்டினால் மாசடையும் சூழலென
அரங்கங்கள் வைத்து அறிவுறுத்தல் செய்வோர்தம்
கரங்களைக் கொண்டிந்தக் காருண்ய மற்ற
தரங்கெட்ட செயலைத் தடுத்திட லாகாதோ?

- கு. சி. சுந்தரம்பிள்ளை

---

# "செத்திடட்டும் நன்றாய்ச் சிரி"

நேராகவே எதிர்ப்போர் வலியும் நெஞ்சுகாட்டி
வாராமல் கேடுசெய்வஞ் சகர்வலியும் — ஓராது
புத்திகெட்டுக் கத்திவிட்டுப் புதினம் பார்த்திடும் மடமை
செத்திடட்டும் நன்றாய்ச் சிரி!

பிறத்த லிறத்தலிலாப் பெருமானின் பெருங்கருணை
மறத்தலிலா மற்துணிவு மாண்போடு — அறத்தேரில்
உத்தமமாய்ச் சித்தம் உலாவரட்டும் உன்கவலை
செத்திடட்டும் நன்றாய்ச் சிரி!

சுடுதலுக்கு ஒத்த கொடும் சொல்வீசித் தமிழரினம்
கெடுதலுக்கு வழி செய்தோர் கிறுகிறுக்க — விடுதலைக்கு
வித்திடட்டும் எம்வேள்வி வெல்லட்டும் அடிமைநிலை
செத்திடட்டும்! நன்றாய்ச் சிரி!

- அக்கரைச்சக்தி

## கவிதை முற்றம்

# சாலக் கொடுப்பனவு தான் வழங்கமாட்டாரரோ?

போரினின் தாக்கத்தாலே பொலிவிழந்திருந்த ஊரின்
சீரினைப் பார்ப்பதற்கே திருவுளங் கொண்ட நாங்கள்
பேரினைப் பதிவுசெய்து பெருஞ்சிர மத்தோடு
ஊரினி லுட்புகுந்தோம் உள்ளமும் உடைந்து நின்றோம்.

கனிதரு மரங்களோடு கற்பகப் பனைகள் தென்னை
இனியவை யாங்குகாண எத்தனை ஆண்டு வேண்டும்?
தனியெழில் வாய்ந்த வூரின் தெரு வெலாம் மண்மேடாகி
புனிதமே யழிந்து போன புன்மையை என்னென் பேன்?

காடு போல் பற்றை மண்டி கட்டடச் சிதைவுகள் தாம்
மேடுபோல் பள்ளமாகி விளங்கிடும் வீதியெங்கும்
கூடுபோல் அமைந்த வேலி, கவின் பெறு மதில்கள் யாவும்
தேடுவார் யாருமின்றிச் சிதையுற்ற நிலைமை என்னே?

கூரைகள் இல்லா வீடு குனிந்துமே நிலத்தை நோக்கி
சீரையே யிழந்து நின்ற சிறுமையை என்னென் பேன்?
ஆரையோ கொண்டு செய்த அழகிய கதவு யன்னல்
யாரையு மறியாவண்ணம் ஓடியே மறைந்த தெங்கே?

பள்ளிகள் ஆலயங்கள் பயனுறு தாபனங்கள்
நள்ளிருள் சூழவாங்கு நலிவுறு நிலையில் நின்று
சுள்ளென மனதைச் சாடுந் துயர்நிலை கண்டபோது
தெள்ளமு துண்டதேவர் திகைத்துமே நிற்பரன்றோ?

இந்நிலை என்றுமாறும் இதயத்தி லீரமில்லார்
வந்துமே நின்று செய்யும் அழிவுகள் குறைவ தெந்நாள்?
செந்நிறமான பூமி செழித்திடும் நாளு மெந்நாள்?
எம் நிலை ''அகதி'' என்ற இழி நிலை எந் நாள் மாறும்?

வலிவடக்கின் வளமெல்லாம் வறண்டு பாழாய்ப் போக
பொலிவிழந்து, புதுமைமங்கும் மயானமாம் காட்சி கண்டு
தெளிவுகொள் சிந்தையராய்ச் சீராக்கம் செய்யுமொரு வழியைக் காண
வெளியுலகின் உதவிபெற்று விரைவாகச் செயற்படவே வேண்டுகின்றோம்.

மீளக் குடி யமர்த்த விரும்பு மதிகாரிகள் தாம்
வாழக் குடிமனைகள் வசதியில்லா நிலையறிந்து
நாளைக் கடத்தாமல் இழப்புகளை மதிப் பீடு செய்ததன் பின்
சாலக் கொடுப்பனவு தான் வழங்க மாட்டாரரோ?

- ''அள. வே. ஆ''

# நெஞ்சகலா நாள்கள்

பனைவடலியூடு
பகலவன்
பீதியற்று
எழுவான்.
பலா மரக்கிளையிலிருந்து
காகங்கள்
கவலையற்றுக்
கரையும்.
கூவும் குயில்களுக்குக்
குரல் கொடுக்க வென்றே
தூக்கம் கலையும்,
நிம்மதியான
காலைப் பொழுதுகள்.

பாட்டி காய்ச்சிய
பசுப்பால்
பனங் கட்டியுடன்
இதமாய் இருக்கும்.
பதற்றமற்றுப்
பள்ளி சென்று
துள்ளி வர
பட்டம் விடப்
பார்த்து நிற்பான் பாலா.
பந்தடிக்க
முந்தி வரும் மாலா.

தொலைவிலுள்ள
தோட்ட.த்திற்கே
குட்டித்
தோழிகளுடன் சென்று,
அங்கு
பட்ட தென்னையைக்
கொத்தும்
மரங் கொத்திகளை
எத்தனை நாள்
இரசித்திருப்போம்?

வேலியோர ஓணானுக்கு
வஞ்சகமற்றுத்
தலையாட்டியபடி
நிலவு வந்த பின்பும்
வீடு திரும்ப முடியுமே!

ஊர்த் திருவிழாவை
உணர்த்தும்
எங்கள்
குரும்பட்டித் தேர்
செல்லாத
குச்சொழுங்கைகள்
இல்லையே!

பூவரசமிலையில்
நாதசுரமிசைக்க,
எங்கள்
பூரதம் செல்வதை
யார்தடுப்பர்?
யாரின் கண்
பட்டதோ?
போர்க் கல்லு வீச்சில் எம்
ஊர்த் தேன் கூடு
சிதைந்ததே!

அயல் வீட்டு
அம்பி இல்லை.
பக்கத்து வீட்டுப்
பாப்பா இல்லை.
பட்டத்துக்கு
முச்சை கட்டும்
பாலாவின் கால்களை
மிதிவெடி
பதம் பார்த்த சோகம்
இன்னும்
ஆறவில்லை.

கோடி வீட்டுக்
கோபி
குண்டுத் தாக்கில்
பலியாகி விட்டான்.
கண்ணன்
காணாமற்
போய் விட்டான்,
குட்டித் தேருக்கு
வாழை நாரில்
வட மிடும்,
வரதன் கூட
அகதியாகி
வெளி நாட்டில்.

குமார்
குடும்பத்துடன்
கொழும்பில்.
கமலா கூட
கல்யாணமாகி
கனடாவில்.
சிறகுகளை
விரித்து விட்ட
உறவுகளை
எண்ணிப்
பயனேது?

வட்டமிடும்
வண்ணத்துப் பூச்சிகளை
பார்த்து
பெருமுச்சு விடுவதால்
வழியேது?
காலம் விரித்த
போர் வலையில்
கட்டுண்டு விட்டோம்.
கண்ணீர் வடிப்பதால்
விடிவேது?

- சிவாட்சயா சிவப்பிரகாசம்

# ஆச்சி; நீ கொடுத்து வைத்தவள்!

வண்டியில் நாங்கள் அன்று
வரிசையாய் நடந்த காட்சி,
கன்னியா ஊற்றில் உள்ளக்
குளிர்கெட...உலர்ந்த மாட்சி
கண்டியின் தென்றலோடும்
கவிதைகள் பறைந்த சாட்சி,
நெஞ்சிலே ... சட்டம் போட்ட
நிழற்படம் ஆனது ''ஆச்சி''!

திருவிழா இரவில் ஊரில்
திரிந்ததும், காதல் கூத்தும்,
பறந்துபோய் மச்சாள் வீட்டில்
படுத்ததும், ரெயிலில் ஊர்ந்து
ஒருதினத்துள்ளே தெற்கில்
அலுவல் பார்த் துடனே மீண்டு
வருவதும், காற்றாய் எங்கும்
அலைந்ததும் மறந்ததேனோ?

ஆயிரம் இதங்கள் அள்ளி
அருளிய வயல்கள்...இன்பப்
பாயிரம் இசைக்கும் எல்லைப்
பாற்கடல், புழுதிச் சாலை,
கோயில்கள், ஒழுங்கை, திண்ணை,
'கோமாவில்' ஊமை ஆச்சு!
வீமர் போல் பனைமரங்கள்
வீழ்ந்து எம் உரமும் போச்சு!

இரவிலே தெருவில் நின்று
எத்தனை நாள்கள்? பக்கத்
துறவினைக் காண நூறு
தொல்லைகள் தடைகள்; பட்டப்
பகலிலும் படலை தாண்டப்
பதறுது கால்கள்! இந்த
விறுத்தத்தில் அமைதி வேண்டி
அழுதென்ன செய்யும் பாக்கள்?

மனிதர்க்கு மட்டும் அல்ல
மாடுகள், மரங்கள் காற்று
அனைவர்க்கும் ஊரடங்கு!
ஆண்டவர்களுக்கும் 'ஆறு
மணிக்குமுன் அத்த சாமம்'!
விடிந்தபின் 'உதயபூசை'!
சுணங்கி அச் சிவனார் போனால்......
சுடப்படும் அவரின் லீலை!

கைதியைப் போலே வாடிக்
கரையுதெம் தேசம்! சாவின்
செய்தியைச் சீரணித்து
மரத்துச் சீரழியும் தேகம்!
பொய்களை நம்பி ஏங்கிப்
பொருமுதெம் ஆசை! எப்போ
பைத்தியம் பிடிக்குமோ? எப்
பழிசெய்தோம்? எமக்கேன் வாழ்க்கை?
''ஆச்சி''! நீ அன்றே போனாய்!
நிம்மதி அழியா தோய்ந்தாய்!
சூழ்ச்சியில் சிக்கா தோய்ந்தாய்!
சுகமெல்லாம் துய்த்தாய்! யுத்தக்
காய்ச்சலால் கருகா தாண்டாய்!
கால், கையை இழக்கா தோய்ந்தாய்!
''கூச்சல் பா, பறைகளோடு
போனாயே!'' கொடுத்து வைத்தாய்!

- அருணன்

---

# இழப்பு

காரிகையின் கூந்தலாகக்
க றுத்திருக்கும் வீதியிலே
கால்கடுக்க நடப்பவனே!
சற்று நில்!
உனக்கு ஒரு வார்த்தை
உரை[றை]க்கவேண்டும்!
தலைகள் வெட்டப்பட்ட
தற்கால ராவணன் நான்!
அதற்காக; எதையும்
அபகரித்தவனல்லன்!
யாரையும் அடிபணிந்து
யாசிக்கவுமில்லை!
என்னுடைய ''இருப்பிற்காக''
ஏங்கி நின்றவன்.
கருக்கும் வெயிலில்
கொட்டும் மழையில்
கடுக்கும் குளிரில்
காசுக்காகவா காய்ந்தேன்?
என் குளிர்ந்த நிழலில்
குந்தியிருந்தோர்க்கும்
கணக்கில்லை!
மரம் தானே என்ற
மதர்ப்புனக்கு
மதியற்றவனே!
ஐந்து பணத்துக்காக
அடியோடு வீழ்த்திவிட்டாயே?
உன் கொப்பனும் பெண்டிலும்
கூடிய காணியில்
குடிபுகுந் தேனா நான்?
இல்லையே!
என் அன்னை மண்ணிலல்லவா
அடி யெடுத்து வைத்தேன்!
நினைவிற்கொள்
நெறி கெட்டவனே!
தலை நிமிர்ந்த ஓர் இனம்
தனியொருவனின் இழப்பினால்
தரையிற் படுத்ததாகச்
சரித்திரம் இல்லை!
என்னை
உற்பவித்த 'பெருமரம்'
இன்னும் இருக்கிறது!
நாளை
இதே வீதியில்
எச்சங்கள் முளைக்கும்!
அப்போது
எனது இழப்பின்
அர்த்தம் புரியும்!
பொறுத்திரு!

- உடுவில் அரவிந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை மறுதினம் தேர்தல்

# பிற்படுத்தப்பட்ட மக்கள் சமூகத்தின் பிரதிநிதி
# இந்தியாவின் அடுத்த ஜனாதிபதியாகிறார்!

## உப ஜனாதிபதி பதவியில் அமர முஸ்லிம் பெண்ணுக்கு வாய்ப்பு?



ரி. என். சேஷன்

ஏதேனும் குறிப்பிடத் தக்க அரசியல் திருப்பு முனை ஏற்பட்டாலொழிய கொச்சோல் இராமன் நாராயணன் இந்தியாவின் அடுத்த ஜனாதிபதியாவதை — குடியரசுத் தலைவராவதை—எவராலும் தடுக்க முடியாது என்பதே பொதுவான கருத்து.

ஏற்கனவே நிச்சயமாகி விட்ட ஒரு விடயத்துக்கு நாளை மறுதினம் நடைபெறும் தேர்தல் சம்பிரதாய பூர்வமான ஒரு நிகழ்வு போலவே அமைகிறது.

இந்தியாவின் ஜனாதிபதித் தேர்தலில் அவ்வேளை பதவியில் இருக்கும் உப ஜனாதிபதியை வேட்பாளராக நிறுத்துவதே பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழக்கமாக உள்ளது.

இந்தியாவில் இதுவரை பதவியில் இருந்த பத்து ஜனாதிபதிகளில் நீலம் சஞ்சீவரெட்டி, கியானி ஜெயில் சிங் ஆகிய இருவரையும் தவிர ஏனையோர் முன்னர் உப ஜனாதிபதியாகப் பதவி வகித்து பின்னர் ஜனாதிபதிகள் ஆகியவர்கள் ஆவர். இதே போல் உப ஜனாதிபதியாகப் பதவி வகித்துள்ள எட்டுப் பேரில் ஜீ. எஸ். பதக், எம். ஹிதாயத்துல்லா, பி.டி. ஜட்டி ஆகிய மூவரைத் தவிர ஏனையோர் பின்னர் ஜனாதிபதிப் பதவிக்கு வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டு வெற்றியும் பெற்றனர்.

### காங்கிரஸ் பிளவுபட்டது

ஒரு சமயம் உப ஜனாதிபதியாக இருந்த வி. வி. கிரியைப் புறக்கணித்துவிட்டு நீலம் சஞ்சீவரெட்டியை காங்கிரஸ்கட்சி தனது ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்தது. இதனால் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட சலசலப்பு கருத்து மோதலாக மாறி இறுதியில் காங்கிரஸ் கட்சி, ஸ்தாபன காங்கிரஸ் என்றும் இந்திரா காங்கிரஸ் என்றும் இரண்டாகப் பிளவுபட்டது.

காங்கிரஸ்கட்சியின் பிரதமரான இந்திரா காந்தி கட்சி முடிவுக்கு மாறாக வி. வி. கிரியை ஆதரித்தார். 'மனச்சாட்சிப்படி வாக்களியுங்கள்!' என்று பகிரங்கமாகத் தனது கட்சியாளர்களுக்கு அழைப்பு விடுத்ததன் மூலம் கட்சி சார்பு வேட்பாளருக்கு எதிராகக் கட்சியினரைத் திருப்பினார். இதனால் காங்கிரஸ் வேட்பாளர் நீலம் சஞ்சீவரெட்டி தேர்தலில் தோற்றார். உப ஜனாதிபதியாக இருந்த கிரி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பல ஆண்டுகளின் பின்னர் நடந்த வேறு ஒரு ஜனாதிபதி தேர்தலில் நீலம் சஞ்சீவரெட்டி வெற்றி பெற்று ஜனாதிபதியானார் என்றாலும் —

வி. வி. கிரிக்கும் நீலம் சஞ்சீவரெட்டிக்கும் இடையில் நடந்த தேர்தல் போட்டி ஜனாதிபதித் தெரிவில் உப ஜனாதிபதிக்கு அளிக்கப்படும் முன்னுரிமையை விளக்க நல்லதோர் உதாரணமாகும்.

பஹ்ருதீன் அலி அஹமதின் திடீர் மறைவை அடுத்து பி. டி. ஜட்டி ஜனாதிபதியானார். 1977 முதல் 1979 வரையான ஜனதா ஆட்சியின் முதல் வருடத்திலும் அவர் அப்பதவியில் இருந்தார்.

அக்கால கட்டத்தில் 9 மாநிலங்களில் காங்கிரஸின் ஆட்சியைக் கவிழ்க்கும் உத்தரவில் கையொப்பமிட்டதால் ஆத்திரமுற்ற இந்திரா காந்தி அடுத்து வந்த ஜனாதிபதித் தேர்தலில் காங்கிரஸின் ஆதரவை நீலம் சஞ்சீவரெட்டிக்கு வழங்கினார்.

உபஜனாதிபதியாக இருந்த ஜீ.எஸ் .பதக் ஜனாதிபதி பதவிக்கு தாம் புறக்கணிக்கப்பட்டபோது பெரும் சர்ச்சையைக் கிளப்பினார். ஆனால் இதே நிலை உப ஜனாதிபதி ஹிதாயத்துல்லாவுக்கு ஏற்பட்டபோது அவர் கௌரவமாக விலகிக் கொண்டார்.

எவ்வாறெனினும் இந்தியாவில் புதிய ஜனாதிபதித் தெரிவு என்று வரும் போது அதற்குப் போட்டியிடும் தார்மீக உரிமை உள்ளவர்களாக உபஜனாதிபதிகள் கருதப்படுகிறார்கள்,

### வெற்றி உறுதி

இந்தவகையில் கே. ஆர். நாராயணன் உபஜனாதிபதி வேட்பாளராக என்று தீர்மானிக்கப்பட்டாரோ

**எஸ். ஐ. ஜித்**

அன்றே அவரது ஜனாதிபதிப் பதவிக்கும் அடித்தளம் இடப்பட்டு விட்டது.

எனினும் அண்மையில் காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரியின் ஆபத்தான அரசியல் சூதாட்டத்தினால் பதவியில் இருந்து இறக்கப்பட்ட முன்னாள் பிரதமர் எச். டி. தேவகௌடாவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க சிலர் திரை மறைவில் முயன்றனர் என்றாலும் முன்னர் குறிப்பிட்டது போன்றே இது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விடயமாதலால் நாராயணன் பெரும்பாலான கட்சிகளின் ஏகோபித்த ஆதரவுடன் வேட்பாளராகி விட்டார்.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட சம்பவம் சற்று சுவாரசியமானது.

### பி. ஜே. பியின் அரசியல் பேரம்

1992 இல் நடந்த இந்த ஜனாதிபதித் தேர்தலில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த ஒருவர் பொது கருத்தின் அடிப்படையில் ஜனாதிபதி வேட்பாளராக்கப் படவேண்டும் என வி. பி. சிங் உட்பட பலர் அழுத்தம் கொடுத்து வந்தனர். ஆனால் அப்போதைய பிரதமர் பி.வி. நரசிம்மராவோ சங்கர் தயாள் சர்மாவை வேட்பாளராக்கவே விரும்பினார். ஆனால் அப்போது சிறுபான்மை அரசாக விளங்கிய ராவின் அரசு தனது விருப்பத்தை நிறைவேற்ற முடியாத நிலையில் இருந்ததால் அதன் இயலாத தன்மையைப் பயன்படுத்தி அரசியல் பேரம் ஒன்றுக்கு பாரதீய ஜனதாக் கட்சி முயன்று பார்த்தது.



நஜ்மா ஹெப்துல்லா

ஜனாதிபதி வேட்பாளராக டாக்டர் சர்மாவைத் தாங்கள் ஆதரிக்க வேண்டுமானால் உப ஜனாதிபதியாகத் தாம் நியமிக்கும் ஒருவரை காங்கிரஸ் ஆதரிக்க வேண்டும் என பாரதீய ஜனதாக் கட்சி நிபந்தனை விதித்தது. இந்த இக்கட்டான கட்டத்தில் பிரதமர் ராவுக்கு கை கொடுத்து உதவ இடதுசாரிகள் முன்வந்தனர். இதனால் தங்களின் நெருங்கிய தோழரான வி. பி. சிங்கை அவர்கள் பகைத்துக் கொண்டனர். ஆனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரான ஒருவரை உப ஜனாதிபதியாக நியமிக்க வேண்டும் என்ற வாக்குறுதியை பிரதமர் ராவிடம் இருந்து பெற்றுக் கொண்ட பின்னரே இடதுசாரிகள் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவை ஆதரிக்க முன்வந்ததால் பாரதீய ஜனதாக் கட்சியின் அரசியல் தந்திரம் தோல்வி கண்டது. அதன்பின் டாக்டர் சங்கர் தயாள் சர்மா ஜனாதிபதியாகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த கே.ஆர். நாராயணன் உப ஜனாதிபதியாகவும் பதவிக்கு வந்தனர்.

இம்முறை இடதுசாரிகளையும் உள்ளடக்கிய ஆளும் ஐக்கிய முன்னணி, இந்திய தேசிய காங்கிரஸ் இரண்டுமே நாராயணனை ஜனாதிபதி வேட்பாளராகப் பிரேரித்தன. சென்ற முறை பேரம் பேச முயன்று மண் கவ்விய பாரதீய ஜனதாக் கட்சி இம்முறை நிலைமையை உணர்ந்து கொண்டு வெற்றிகரமாகப் பின்வாங்கி விட்டது. தானும் பின்னால் போய் நாராயணனுக்கு ஆதரவாக நியமனப் பத்திரத்தைக் கையளித்தது.



கே. ஆர். நாராயணன்

பிரதான தேசியக் கட்சி என்ற இடத்தை காங்கிரஸ் கட்சி இழந்துவிட்ட நிலையிலும் —

இதனால் ஏற்பட்ட வெற்றிடத்தினை வேறு எந்த தனிக் கட்சியாலும் நிரப்ப முடியாத நிலையிலும் —

இன்று சிறுபான்மை அரசாங்கங்களே இந்தியாவின் ஆட்சியை அமைத்து வருகின்றன.

பிரதமரும், மத்திய அமைச்சர்களும் மாநில

(IX ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய ஜனாதிபதித் தேர்தல் முறை

இந்திய ஜனாதிபதித் தேர்தல் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் அமைந்தது என்றாலும் அங்கு இலங்கையைப்போல் தமது ஜனாதிபதியை மக்கள் தாமே நேரடியாகத் தேர்ந்தெடுப்பதில்லை.

மக்கள் பிரதிநிதிகள் ஒன்று கூடி வாக்களிப்பதன் மூலம் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

அத் தெரிவு குறித்து அறிய முன்னர், இந்திய ஆட்சி முறையை நாம் சுருக்கமாக அறிந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களையும் ஆட்சி செய்வதற்கு ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு சட்டசபை உள்ளது.

இது தவிர, ஒட்டு மொத்தமாக இந்தியாவை ஆள்வதற்கு மத்திய அரசாங்கம் இருக்கும். மத்திய அரசின் ஆட்சிமன்றங்களாக இரண்டு உள்ளன.

ஒன்று நாடாளுமன்றம். மற்றையது இராஜ்யசபை.

இதில் நாடாளுமன்றம் முக்கியமானதும் அதிகாரம் கூடியதுமான அமைப்பாகும்.

நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்களை ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியிலிருந்தும் மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றார்கள்.

இதேபோல் மாநிலங்களில் ஆட்சி மன்றங்களாக விளங்கும் சட்டசபைகளின் உறுப்பினர்கள் தமக்குள் இடம் பெறும் வாக்களிப்பு மூலம் இராஜ்ய சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்கின்றனர். இதன் காரணமாக இராஜ்ய சபையை மாநிலங்களின் அவை என்றும் கூறுவர்.

அதாவது நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். இராஜ்ய சபைக்கு (மாநிலங்கள் அவைக்கு) உறுப்பினர்கள், மாநில சட்டமன்றங்களில் உள்ள மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டு பதவியில் இருக்கும் சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இராஜ்யசபை உறுப்பினர்கள் ஆகியோர் ஒன்று கூடி ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கின்றார்கள்.

ஆனால் இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் —

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் இந்த உறுப்பினர்களின் வாக்குகள் ஒவ்வொன்றும் ஒரு வாக்காகக் கணிக்கப்படுவதில்லை.

ஒவ்வொரு உறுப்பினரதும் வாக்குக்கு உரிய பெறுமதி வேறாகும்.

ஒரு மாநிலத்தில் உள்ள மக்கள் தொகைக்கும் அங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களினதும் விகிதத்துக்கு ஏற்ப அந்த மாநில சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வாக்கின் பெறுமதி கணிக்கப்படும்.

உதாரணமாக —

மேற்கு வங்க மாநிலத்தின் சனத்தொகை சுமார் ஆறரைக் கோடியாகும்.(ஆயிரங்களில் கணிப்பீடு செய்தால் 65,000 ஆயிரங்கள்) அங்குள்ள சட்டமன்றத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 280 எனவே 65,000 (வாக்காளர் எண்ணிக்கை ஆயிரங்களில்) என்ற இலக்கத்தை 280 ஆல் வகுப்பதன் மூலம் மேற்கு வங்க சட்டசபை உறுப்பினர் ஒருவரினது ஜனாதிபதித் தேர்தல் வாக்கின் பெறுமதி 232 எனத் தீர்மானிக்கப்படுகின்றது;

இதே அடிப்படையில் ஏனைய வெவ்வேறு சட்டமன்றங்களின் உறுப்பினர்களினது வாக்குகளின் பெறுமதியும் கணிக்கப்படுகின்றது.

அதுபோன்று நாட்டில் வாக்குரிமை பெற்றோரின் மொத்த எண்ணிக்கையின் அடிப்படையில் நாடாளுமன்றத்தின் 542 உறுப்பினர்களினதும் இராஜ்ய சபையின் 230 உறுப்பினர்களினதும் வாக்குகளின் பெறுமதி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சபைகளினதும் உறுப்பினர்கள் ஒவ்வொருவரினதும் வாக்கின் பெறுமதி 293 எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பெறுமதியின் அடிப்படையில் வாக்களிப்பின் பின் வாக்குகள் கணிக்கப்படும். ஐம்பது வீதத்துக்கு அதிகமான வாக்குப் பெறுமதியைப் பெறுபவர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார்.

ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் இரண்டுபேருக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் களத்தில் இருந்தால் —

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்களிப்பது போல மேற்படி சட்டமன்ற, நாடாளுமன்ற, இராஜ்ய சபை உறுப்பினர்கள் தமது முதலாம், இரண்டாம், மூன்றாம் தெரிவுகளைக் குறிப்பிட்டு வாக்களிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சஞ்சீவி சிறுகதை

# ஊர்வலங்கள் மீண்டும் வரும்...

**வதிரிமண் வாசன்**

''அக்காச்சி, அக்காச்சி .. சாப்பிட்ட வாய்க்குக் கொஞ்சம் வெத்திலை இல்லாமற் கிடக்கெடி, கொஞ்சந் தாவனடி சப்புவம்.''

''அக்காச்சி .. அடுப்பிலை கறி பொங்குதெடி, ஒரு மூடி தூள் இருந்தாத்தாடி, பேந்து இடிச்சுப் போட்டுத் தாறன்.''

''அக்காச்சி ...... புதுப்பாயேதும் இழைச்சு வைத்திருந்தால்த்தாடி, பேந்து காசு தாறன். உன்னாணை கிடந்த பாயெல்லாம் நார் நாரா இத்துப்போச்சு. என்ரை குஞ்சு குருமனுகள் விடிய விடிய சிமெந்து நிலத்திலை கிடந்துறுண்டு ரத்தம் வத்தப் போகுதடி.''

''எடியே அக்காச்சி ...... உன்னாணை சொன்னா நம்பமாட்டா: வாயுக்கை போட்ட வெத்திலையோடை ஆத்துப்பறந்தோடி யாறன். ஒரு நுள்ளுச் சுண்ணாம்பு தாடி.''

''எடி அக்காச்சி ... உன்னாணை நாலு நாளா நாய் பேயா அலைஞ்சு திரியிறன். ஒரு சாதிசனமும் ஏன் நாய் எண்டு கூடக் கேக்கின மில்லை. ஒரு பொருளொண்டு கொண்டுவந்தனானடி. எங்கையேனும் உனக்குத் தெரிந்த இடத்திலை அடைவு வைச்சுத் தாவனடி.''

யார் இந்த அக்காச்சி? நேற்றுவரை வாழ்க்கையோடு எதிர் நீச்சல் போட்டு வாழ்ந்தவள். இன்று உயிரோடு இருந்தும் மறக்கப்பட்ட மானிடத்தின் ஒரு உதாரணமாகத் திகழ்பவள். அவள் இந்த ஊரைச் சேர்ந்தவளல்ல. அயலூரவள். இருந்தாலும், வறுமையோடு எதிர்நீச்சலடித்து நேற்று வரை இந்த ஊரில் வாழ்ந்தவள். கல்வி என்றால் கிலோ என்ன விலை என்றுகேட்குமளவுக்கு அவள் பாடசாலைப் பக்கமே தலை நீட்டிப் படுக்காதவள். இருந்தாலும் தனது பகுத்தறிவு, முயற்சி, தன்னம்பிக்கை என்பவற்றை ஆயுதமாகக் கொண்டு வாழ்க்கையோடு போராடி இந்த ஊர் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவள். ஊரிலுள்ள சிறார்கள் முதல் முதியவர்கள் வரை அவளை செல்லமாக ''அக்காச்சி'' என்றுதான் அழைப்பார்கள். உண்டோ, இல்லையோ, உதவி நாடி வருபவர்களுக்கு அவள் என்றுமே இல்லை என்று கூறியது கிடையாது. வறுமை ஒரு பக்கமும் தளர்ந்து நடைப் பிணமாகிவிட்ட கணவனோடு கூடிய வாழ்க்கைச் சுமை இன்னொரு பக்கமுமாக இருவேறு கொடிய சவால்களுக்கு துணிவோடு முகங் கொடுத்து அவள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையானது அற்ப காரணங்களுக்காக வாழ்க்கையில் விரக்தியடையும் எம்போன்ற குறுகிய மனப்பான்மையுடைய மனிதருக்கு ஒரு தகுந்த பாடமாகும்.

இந்த அக்காச்சி பிறக்கும் போத வறுமையும் அவளோடு சேர்ந்து இரட்டைக் குழந்தைகயாகப் பிறந்து விட்டது. உருவத்தில் கட்டையானவள்; மாரிகாலப் பனை போல் இருண்டு கறுத்த மேனி; சப்பென்று உப்பிய முகமும் இருண்டு வெளித் தள்ளிய விழிகளோடு கூடியது மான ஒரு ஆபிரிக்கத் தோற்றம்; பார்ப்பதற்கு அப்பாவித் தனமான ''குடு குடு'' வென்ற ஒரு விறுவிறுப்பான நடை. இத்தனைக்கும் மத்தியிலும் அவளது மனம் வெள்ளை என்பது மனித நேயங்கொண்ட எவருக்கும் புரியும். அயலூரவளாக இருந்த போதிலும் இந்த ஊரில் நடைபெறும் எந்த வொரு நிகழ்ச்சியிலும் கூசாமல் உரிமையோடு கலந்து கொள்ளுமளவுக்கு அவள் இந்த ஊர்மக்கள் மனங்களில் இடம்பிடித்திருந்தாள்.

இந்த ஊர் மக்களோடு நட்பை வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் தனது வறுமை ஒரு தடையாக இருக்க அவள் என்றுமே அனுமதித்ததில்லை. இதனால்தான் அவள் தான் நடாத்திய சில்லறைக் கடைக்கு வந்து சேரவேண்டிய ஒரு சில அஞ்சு பத்துக்களைக் கூட தண்ணீரிலை எழுதின காசாக விட்டிருந்தாள். கொடுக்கல் —வாங்கல்களில் ஏற்படும் தகராறுகள் மக்களின் நட்பைப் பாதித்து விடும் என்பதற்காக இப்படியான ஓரிரு சில்லறை இழப்புக்களையும் அவள் பொறுமையோடு தாங்கிக் கொண்டாள்.

அக்காச்சியின் திருமணத்தைப் பொறுத்தவரை அது ஒரு விபத்து என்றுதான் கூறவேண்டும். அக்காச்சியின் பெற்றோரின் வறுமையும் அக்காச்சியின் உருவத் தோற்றமும் அவளை கல்யாணச் சந்தையில் விலை போகாத ஒரு நிரந்தரச்சரக்காக ஆக்கியிருந்தன.

தனது பெற்றோரின் வறுமை நிலையுணர்ந்து அக்காச்சியின் மனம் பொறுக்கவில்லை. அக்காச்சி சிறு வயதில் மழைக்குக்கூட பள்ளிக் கூடத் தாழ்வாரத்தில் ஒதுங்கித் தெரியாதவள். ஆனால் கலையார்வமுள்ளவள். நாடகங்கள், நாட்டுக் கூத்துகள் பார்த்து இரசிப்பதில் அவளுக்கொரு தனியான ஆர்வம். அந்தக்காலம் நாட்டுக் கூத்தில் பல கலைஞர்கள் கொடிகட்டிப் பறந்த காலம்.

காங்கேசன் துறையிலை வயிரமுத்தற்றை நாடகம் பார்ப்பதற்கு வதிரீலையிலிருந்து வண்டில் பூட்டின காலம். அக்காச்சியின் இந்தக் கலையார்வம் அவளைப் படிப்படியாக மேடை வரைக்கும் கொண்டு போய்விட்டது.

அவளது ஆற்றலையும் குரல்வளத்தையும் கண்டு கவரப்பட்ட அந்தக்காலத்து சில நாடக அண்ணாவிமார்கள் அவளை மேடை வரைக்கும் கொண்டுபோய் விட்டார்கள், அக்காச்சியும் மறுப்பேதும் தெரிவிக்காமல் உடன்பட்டாள். ஏதோ தன்ரை குடும்பத்துக்கு ஒரு நேரக் கஞ்சிக்காவது நாலு வெள்ளைச் சல்லி தேறும் எண்ட நம்பிக்கையிலதான். அப்போதுதான் எங்கடையூர் அண்ணாவி வேலுப்பிள்ளையின்ரை தொடர்பு அவளுக்கு ஏற்பட்டது. கலைத் தொடர்பு காதல் தொடர்பாகப் பழுத்து முற்றியது.

வேலுப்பிள்ளை அண்ணாவியார் இயற்கையாகவே கொஞ்சம் ''வீக்'' கானவர். ஏற்கனவே ரெண்டு மூண்டு ''கட்டி விட்டவர்'' எண்டு ஊரிலை பரவலான ஒரு கதை. விஷயம் அக்காச்சியின்ரை தாய், தகப்பனின் காதுகளுக்கு எட்டியது. அவையும் வேறுவழியில்லாமல் அறுபது வயது வேலுப்பிள்ளையருக்கும் முப்பது வயது அக்காச்சிக்கும் பதிவுத் திருமணம் செய்து வைச்சிட்டினம். வேலுப்பிள்ளையரும் கையோடை பெட்டையை இந்த ஊருக்குக் கூட்டியந்திட்டார்.

அடிச்சானாம் பிறைஸ்! அடியடாபிறப்படலையிலை!! அக்காச்சிக்கும் அண்ணாவியாருக்கும் இரண்டு பெண் பிள்ளைகளும் இரண்டு ஆண் பிள்ளைகளும் பிறந்தன.

குடும்பம் பெருக்கவே அக்காச்சியும் உசாரானாள்.

தானொரு பெண்ணென்றும் பாராது கடுமையான உடலுழைப்பில் ஈடுபட்டாள். சில்லறைக் கடை, பாய், பெட்டி வியாபாரம், பலகார வியாபாரம், பனங் கட்டி, பினாட்டு என்று தனது சக்திக்கும் மீறிச் சம்பாதித்து நாலைந்து சீவன்களைக்கொண்டு இழுத்தாள்.

வேலுப்பிள்ளையர் நடைப் பிணமானார்.

உடலிச்சை தீரவே அவரது உடலியக்கமும் ஸ்தம்பித்துப் போனது.

அக்காச்சி தனது நீண்ட தூரத் தேவைகளுக்காகச் சைக்கிள் ஓடவும் கற்றுக் கொண்டாள்.

பஷனுக்காகப் பெண்கள் சைக்கிள் ஓடப்பழகிய காலத்திலை அக்காச்சி பாய், பெட்டி வியாபாரத்துக் கெண்டே குறுகிய காலத்துக்குள் அதைக் கற்றுக் கொண்டவள்.

சும்மா சொல்லக்கூடாது சந்நதி, வல்லிபுரக் கோயில் தேர், தீர்த்த காலங்களில் அக்காச்சியின் பாய்' பெட்டி, குண்டான்களுக்கு ஒரு டிமாண்டுதான். ''ஸ்ரொக்'' முடிஞ்சாலும் பிள்ளையளை இடத்திலை விட்டுவிட்டு சைக்கிளிலை வேர்க்க விறுவிறுக்க வீட்டுக்கு ஓடியந்து எடுத்துக்கொண்டு போவாள். யாவாரமுமெண்டால் சொல்லத்தேவையில்லை. வைன் குடுத்து விட்ட பொம்மை மாதிரி பெட்டை சுழண்டு சுழண்டு கோயிலிலை நிப்பள்.

அது ஒரு சிறிய வளவு.

அந்த வளவின் எல்லைகளை வரையறுக்கும் ஒரு சில வளர்ந்த பூவரசு மரங்கள். வளவினுள்ளே வைகாசிக் காற்றுக்கு அங்குமிங்கும் சலசலத்தோடும் காய்ந்த பூவரசமிலைச் சருகுகள். அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படும் துருப்பிடித்த பழைய பாத்திரங்கள். நைந்துபோன பழைய துணிகள் — இடிந்து போன மண் சுவர்கள்.

அந்த இடிந்துபோன மண் சுவர்களுக்கு மேலாக என்றோ ஒரு நாள் தனது வீட்டுகாரி வருவாள் வருவாள் என எதிர்பார்த்து ஏங்கிநிற்கும் கூரையில்லாத வெற்றுத் தூண்கள். ஆம்! இவைகள் மட்டுந்தான் இப்போது அக்காச்சி குடும்பம் இந்த ஊரில் ஒரு காலத்தில் வாழ்ந்தது என்பதை நினைவூட்டும் ஞாபகச் சின்னங்கள்.

அந்த வளவின் அருகாகப் போய்வரும் மனித நேயங் கொண்ட எவரும் அந்த வளவின் சோகக் காட்சியைக் கண்டு மனம்நோகாதிருக்கமாட்டார்கள்.

அவள் வந்தாள். வாழ்ந்தாள். போனாள் என்ற அடிப்படையில் மட்டும் சிந்திக்கும் கல்நெஞ்சக்காரருக்கு இந்த உண்மை புரியாது.

அக்காச்சி இப்போது எங்கே? அவள் குடும்பத்தோடு வன்னிக்குப் போய் ஒரு வருடத்துக்கும் மேலாகி விட்டது.

இந்த ஊரவர்களின் சில்லறைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கற்பகதருவாக விளங்கிய அவளின் வீடு இப்பொழுது பொலிவிழந்து, [illegible] இழந்து கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. அயல் வீட்டுப்பெண்களின் மாலைநேர அரட்டைக்களமாக விளங்கிய அக்காச்சி வீட்டு விறாந்தை இப்போது கறையான் புற்றெடுத்த நிலையிலுள்ளது. இளம்பெண்கள் மட்டுமல்ல, முற்றிப்பழுத்த மூதாட்டிகளுக்குக்கூட மாலை நேரங்களில் அக்காச்சியோடு நாலு வம்பளப்பதில் ஒரு திருப்தி. ''எணே பொன்னாத்தை...... இந்தப் பொழுதுபட்ட நேரத்திலை எங்கெயெணை குடுகுடெண்டோடுறாய்?''

''இல்லை மோன. அவசரத் தேவையாகப் போறன். உதிலை அடிப்படலேக்கை நிண்டு உவள் அக்காச்சிக்கு ஒரு கதை சொல்லிப்போட்டோடியாறன்.''

இதேபொன்னாத்தைதான் வேலுப்பிள்ளையாரும் அக்காச்சியும் புதுமணத்தம்பதிகளாக இந்த ஊருக்குப் புதுசாக வந்தபோது ஒரு சில குத்தல் கதைகளைச் சொல்லி அக்காச்சியின் மனதைப் புண்படுத்தியவள். ''உவள் பெட்டைக்கென்ன மதியம்திரும்பிப் போச்சுதே... போயும் போயும் உந்த அறுபது வயது அறுதலிமோனைப் போய் அண்டம் பிடிச்சிருக்கிறாளே — உந்த அடங்காப்பிடாரியோடை. உவள் பெட்டை எப்பிடிக் காலந் தள்ளப்போறாள்?'' இப்படிப் பலதும் பத்தும் பேசிய பொன்னாத்தை கூட காலத்தின் தேவையால் அக்காச்சியோடு சினேகிதம் கொண்டிருந்தாள்.

அக்காச்சி வன்னிக்குப் போகும் போது வீடும் வளவும் உருப்படியாகத்தானிருந்தன. ஆனால் அவள் போனபிறகு சிவராசாச் சட்டம்பியார் ஒன்றையும் விட்டு வைக்கவில்லை. பட்டதடி முதற்கொண்டு பெட்டகம் வரை அனைத்துத் தட்டு முட்டுச்சாமான்களையும் அபகரித்துச் சென்றுவிட்டார், சிவராசாச் சட்டம்பியார் வேலுப்பிள்ளையரின் மைத்துனராதலால் அவரைத் தட்டிக்கேக்க எவரும் முன்வரவில்லை,

அக்காச்சி குடும்பம் இப்ப வன்னி மண்ணிலை எங்கை, எப்பிடி இருக்கெண்ட விபரம் ஊரவர்கள் எவருக்கும் தெரியாது. ''தெரியாது'' என்று சொல்வதை விட தெரிந்துகொள்ள எவரும் முயற்சிப்பதில்லை என்று சொல்வதே பொருந்தும்.

சட்டம்பியாருக்குக் கூட அதுதெரியாது. தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் அவருக்கில்லையாதலால் அவரும் அதைத் தெரிந்து கொள்ள முயற்சிப்பதில்லை. வேலுப்பிள்ளையர் வன்னியில் மலேரியா வந்து செத்துப் போனார் என்ற ஐந்து மாதத்துக்கு முந்திய செய்தியைத்தவிர வேறெதுவும் ஊர்ச்சனங்களுக்குத் தெரியாது.

வேலுப்பிள்ளையர் நாடகத் துறையிலை அந்தக் காலத்தில் ஒரு பெரிய அண்ணாவியார். அந்தக் காலத்தில் வீ. வீ வைரமுத்துவுக்கு இடக்கை வலக்கையாகக் கருதப்படக்கூடிய ஒரு கலைஞன். அதுமட்டுமல்ல. அவர் அந்த காலத்தில் ஒரு பிரபல்யமான கரப்பந்தாட்ட வீரன்.

ஒரு அதிபார ''டாஷர்''. அதனால் விளையாட்டுத் துறையிலை அந்தக்காலத்தில் ஈடுபாடுகொண்ட அனேகர் அவரை ''டாஷர் வேலுப்பிள்ளை'' என்றும் அழைத்தனர்.

வேலுப்பிள்ளையர் அந்தக் காலத்தில் நெற்றுக்கு மேலாலை எழுப்பி ஒருக்கால் ''டாஷ்'' பண்ணி விட்டாரேயெண்டால்எதிர்ப் பக்கத்தில் நிற்கிற ஆறு பேருக்கும் வயிற்றாலை போகும்.

அந்தளவுக்கு அமெரிக்கன் கிரோஷிமாவிலை வெடி குண்டு போட்டமாதிரி ஒரு அதிபார அடி.

வேலுப்பிள்ளையரை நோக்கி பந்து உயர்ந்து வந்தால் போதும் உடனே ரசிகர்கள் மத்தியிலிருந்து ''வேலம்மான் டாஷ் இற்'', ''வேலம்மான் டாஷ் இற்'' என்ற உற்சாகக் குரல்கள் எழும்பிவிடும். உடனே வேலுப்பிள்ளையரும் உஷாராக ஒரே எழும்பாக எழும்பி ஓர் உச்சி அறை கொடுப்பார். அடியெண்டா அடி தான். சும்மா இடிவிழுந்தது மாதிரி இருக்கும். ஒவ்வொரு அடியும் அப்படியே குறிதவறாமல் ''ஒண் தலைனிலை'' விழுந்து ''தேட் லைனிலை'' நிற்கிற மூண்டு பேரையும் போட்டுச் சிப்பிலியாட்டும். இப்படியாக அவருடைய விளையாட்டுச் சாதனைகளைப்பற்றிப் பழையாட்கள் பேசிக்கொள்வார்கள்.

சிவந்தமேனி: கட்டுமஸ்தான உடல்; உயரமான தோற்றம்; முறுக்கேறிய வலியகரங்கள்; பார்ப்போரை வசீகரிக்கும் அழகிய முகத்தோற்றம்; இப்படியாக வேலுப்பிள்ளையருடைய இளமைத்தோற்றத்தைப் பற்றியும் அவர்கள் பேசிக் கொள்வர்.

ஆள் ''வொலி போலிலை'' விசிலூதிறதிலையும் வலு கெட்டிக்காரனாம். ஜட்ஜ்மென்ட் ஒவ்வொன்றும் வெட்டொண்டு துண்டு ரெண்டாக இருக்குமாம். ஒருத்தரும் பிழைபிடிக்கேலாதாம். தப்பித்தவறி ஆராவது ஏதும் இசக்கு பிசகுப்பட்டால் உடனே கிறவுண்டைவிட்டு வெளியே போகவேண்டியது தான்.

அல்லது எதிர்ப்பக்கத்துக்கு உடனே வெற்றியை வாரிக் குடுத்துவிடுவாராம். அப்பிடி ஒரு கண்டிப்பான மத்தியஸ்தர்.

''சீமான்ரை உடல்வாளிப்பிலை மயங்கித்தானே ரெண்டுமூண்டு எடுத்த எடுப்பிலை வந்து விழுந்திருக்குதுகள்''—இப்படியாக இளைஞர்களும் அவரது இளமைத் தோற்றத்தைக் கற்பனை செய்து தங்களுக்குள் பேசிக் கொள்வர்.

பழைய விளையாட்டு வீரர்கள் இறக்கும்போது ஊர் மைதானத்தில் கழகக் கொடியை அரைக் கம்பத்திலை பறக்கவிடுவது ஊரவரின் வழக்கம். ஆனால் வேலுப்பிள்ளையர் வன்னியில் இறந்து போனார் என்ற செய்திகேள்விப்பட்டும் ஊரிலை அப்படியொரு அஞ்சலி நடந்ததாகத் தெரியவில்லை.

ஒருவேளை அவர் வன்னியில் செத்தபடியாலை கழகத்தின் வன்னிக்கிளை அவருக்கு வன்னியில் கொடியிறக்கியிருப்பினமோ?

இந்த நியாயங்களை எல்லாம் யார் பாருங்கோ தட்டிக்கேக்கிறது?

நாதன்ண்ணை இடைக்கிடை அந்த வளவுப் பூவரசில் குழையறுக்க வருவார்.

அவரும் வேலுப்பிள்ளையருடைய ஒரு உறவினர் தான். அவர் குழையறுக்க நடந்துவரும் பாணியே ஒரு தனியழகு. வலக்கையில் கொக்கத்தடியும், இடக்கையில் கத்தியுமாக ஒரு சிறு புன்சிரிப்போடு மிடுக்காக நடந்து வருவார்.

மேலங்கியைக் கழற்றி மரக் கிளையில் போடுவார். விறுவிறு என்று குழைகளை அறுப்பார்; கட்டுவார்; கொண்டு

(X ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைத்

**மு. சிவநேசன்**

உலக நாடுகளை இன்று ஆட்டிப்படைக்கும் பல சவால்களில் போதைப் பொருள்களும் பிரதான பாத்திரத்தை வகிக்கின்றன. அமெரிக்காவுக்கே பெரும் சமூக, பொருளாதார சிக்கல்களை உருவாக்க இவை காரணம் ஆகின்றன என்றால் ஏழைநாடுகளின் கதி என்னாகும்?

மனித சமுதாயத்தின் கலாசாரத்தை — அமைதியை — சீரழித்து, வேகமாகப் பரவிவரும் போதைத் தீ உலகினை ஒரு வைக் கோற்போர் எனக் கருதி பற்றி வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த பெருமளவில் நிதியினை ஒதுக்கி உலக நாடுகள் பெரும் எடுப்பில் மேற்கொள்ளும் முயற்சிகள் 'சாணேற முழம் சறுக்கும்' வகையிலேயே அமைகின்றன.

கட்டுப்பாடுகள் அதிகரிக்க, அதிகரிக்க இவற்றின் விலையும் மதிப்பும் மற்றும் கடத்தல் வியாபார நுட்பங்களும் உயர்ந்து வருகின்றன. களவான வழிகளால் பரிமாற்றப்படும் போதைப் பொருள் வியாபாரத்தினால் விளையும் கள்ளச் சந்தைப்பணப் புழக்கம் நாடுகளின் அந்நியச் செலாவணி நிலைமைகளைப் பாதிப்புக்குள்ளாக்கி விடுகின்றது.

இந்தப்போதைப்பொருள்கள் எவையெவை? எங்கிருந்து கிடைக்கின்றன? ஏன் பலரும் இவற்றை விரும்புகிறார்கள்? இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் எப்படிப்பட்டவை..? என்றெல்லாம் ஆராயாமல் இருக்க முடியாது.

இந்தச் சமூகத்திலும் இவை புகுந்து விட்டால் எமது நிலைமைஎன்னாகும்? எமது பண்பாட்டை — தனித்துவத்தை — அமைதியான வாழ்வை—பொருளாதாரத்தை — எல்லாம் இழக்க நேரிடும். எனவே வெள்ளம் வரமுன்பே அணைபோட வேண்டிய நிலைமை.

## வெற்றிலையும் புகையிலையும்

வெற்றிலையும் புகையிலையும் எமது பண்பாட்டுடன் இரண்டறக் கலந்து நிற்கின்றன. சில வீடுகளில் வெற்றிலை போடுபவர்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கப் படுவதும் உண்டு. தொடர்ந்து வெற்றிலை பாவிப்பது ஆரோக்கியத்துக்கு உகந்தது என்று ஒருசாராரும், புற்றுநோய் போன்ற ஆபத்தை அது உருவாக்கி விடுகிறது என ஒரு சாராரும் கருதுகின்றனர்.

எதுவானாலும் வெற்றிலை போடும் பழக்கம் எமது சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கெட்ட பழக்கம் என்றால் மிகையாகுமா......?

இதைப் போலவே உலகின் பல பாகங்களிலும் பல வகையான — பாரம்பரியத்துடன் இணைந்த — பயிர்கள் தென்படுகின்றன. இவற்றை மன ஆறுதலுக்ாகவும், களைப்பு, உடல் வலி, வேதனைகளைப் போக்கவும் மருத்துவத் தேவைகளுக்காகவும் மனிதன் காலாங் காலமாகப் பயன்படுத்தி வந்திருக்கிறான்.

இந்தியாவிலும் மற்றும் ஆசியப் பிரதேசங்கள் பலவற்றிலும் கஞ்சா பயிரிடப்பட்டு வந்துள்ளது. இது சட்ட பூர்வமாக மூலிகைத் தேவைகளுக்காகவும், களவாக பெருமெடுப்பில் காடுகளில் போதைத் தேவைகளுக்காகவும் வளர்க்கப் படுகிறது.

தென் அமெரிக்க நாடுகளான கொலம்பியா, பெரு, பொலீவியா, ஆர்ஜென்ரீனா போன்றவற்றில் அன்டீஸ் மலைத்தொடரின் கிழக்குச் சாரல்களில் பெருமளவு கொக்கா (Erythroxylum Coca) செடிகள் காணப்பட்டன. இப் பிரதேசத்தில் மேற்கிந்தியர்கள் இந்த இலைகளை நீண்ட காலமாக வெற்றிலை போலச் சப்பி வந்துள்ளனர்.

மருத்துவ மூலிகையான பொப்பி (Poppy — papaver somni ferum) துருக்கி, ஆப்கான் போன்ற சில நாடுகளில் சட்டபூர்வமாகவும் வேறுபல நாடுகளில் களவாகவும் பயிரிடப் படுகின்றது. இவற்றில் இருந்தே இப்போதைய வரலாறு ஆரம்பிக்கின்றது.

இப்பாரம்பரிய பயிர்களை அழிக்கவும் முடியாமல் விட்டுவைக்கவும் முடியாமல் இன்று அரசுகள் திண்டாடுகின்றன. மேலும் இவை அரசுகளுக்கும், விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் பெருமளவு வருமானத்தை ஈட்டித்தருகின்றன.

## நரம்புகளை சுண்டி இழுக்கும்

தாவரங்கள் சிலவற்றில் காணப்படும் அல்க்கலோயிட்டுக்கள் (Alkaloids) எமது நரம்புகளைச் சுண்டி எழுப்பிவிடும் தன்மை கொண்டவை. இவை இயற்கையில் மிகச் சிறிதளவாகவே தென்படுகின்றன. தேயிலையிலும் கோப்பியிலும் காணப்படும் கபின் ((Caffeine), கொக்காச் செடியில் உள்ள கொக்கெயின் (Cocaine) பொப்பிச் செடியில் காணப்படும் மோபீன் (Morphine), புகையிலையில் காணப்படும் நிக்கொட்டீன் (Nicotine) என்பன இந்த அல்கலோயிட் வகையை சார்ந்தவை. எனவேதான் இத் தாவரங்கள் மருத்துவ முக்கியத்துவம் பெறத் தொடங்கின.

விஞ்ஞான ஆராய்ச்சிகளின் வேகமான முன்னேற்றம் இவற்றை எல்லாம் இயற்கையாக விட்டு வைக்கவில்லை. வைத்திய துறையில் மயக்க மருந்துத் தேவைகள் ஏற்பட்ட போது இந்த மூலிகைகளில் இருந்து அல்க்கலோயிட்டுக்



**கலவையைப் பிழிந்து சாறை எடுக்கும் முயற்சியில் ஒருவர்.**

களை தனித்துப் பிரித்தெடுக்கும் தொழில் நுட்பம் அபிவிருத்திகாணத்தொடங்கியது.

1855 இல் ஜேர்மனிய விஞ்ஞானியான Gaedcke என்பவர் கொக்கா செடிகளில் இருந்த அல்க்கலோயிட்டான கொக்கெயினை (Cocaine) தனித்துப் பிரித்து எடுக்கும் முயற்சியில்வெற்றி பெற்றார். சிகிச்சைகளுக்குத் தேவையான மயக்க மருந்தாக இது அப்போது பாவிக்கப்பட்டது. இதைப் போலவே பல்வேறு மருத்துவ மூலிகைகளில் இருந்து அவற்றின் சக்திவாய்ந்த அம்சங்கள் பிரிக்கப்பட்டு, செறிவாக்கப்பட்டு பயன்படுத்தப் பட்டன. நீண்ட கால பாவனையின் போது இவற்றின் பாதகமான விளைவுகள் கண்டுபிடிக்கப் பட்டபோது இவை மருத்துவத் துறையினின்றும் விலக்கி வைக்கப்பட்டன.

எனினும் அவை போதை நோக்கங்களுக்காக பயன்படத் தொடங்கிவிட்டமை காரணமாக சந்தையில் பரபரப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

எப்போதோ ஒரு நாள் தேவைப்படும் சிகிச்சைகளுக்கே இதைப்பயன்படுத்த மருத்துவர்கள் பின்நிற்கும் போது, தினம், தினம் அளவுகணக்கின்றிஇவற்றை பயன்படுத்தும் மனிதனின் அறிவை என்னென்பது? சிலர் கபீன் தாக்கத்துக்கே பயந்து தேநீர், கோப்பியை பருகாமல் காலங்கழிப்பதையும் நாம் காண்கிறோம். இயற்கையில் சிறிதளவே செறிவின்றி காணப்படும் நிக்கொட்டீன் புற்று நோயை தந்து விடலாம் எனப் பலரும் புகையிலையினைப் பயன்படுத்தத் தயங்குகிறார்கள்.

## கொக்கெய்ன்

தென் அமெரிக்காவின் பெரும்பகுதிகளில், அதுவும் அன்டீஸ் மலையின் கிழக்குச் சாரல்களில் பெருமளவில் கொக்காச் செடிகள் பயிரிடப்படுகின்றன. அப்பிரதேச மக்களின் வாழ்க்கையில் பல தலைமுறைகளாக இணைந்து நிற்கும் இப்பயிரை விளைவிப்பதை சட்டங்கள் போட்டுத் தடுப்பது மனித உரிமைகளை மீறுவது ஆகிவிடும் என்ற தயக்கம் அந்தந்த நாட்டு அரசுகளிடம் தென்படுகிறது. இவை தேநீரில் ஆரோக்கியம் கருதி சேர்க்கப்பட்டும் வந்துள்ளன.

மூன்று அடி உயரம் வளரும் இச் செடியின் இலைகளில் இருந்து கொக்கெயினை தனித்துப் பிரிக்கும் நடவடிக்கைகள் களவாகவே மேற்கொள்ளப்படுகின்றன. பாதமாகப் பறித்தெடுக்கப்பட்ட இலைகள் வெயிலில் உலர விடப்பட்டு நீரும் மண்ணெண்ணெயும் கலந்து ஊறவிடப்பட்டு அதிலுள்ள கொக்காப்பசை பிரித்தெடுக்கப்படுகிறது.

இப்பசை பல ஆய்வுகூட நடவடிக்கைப் படிமுறைகள் மூலமாக சல்பியூரிக்அமிலம், பொட்டாசியம் பேர் மங்கனேற், மண்ணெண்ணெய் போன்றவற்றின் உதவியுடன் தூய்மைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறது.

300 கிலோ இலைகளில் இருந்து 3கிலோ பசையினை மட்டும் பெறுவதற்குள் போதும் போதுமென்றாகி விடும். அதிலிருந்து ஒருகிலோ சுத்தமான கொக்கெயினை மட்டுமே பெற முடியும். ஆனால் விலைப் பெறுமானத்தின்படி பார்க்கப் போனால் 1 டொலர் பெறுமதியான இலைகளில் இருந்து 3 டொலர் பெறுமதியான கொக்காப் பசையினை வேறாக்கிவிட முடியும். இதிலிருந்து பெறப்படும் கொக்கெயின் நியூயோர்க் நகரத்தில் 300 டொலர்களை தாண்டி விடும் என்றால் இது எவ்வளவுக்கு முதல் இல்லாத வியாபாரம் எனத் தெரிந்து கொள்ளலாம்.

## உற்பத்திச் சாதனை

1970 இல் பல பிரபல கேடிகள் தமது வழமையான கொலை, கொள்ளை, வாகன கடத்தல், வீடுடைப்பு போன்ற துறைகளைக் கைவிட்டு கொக்கெயின் வியாபாரத்துக்குள் புகுந்தனர். பெரு, பொலீவியா போன்ற தென் ஆபிரிக்க நாடுகள் உலக உற்பத்தியில் 90% கொக்கெயினை தயாரிக்கின்றன என்பதால் இவர்களின் கவனமும் இந்த நாடுகளில் திசைதிரும்பிவிட்டது. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தையும், சிறியரக விமானங்களையும் வாங்கி சொந்தமான பயிரிடுகை, உற்பத்தி, தொழிற்சாலை, பாதுகாப்பு நடவடிக்கைகள், விமான ஓடுபாதை என்பவற்றை தயார்ப்படுத்திக் [illegible] அளவுக்கு இவர்கள் பெரிய புள்ளிகள். இப்பிரதேசங்களில் கிலோ 7,500 அமெரிக்க டொலருக்கு வாங்கக்கூடிய கொக்கெயினின் விலை நியூயோர்க், மியாமி, கலிபோர்னியா போன்ற நகரங்களில் 35,000டொலரையும் எட்டுகிறது.

## வியாபாரத்தின் விளைவு

ஆக 120 மில்லியன் அமெரிக்க டொலர் மட்டுமே பெறுமதியான 747 ரக ஜெட் விமானம் ஒன்று இக் கடத்தல் சேவையில் ஈடுபட்டபோது, 600 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான—சில பெட்டிகளில் அடைக்கப்பட்ட— கொக்கெயினுடன் பிடிபட்டுப் போனது.

இவ்வளவு வளர்ச்சியை இத்துறை கண்டபின் தனது மக்களைக் காக்க அமெரிக்க அரசு எவ்வளவு தூரம் போராட வேண்டி இருக்கும் என்பது புரிகிறதா?

அமேசன் காடுகளுக்குள் ஓர் இரகசிய ஓடுபாதையில் கொலம்பிய அரசின் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்க்க, 40 கொமாண்டோக்களுடன் தரையிறங்கிய விமானம் ஒன்று 1,000 பேர் வரை கடுமையாக உழைக்கும் பாரிய கொக்கெயின் தொழிற்சாலையை திடீரென முற்றுகையிட்டது.

3,500 அடி நீளமான ஓடுபாதையுடன் இணைந்த அத்தளத்தில் பயிரிடுகை முதல் பதனிடுகை ஈறாக அனைத்து நடவடிக்கைகளும் செவ்வனே செய்யப் போதிய வசதிகள் இருந்தன. ஆண்டு ஒன்றுக்கு 300 தொன் தூய கொக்கெயினை உற்பத்திசெய்யும் வலு அங்கே இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த முற்றுகையின் விளைவு.....? கொலம்பியாவின் நீதி அமைச்சர் Rodrigo Lara கொலை செய்யப்பட்டார். அமெரிக்கத் தூதுவர் Edwin corr ஐக் கொல்லும் கொலையாளிக்கு 5 லட்சம் அமெரிக்க டொலர் சன்மானம் வழங்க உத்தேசிக்கப்பட்டது.

இவ்வாறான இன்னோர் பண்ணையில் சுமார் 2,000 பேர் கொண்ட தனிப்பட்ட ஆயுதக்குழு ஒன்று ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இவற்றோடு எல்லாம் போராட தென் அமெரிக்க நாடுகள் தயாரில்லை. அத்துடன் பெருமளவு அமெரிக்க டொலர்கள் நாட்டுக்குள் புகுவதும், பாரிய கட்டடங்கள் நாட்டிலே எழுவதும் எல்லாம் தடுக்க முடி[illegible]யமான முன்னேற்றங்கள் ஆகின்றன. அரசுக்கு வேலையில்லாப் பிரச்சினைபோன்ற தொல்லைகளும் இத்துறையால் குறைக்கிறது. அவரவர் வேண்டிய இடங்களில் தாராளமாக இத்துறையில் வேலைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறான பலமான பின்னணியைக் கொண்டு தான் இக் கொக்கெயின் அமெரிக்காவை உலுக்கி எடுக்கிறது.

எல்லா நாடுகளின் இந்த வியாபாரம் ஊடுருவி விட்டதால் கூடுதலாக இளைஞர் மட்டத்தில் பாரிய தாக்குதலை இது தந்துகொண்டிருக்கிறது. ஊசி மூலல் ஏற்றப்பட வேண்டும் என்ற கட்டாயம் இல்லாமல் தூளாக மூக்கினால் உறுஞ்சப்படும் இது, இலகுவாக போதைப் பாவனைக்கு வழிகோலிவிடுகிறது.

## தேவதைப் பொடி

1950களில் சத்திரசிகிச்சையின் பொருட்டாக அறிமுகப்படுத்தப்பட்டு PCP



**அன்டீஸ் மலையின் கிழக்குச் சாரலில் செய்கை பண்ணப்படும் கொக்கெயின் செடியிலிருந்து பதமான நிலையில் பறிக்கப்படும் இலைகள்.**

என்ற மயக்க மருந்து இன்று பல மில்லியன் மக்களின் போதைப் பொருளாக மாறிவிட்டது. இதன் சரித்திரமோ மிகவும் பரிதாபமானது. Phencyclidine Hydrochloride ஆகிய இதன் பக்க விளைவுகள் மிகவுப் மோசமானவை எனக் கணிக்கப்பட்டதால் 1965ல் மனிதனின் வைத்திய பாவனைக்குக் கூட இது தடைசெய்யப்பட்டு விட்டது.

எனினும் Sernylan என்ற பெயரில் விலங்கு வைத்திய துறையில் இது தொடர்ந்தும் மயக்க மருந்தாகப் பாவிக்கப்பட்டு வந்தது. விலங்குப் பிரியர்கள் அத்துறையிலும் இதனை எதிர்த்து வந்திருக்கிறார்கள். இந்த நிலையில் இதைப் போதைக்காகப் பயன்படுத்தும் மனிதனின் மதியை என்னென்பது?

தேவதைப் பொடி (Angel dust), றொக்கெற் உந்து எரிபொருள் (Rocket fuel), Super Joint, மை லேடி, அமைதிக்களை எனப் பல செல்லப் பெயர்களுடன் அமெரிக்க வீதிகளில் PCP உலாவரத் தொடங்கி விட்டது. பெயரிலேயே மயக்கம். இதை வைத்து சுலபமாக போதையினைப் பெற்றுவிடலாம். உண்டோ, அல்லது குடித்தோ, புகைத்தோ, உறுஞ்சியோ எது செய்தும் பலனை உடனே கண்டுவிடலாம். எடுக்கப்பட்டவுடன் போதை தலைக்கேறி 6 மணி நேரம் உச்சம் காட்டும். இதன் தன்மை 24 மணி முதல் 48 மணித்தியாலம் வரை தணியமாட்டாது.

PCP மட்டும் ஆண்டொன்றுக்கு பல லட்சம் பேர்களை வைத்திய சாலைக்கும் அதில் கணி சமான எண்ணிக்கையினரைச் சவச்சாலைக்கும் எடுத்துச் சென்று விடுகிறது. இவ்வாறான இழப்புக்கள் பெரும்பாலும் இளைய சமுதாயத்திலேயே இடம் பெறுவது கவலை அளிக்கிறது.

## போதையின் தாக்கம்

சத்திரசிகிச்சைகளின் போது நோயாளிக்கு மி[illegible]வும் நுட்பமான அள[illegible]களில் மயக்க மருந்[illegible] கொடுக்கப்படுகிறது. இத[illegible]கெனத் தனி மயக்கமருந்[illegible] நிபுணர் — Anaethetist — அவதானமாவே செயற்ப[illegible] கிறார். இப்படியான சிகி[illegible]சைகள் அடிக்கடி வாழ்வி[illegible] சந்திப்பது அருமை. ஆனா[illegible] இதே மருந்தை அள[illegible] தெரியாமல் தலைகால் பு[illegible]யாமல் தானே தனக்[illegible] ஏற்றும் மயக்க நிபுணனை எவராலும் காப்பாற்ற[illegible] இயலும்?

மேலும் போதை[illegible] பொருள்கள் வரிசையி[illegible] ஹெரோயின் (Heroin), அ[illegible]னோடு தொடர்புடை[illegible] அபின் (Opium), கஞ்ச[illegible] (Marijuana) போன்றவை[illegible]யும் முன்னணி வகிக்கின்றன.

எமது மத்தியிலும் ப[illegible]தூள் வியாபாரிகள் இரு[illegible]கத்தான் செய்கிறார்கள்[illegible] எத்தனை சட்டங்கள், க[illegible]டுக் காவல்கள் இருந்த[illegible]லும் அவற்றின் கண்களி[illegible] மண்ணைத் தூவிவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்தி!

...தொடங்கி விட்
...ரிலேயே மயக்
... வைத்து சுலப
...பா தை யினைப்
...லாம். உண்டோ,
... குடித்தோ,
... உறுஞ்சியோ
...தும் பலனை
...கண்டுவிடலாம்.
...பட்டவுடன்
...லக்கேறி 6 மணி
...சம் காட்டும்.
...மை 24 மணி
... மணித்தியாலம்
...யமாட்டாது.
...ட்டும் ஆண்
...த பல லட்சம்
... வைத்திய
... அதில் கணி
... எண்ணிக்கை
...சவச்சாலைக்கும்
...சன்று விடுகிறது.
...ன இழப்புக்கள்
...பும் இளைய
...லேயே இடம்
... கவலை அளிக்



...குச் சாரலில்
...கயின் செடி
...பறிக்கப்படும்

## ...ின் தாக்கம்

...சிகிச்சைகளின்
...யாளிக்கு மிக
...மான அளவு
... மயக்க மருந்து
...படுகிறது. இதற்
...ரி மயக்கமருந்து
Anaethetist —
...ரவே செயற்படு
...ப்படியான சிகிச்
...க்கடி வாழ்வில்
...அருமை. ஆனால்
...தை அளவு
... தலைகால் புரி
...ானே தனக்கு
...க்க நிபுணனை
... காப்பாற்றல்

... போதைப்
... வரிசையில்
... (Heroin), அத
... தொடர்புடைய
...pium), கஞ்சா
...) போன்றவை
...ணி வகிக்கின்

...த்தியிலும் பல
...பாரிகள் இருக்
... செய்கிறார்கள்.
...ட்டங்கள், கட்
...ள் இருந்தா
...றின் கண்களில்
... தூவிவிட்டு,

அல்லது கைகளில் லஞ்சம் கொடுத்துவிட்டு இப் பொருள்கள் பல்லாயிரம் மைல்கள் கடந்து பாவனையாளர் கரங்களைஅடைந்து விடுகின்றன. அத்தனை அபார சக்தி இப்போதைப் பொருள்களுக்கு மட்டுமல்ல அவற்றைக் கடத்தி விநியோகம் செய்பவர்களுக்கும் உண்டு என்பது தெளிவு.

தங்கமும் வைரமும் பெறுமதியில் மங்கிப்போகும் அளவுக்கு இவை அளவில் சிறியதாய் — பெறுமதியில்

## சிறப்புக் கட்டுரை

கூடியதாய் — மனிதனுக்கு மிகவும் வேண்டப்படுவதாய் — உருமாறி வருகின்றன. வளர்ந்து வரும் போதைக் கலாசாரத்தின் போலி முகத்திரையைக் கிழித்து அதன் விளைவுகளைப் படம்போட்டுக் காட்டவேண்டிய காலம் கடந்து கொண்டிருக்கிறது.

### அறிவு கிட்டுவதற்கு முன் அனுபவம் கிடைக்கிறது

போதை பற்றிய அறிவோ, விளக்கமோ, எச்சரிக்கையோ கிட்ட முன்னரே பலருக்குப் போதை அனுபவம் கிடைத்துவிடுகிறது. நண்பர்களுடன் சேர்ந்து பழகுமிடங்களில் விவரம் தெரியாமலே இவை சிகரெட் மூலமோ, மூக்குத்தூள் அல்லது மதுவுடனோ எடுக்கப்பட்டு விடுகிறது. முதல் அனுபவம் விமானத்தில் பறப்பது போன்ற உணர்வை — உச்ச சுகத்தை — தந்து விடுகிறது. இதுதான் இந்த ஆபத்தின் முதற்படி எனலாம். வருமுன் காக்க ஏற்கனவே இது பற்றிய அறிவும் எச்சரிக்கையும் விழிப்புணர்வும் எப்போதும் அவசியம் ஆகிறது. எத்தனை பேருக்கு இந்த முதல் அனுபவத்தைக் கொடுத்துக் கெடுத்துவிடலாம் என விற்பனை முகவர் குறியோடு இருப்பார். அவர் ஒரு நண்பராகவும் இருக்கலாம்.

அப்பாவிப் பிள்ளையைப் பாடசாலைக்கும், ரியூஷனுக்கும், விளையாடவும் அனுப்பிவிட்டு வரும் வரை நெருப்பில் நிற்கும் பெற்றோருக்கு இது தீயிலே நெய் வார்க்கும் செய்தி அல்லவோ? பிள்ளைக்குப் போதை பற்றிய எச்சரிக்கையைப் புகட்டி அனுப்பாதபோது சிக்கல் மேலும் வலுக்கிறது.


பெற்றோருக்கே இதைப் பற்றி எதுவும் தெரியாத நிலையில் எப்படிப் பிள்ளைக்கு வழி காட்டிடல் முடியும்?

ஒரு முறை அனுபவித்து — சாம்பிள் பார்த்துவிட்டு — சிம்பிள் ஆக கைவிடக் கூடிய காரியம் அல்ல இது. 'தண்ணி' அடித்து விட்டு 'கம்' என்று வெற்றிலையை மடக்கிக் கொண்டு வீட்டில் வந்து முடங்கிவிடும் பழைய பாணி இங்கு எடுபடாது. என்றாலும் பெற்றோர் கொஞ்சம் 'சுழி' யாக இல்லாவிட்டால் எடுத்த எடுப்பில் பிள்ளை விடும் இத் தவறுகளைக் கண்டு பிடித்தல் கடினமே. அதற்கிடையில் நிலைமை எல்லையினை மீறிவிடலாம்.

### நுண்ணிய மாற்றம் முதலில் தெரியும்

சாதாரணமாக வீட்டில் கலகலப்பாகப் பழகும் பிள்ளையில் போதை கண்டு வரும்போது சில நுண்ணிய மாற்றங்களை அவதானிக்கலாம். குற்ற உணர்வு, கண்ணில் பட — முகத்துக்கு நேரே விழிக்க — கூசுதல், நேரே அறைக்குள் சென்று முடங்குதல், பயம், உடல் தளர்வும் தள்ளாட்டமும், பசியின்மை, தூக்கமின்மை, மயக்கம், தலைவலி, அமைதியின்மையால் தவித்தல், சுள்ளெனக் கோபம் கொள்ளல் போன்ற சாதாரண இயல்புகள்தான் சற்றுத் தூக்கலாகத் தென்படும். இதைப் பெரிதாகப் பெற்றோர் கண்டு கொள்வதில்லை.

வேலைக்குச் செல்லும் பெற்றோர் அவசர யுகத்தில் பிள்ளையுடன் பொறுமையாகக் காலம் கழிப்பது இல்லை. பழகும் வாய்ப்புக்கள் குறைவு. புட்டிப்பால் ஊட்டுதலில் தொடங்கி, குடும்பத் தகராறு, பிள்ளையைத் தனித்து வீட்டில் விட்டு வெளியே புறப்படும் பெற்றோர், பிள்ளையோடு கலந்து பழகாமல் தொலைக்காட்சி, பத்திரிகை போன்றவற்றில் முகம் புதைத்த வாழ்வு என்பவை படிப்படியாகப் பிழையான பாதைக்கே பிள்ளையை இட்டுச் சென்று



வெயிலில் உலர விடப்பட்ட பின்னர் நீரும் மண்ணெண்ணையும்கலந்து ஊற விடப்படும் கலவையை கலக்குகின்றார் ஒருவர்.

விடுகிறது. போதிய நேரத்தைப் பெற்றோர் பிள்ளைக்காகச் செலவழித்து அவர்களோடு பழகி, விளையாடி, பாடங்களைச் சொல்லிக்கொடுத்து அவர்களின் மனச் சுமைகளை உணரும் சந்தர்ப்பத்தைப் பெறும்போது பிள்ளை விரக்தி அடையவோ, தவறவோ வாய்ப்புக்கள் மிகவும் குறைவு எனலாம். மேலைநாட்டு வாழ்க்கை முறைகள் இங்கு அறிமுகம் ஆகும்போது நிலைமைகள் மேலும் மோசமடையலாம்.

இன்று நிலைமைஇப்படியாயின்வெளிநாடுகளில் சென்று குடியேறும் எம்மவரின் சந்ததிகள் இவற்றுக்கெல்லாம் எப்படி ஈடுகொடுக்கப் போகின்றன என்ற கேள்வி மறுபுறத்தில் எழுகிறது. அங்கே கெட்டுப்போக பல மடங்கு வாய்ப்புகள் அதிகம் என்பது மட்டும் உண்மை.

நிலைமை எல்லை மீறிப் போய், பிள்ளை சிந்தனை ஆற்றலை இழக்கும்போது—

நடையும் உடலும் தள்ளாடி தளரும் போது —

கதைக்க முடியாமல் திணறும் போது —

சத்தி, மூக்கில் இரத்தம் வடிதல், புண்போல நோகும் உடல், தொண்டை அரிப்பு என்பன தீவிரம் அடையும் போது —

பிள்ளையை வைத்தியரிடம் கொண்டுசெல்லும்பெற்றோருக்கு அதிர்ச்சியான செய்தியை வைத்தியர் கூறுவார்.

'பெற்ற மனம் பித்து. பிள்ளை மனம் கல்லு' என்பது இனித்தான் புரியும். எந்த ஆலோசனையையும் கேட்கும் நிலமையில் பிள்ளை இருக்காது. சிகிச்சைகள் முடிந்து, கண்காணிப்புகள் குறைந்து, மீண்டும் சமூக வாழ்வுக்கு திரும்பும் பிள்ளையின் நாட்டம் மீண்டும் போதை மீதே இருக்கும். கூண்டில் வைத்தா பிள்ளையை வளர்க்க முடியும்?

### முதல் சுகானுபவம் பின் கிட்டுவதில்லை

போதையில் முதலில் கிடைக்கும் அனுபவம் பிரமாதமாக இருக்கும். மீண்டும் மீண்டும் முயலும் போது அந்த முதற்சுகம் எட்டப்படுதல் இல்லை. இதில் முயன்று தோல்வி கண்டவர், மருந்தின் அளவை அதிகரித்து, அதிகரித்து திருப்தி தேட முயலுகிறார். அல்லது சக்தி கூடிய போதைப் பொருளைப் பெறத் துடிக்கிறார். எப்படி அலைந்தும் அந்த முதல் திருப்தி கிடைப்பதும் இல்லை. போதை தணிந்த பின் மனம் ஓய்வதும் இல்லை; இச்சூழலில் அகப்பட்டவர் சுழன்று, சுழன்று, மடியும்வரை நிம்மதி காணவே மாட்டார். போதை மயக்கத்தில், நிதானம் இன்றி, அளவுக்கு அதிகமாக மருந்தை எடுப்பதும் ஓர் ஆபத்தான காரியம் ஆகிவிடுகிறது.

போதைக்கு உட்பட்டவர் தன்னை ஒரு மகாமனிதனாகவே, கதாநாயகனாகவே கற்பனை செய்து கொள்ளுதலும் உண்டு. எடுக்கப்படும் பொருளின் வகை, தரம், அளவு என்பன அதற்கேற்ற குண இயல்புகளைக் காட்ட வல்லது. குறித்த நரம்புகளைச் சுண்டித் தூண்டிவிடும் இவை சில செயற்பாடுகளை அவ்வக் கோணங்களில் பெருப்பித்தும் விடுகின்றன.

கண்ணில் பட்டதெல்லாம் அடித்து நொருக்கியும், எதிர்த்தவரை எல்லாம் வெட்டிச்சாய்த்தும், எல்லை மீறிய வேகத்தில் வாகனம் ஓட்டியும் தன்னையோர் சாதனையாளனாக உலகினுக்குக் காட்டவே அவர் விரும்புவார். எதையும் சிந்தித்து முடிவு எடுக்கும் நிலையில் அவர் மனம் இருக்காது. சொர்க்கத்தில் — வானத்தில் — மிதக்கும் இவரின் நினைவுகள். போதை தணிந்து பூமிக்கு வரும் போது இவர் தவித்துவிடுகிறார்.


யுத்த காலங்களில் படையினரை உற்சாகப்படுத்த சில அரசுகள் இவற்றை பயன்படுத்தி வருகின்றன. இதனால் படையினர் யுத்தத்தின்போது கோர சாகசம் புரிந்துவிடுகின்றார்கள்.

விளையாட்டுத்துறையின் வீரசாகசங்களிலும் போதைப் பொருள்கள் தமது கைவரிசையைக் காட்டிவிடுகின்றன. ஒலிம்பிக் போட்டிகளின்போது மருத்துவ பரிசோதனையைத் தொடர்ந்து பல சாதனைகள் மீள்பரிசீலனை செய்யப்படுதல் அனைவரும் அறிந்ததே.

### ஹெரோயின்

ஹெரோயின் பெரும்பாலும் ஊசி மூலம் ஏற்றப்படுகிறது. ஏற்றப்பட்ட மறுகணமே உச்சமடையும் இதன் போதை சுமார் இரு மணி நேரம் உச்ச சுகம் தர வல்லது. இவர் மீண்டும் இவ்வுலகுக்கு இறங்கி வர பல மணித்தியாலங்கள் செல்லும். உடலில் இவை சென்று பயங்கரமான மாற்றங்களை ஏற்படுத்தி விடுகின்றன.

பொப்பிச் செடிகளிலிருந்து தயாரிக்கப்படும் ஹெரோயினின் மூலப் பொருள்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. அறுவடைக் காலங்களில் மிகவும் நுட்பமாக விவசாயிகள் செயற்படுகிறார்கள். பயிருக்குள் தடுக்கி விழுந்து அதன் தெளிவான உள்ளடக்கங்களை சிதறவிடுபவர் எழும்பவே இயலாது என்ற அளவுக்கு இவை ஆபத்தானவை. இதை உணராமல்தான் இரவும் பகலும் இலட்சக் கணக்கானோர் ஊசி மூலம் தமக்குத்தாமே ஹெரோயினை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள்.



சாற்றிலிருந்து பில்டர்கள் மூலம் வடிக்கப்படும் போதைப் பொருள்.

### போதையால்விளைவு

போதைப் பொருள்கள் உடலினுட் சென்று எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்த வல்லன? அவை எவ்வாறு செயற்படுகின்றன? எனப் பார்க்கப் போனால் அதன் பயங்கர விளைவுகள் புலப்படும்.

முழுப்போத்தல் மதுவினால் செய்யமுடியாத வேலையை ஒரு துளி ஹெரோயின் சாதித்து விடுகிறது. ஆனால் அதன் விலையோ இமயத்தின் உயரத்தில் இருக்கின்றது.

மூளைக் கலங்களையும், நரம்புகளையும் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கின்றன இவை. உடலின் இரசாயன—இயற்கைச் சமநிலையைப் பாதித்து, உடல் இயக்கங்கள் அனைத்தையும் எங்கே, எப்படி என்றில்லாமல் குழப்பி விடுகின்றன. உடற் கலங்களின் கருவில் உள்ள DNA யை — பிறப்புரிமை அலகுகளைக்கூட — இவை குழப்பி விடுகின்றன. இதனால் கலவிருத்தி தூண்டப்பட்டு புற்றுநோய் போன்ற பெரும் வியாதிகள் ஏற்பட வாய்ப்பு உருவாகின்றது.

உடலின்நோய் எதிர்ப்புச் சக்தியை அழிக்கும் வகையில் வெண்குருதிக் கலங்களின் செயற்பாட்டை கெடுத்து விடுகின்றன. ஓமோன்களை நம்பிச் செயற்படும் உடற் சமநிலையை குழப்பி விடுகின்றன.

உடலிலே சேமிக்கப்பட்டு நரம்புகளால் தூண்டப்படாமல் காணப்படும் பெருமளவு சக்தியை இவை ஒரு கணப் பொழுதில் வெளிப்படுத்துகின்றன. இதனால் உடல் உபாதைகள் மறைதல் போலவும், பலம் அதிகரித்து புதிய தெம்பு பிறப்பது போலவும், போலித்தன்மை தெரிகிறது. ஆனால் உண்மையில் உடலின் சக்திமட்டம் குறைந்துவிடுகிறது. எனவேதான் போதை தணியவும் ஆள் சோர்ந்து விடுகிறார்.

ஆகாயத்தில் இருந்து சக்தி உடலுக்குள் புகுவதும் இல்லை. உட்கொள்ளும் போதைப் பொருள்களில் சக்தி சேமிப்பு இருப்பதும் இல்லை. எனவே உடலில் உள்ள சக்திதான் போதை ஏற ஏற மீண்டும் மீண்டும் தேவைக்கு மிதமிஞ்சி வெளிப்படுத்தப் படுகிறது. இதனால் போதைக்கு அடிக்கடி ஆளாகுபவரின் உடற்சக்தி மட்டம் வெகுவாகக் குறைந்து விடுகிறது. மீண்டும் போதை ஏறினால். வெளிப்பட சக்தியும் இல்லை. எனவே மனத் திருப்தியும் இல்லை. ஈற்றில் விரக்திதான் மிஞ்சும். உடல் இயலாமை நிலையினை எட்டிவிடும்.

இதையெல்லாம் மயக்கத்தில் மிதப்பவர் எங்கே நினைத்துப் பார்க்கப் போகிறார்? அடுத்த 'டோஸை' வாங்குவதற்கு எங்கே பணத்தை புரட்டலாம்; எங்கே கொள்ளை அடிக்கலாம்; எந்த வாகனத்தைக் கடத்தலாம்; எவரிடம் பணம் பறிக்கலாம் என்றெல்லாம் தனிக் கோணத்தில் மனம் சிந்திக்கத் தொடங்கிவிடும். நோக்கம் நிறைவேறாத போது கொலை கூட 'சிம்பிள்' ஆக நடத்து விடும். சிறைத் தண்டனை கிடைத்தாலும் அங்கேயும் கஞ்சா ஆயினும் கிடைக்காதா?

### கடத்தல்காரர்களின் கொடூர வழிமுறைகள்

ஹெரோயினின் வரலாற்றுப் பின்னணியும் மிகச் சுவாரசியமானது. பயங்கரமான பல கட்டங்களையும் இது சந்தித்து வருகிறது. இவற்றைப் பொலித்தீன், பிளாஸ்ரிக் பைகளிலும் கருத்தடைக் காப்புறைகளிலும் அடைத்து மிருகங்களையும் மனிதர்களையும் ஏன் குழந்தைகளையும் பயன்படுத்தி வயிற்றுக்குள் திணித்து கடத்தி வருகிறார்கள்.

சிரியா — லெபனானின் தனித்த எல்லைப் பிரதேசங்களைக் கடந்ததும் இக் கடத்தல்காரர்கள் ஒட்டகங்களினதும் குழந்தைகளதும் வயிற்றைப் பிளந்து தமக்குத் தேவையானவற்றை எடுத்துக்கொண்டு ஓடியிருக்கிறார்கள். இவர்களின் பணப்பசிக்கும், கோர நாடகத்துக்கும் பலியாகும் அப்பாவி உயிர்களைக் காப்பாற்ற எவரால் இயலும்? பயிர்ச் செய்கையில் இருந்து பாவனையாளர் வரையிலும் பலதரத்தினரின் உயிரோடு விளையாடுதலில் ஹெரோயினுக்கு இணையாக ஏதும் இல்லை எனலாம்.

மருத்துவ மூலிகையான பொப்பிச் செடியே ஹெரோயினின் மூலம் ஆகிறது. உலகின் பல பிரதேசங்களிலும் களவாகப் பயிரிடப்படும் இது துருக்கியின் பல இலட்சம் விவசாயிகளின் சட்டபூர்வமான உற்பத்திப் பொருள் ஆகின்றது. ஆப்கானிஸ்தானிலும் இது பயிரிடப்படுகிறது.

இதில் விநோதம் என்னவென்றால் கடுமையாக மதக் கோட்பாட்டில் நம்பிக்கையுடைய இந்த விவ

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வெள்ளம்

வாழ்க்கையில் நினைப்பதெல்லாம் நடப்பதில்லை. நினைக்காததெல்லாம் நடந்தும் விடுகிறது. எதையும் சரியென ஏற்கும் மனநிலை அனைவருக்கும் இருப்பதில்லை.

வேண்டியது— விரும்பியது— கிடைக்காததால் துன்பப்படும் போது வாழ்க்கை வெறுக்கிறது. நிறைவேறாத ஆசைகள் ஆயிரம் மனதைச் சித்திரவதை செய்யும். இதனால் நிம்மதியே இல்லை. வேண்டியது கிடைக்காத போது மட்டுமா வாழ்வினிலே துன்பம்? சிலவேளைகளில் வேண்டாதது கிடைத்து விடுதலுமே பெருந்துயரைத் தந்து விடுகிறதே!

வேண்டுதல், வேண்டாமை இரண்டினாலுமே வாழ்வினில் துன்பம்! துன்பம்! துன்பம்! எனவே தான் பலரும் ஆண்டவன் சந்நிதானத்திலே போய் நின்று அழுகின்றார்கள். இவர்கள் சொல்லியும் சொல்லாமலும் அழும் கதைகளைக் கேட்டால் ஞானம் பிறந்து விடும்.

யாரும் எனக்கு நிம்மதி வேண்டும் என்று கேட்டு அழுவதாகத் தெரியவில்லை. எனக்கு அது வேண்டும் இது வேண்டும் என்று கேட்பாரும், அது வேண்டாம் இது வேண்டாம் என்று வெறுப்பாருமே அதிகம். இப்படியான வேண்டுதல்கள் சுற்றி வளைத்து வந்து நிம்மதியைத் தரும் என இவர்கள் கனவு காண்கிறார்கள்.

ஆண்டவன் மனதிலே சிரிப்பானா? இவர்களுக்காக அழுவானா? அவனே விருப்பும் வெறுப்பும் இல்லாதவன். அவனுக்கு வேண்டுதலும் இல்லை. வேண்டாமையும் இல்லை.

அவனிடம் உள்ளதைக் கேள். அவனின் இந்த உயர்பண்பைப் பெற நீயும் துடி. அப்பண்பைக் கற்க அவனடி சேர்ந்தால் உன் மனம் எத் துன்பங்களுக்கும் தாக்குப் பிடிக்கும்; என்றும் துன்பம் — இடும்பை — உனக்கு இல்லை.

**வேண்டுதல் வேண்டாமை இலானடி**
**சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல.**

— என்றார் வள்ளுவர்.
—0004
(கடவுள் வாழ்த்து)

**- அம்பிகைபாகன்**

# இந்த வார இராசி பலன்

## (12 - 07 - 1997 முதல் 18 - 07 - 1997 வரை)

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| கே | இராசிச் சக்கரம் | | *சூ புவெ |
| வி | | | ரா |
| | | | சந் செ |

மாற்றம்:
சூரியன் 17-07-97 இல் கடகம்

**இந்தியாவில் அரசியல் புயல் வீசும். "மெல்ல மெல்லப் பாயும் வெள்ளம் கல்லையும் உருட்டிப் பாயும்." அமைச்சரவையில் மாற்றங்கள் கொடுக்கும். உலகில் அமெரிக்காவின் ஆதிக்கம் அதிகரித்தபடி இருக்கும்.**

**மேடம்:** உங்களுக்கு வீட்டில் கலகலப்பும் உறவினர், சிநேகிதர் வரவால் புதிய செலவுகளும் ஏற்படும். வீடு மனைச் செலவுகள் சிலருக்கு கடன்படுகின்ற நிலைகளைக் கொடுக்கலாம். சகோதரர்களாலோ, தாய்வழியிலோ சோக நிகழ்வுகள் ஏற்பட இடம் உண்டு. அதிக அலைச்சலால் உடம்பில் எரிவு, கண்நோ, கைகால் உளைவுகள் கொடுக்கும். பயனற்ற செயல் என்று எதையும் கருதாதீர்கள். பயமற்ற நிலை ஏற்பட இறைவனை வேண்டுதல் செய்து கொள்ளுங்கள். தொழில் பீடத்தில் வரவேற்பு இருக்கும். அவசரப்படாமல் சற்று நிதானமாகச் செயற்பாடுகளைச் செய்து சமாளித்துக் கொள்ளுங்கள்.

**இடபம்:** நீங்கள் அதிகம் கோபப்படாமல் சற்று நிதானமாக நடந்து பாருங்கள். புதிய முயற்சி, தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் என்பன ஏற்படும். புதியன வந்து பழையவற்றை விலக்கும். மறைமுகமாக உங்களுக்கெதிரானவர்களின் செயற்பாடுகள் மந்த நிலை அடையும். சகோதரர்களுடன் சிலருக்கு பகைக்க இடம் உண்டு. நீதி, நேர்மை எனப் போராடும் நீங்கள் உறுதி நிலை தளராமல் உங்கள் பாதையில் தொடர்ந்து நடைபோடுங்கள்.

**மிதுனம்:** உங்கள் பிடிவாதத்தையும், கோபத்தையும் சற்று நிதானப்படுத்திக் கொள்ளுங்கள். பொருளால் ஏமாற்றம் அல்லது பொருள் இழப்புக்கள் கவனக்குறைவால் ஏற்பட இடம் உண்டு. காணி, பூமி, தொழில் ஸ்தானங்களில் சற்று கலகங்கள் கொடுக்கும். வயிற்றில் நோ, வாத உளைச்சலுக்கு வைத்தியர் உதவியை நாடவேண்டி வரலாம். உங்கள் வாக்குச் சாதுரியத்தால் சில காரியங்களைச் சாதகப்படுத்திக் கொள்ளுவீர்கள். கலகம் பிறந்து நியாயம் பிறக்காமலா போகும்? அமைதியாக இருக்கவும்.

**கடகம்:** உங்களுக்கு எதிர்பாராமல் கஷ்டங்களும் அவமானங்களும் ஏற்பட இடம் உண்டு. இந்த உலகத்தில் வெளிப்படையாக வாழ முடியுமா? என அதிகம் சிந்திக்காதீர்கள். பல்லில் நோ, நெஞ்சில் சளி என அடிக்கடி வேதனையா? வைத்தியத்தால் குணம் உண்டு. குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு மறையும். பெரியவர்களால் தொழில் ஸ்தானத்தில் அமைதி ஏற்படும். சகோதரர்களால் செலவுகள் அதிகரிக்கும்.

வீட்டுச் செலவுகளை அதிகரிக்காமல் நிதானமாகச் செலவு செய்யுங்கள். மறைமுகத்தில், அயலில் ஒருவர் கவனிப்பார். உங்களை நிதானப்படுத்தி அமைதியாகச் செயற்படுங்கள்.

**விருச்சிகம்:** நீங்கள் தண்ணீர் மாதிரிக் காசுகளை நினைத்துச் செலவு செய்து கலங்குவீர்கள். முயற்சிகளும் அதிகம் வெற்றி தரும் எனச் சிந்திக்க முடியாது. சற்று நிதானமாகச் செயற்படுங்கள். படபடப்பு, அலைச்சல், அடிக்கடி மாற்ற உணர்வுகள் அமைதியைக் குலைக்கும் என உங்களுக்குத் தெரியாதா? தொழில் ஸ்தானத்தில் உங்கள் சொல் வாக்கால் காரியங்கள் நிறைவேறும். தூரத்துச் செய்தி ஒன்று உறவினர் மூலம் வந்து மனக்கவலையைத் தரும்.

**தனுசு:** நீங்கள் எதற்கும் தயங்காது எதிர்க்கும் திறன் மிக்கவர்கள். உங்களை எவரும் இலகுவில் வெல்ல முடியாது. ஆயினும் கிரகவலிமையால் அலைச்சலும், காரியத் தடைகளும் அடிக்கடி வராமல் போகாது. தூரதேசத்திலிருந்து வருமானங்கள் வர இடம் உண்டு. குடும்பத்தில் சுபகாரியங்களும், நண்பர்களின் உதவிகளும் நற்பலன்களைக் கொடுக்கும். "தெய்வத்தால் ஆகாது எனினும் மெய்வருந்தக் கூலி கிடைக்காமலா போகும்?"

**மகரம்:** உங்களுக்கு யாமிருக்கப் பயம் ஏன் என தெய்வம் சொல்வது கேட்கவில்லையா? படபடப்பும், விஷ பீடைகளும், கட்டுமீறிய செலவுகளும், குடும்பத்தில் கலகமும், எதற்கெடுத்தாலும் அலைச்சலும் எனக் காலம் போய்க் கொண்டு இருக்கும். மனப்பயத்தால் உடல் நிலை பாதிப்படையும். நிதானத்துடன் செயற்படவும். மனைவி அல்லது கணவன் வழியினரால் கவலைகள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்த பலன் நடந்து கொண்டிருக்கும்.

**கும்பம்:** உங்களுக்கு கலகம் பிறந்து நியாயம் பிறக்கும் காலமாகும். கிரக தோஷத்தால் உடல் நிலைப்பாதிப்பும், குடும்பத்தினரின் நியாயமற்ற போக்கும் செலவுகளும் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல்களால் மனஸ்தாபப்பட இடம் உண்டு. எல்லோருக்கும் நன்மைகளைச் செய்பவர் நீங்கள். — நீங்கள் கஷ்டப்படும் போது [illegible]

# சோதிட சஞ்சீவி

**சிங்கம்:** என்ன அதிகம் யோசிக்கிறீர்கள்? உலகம் அழிந்துவிடப் போகின்றதென எண்ணுகின்றீர்களா? உலகம் நிச்சயம் அழியாது. உங்கள் உறுதிநிலையை எவரும் கணக்கிட முடியாது. இந்த உலகத்தில் துன்பத்துக்கு மத்தியில் நின்று போராடும் உங்களை என்னைத் தவிர யாரும் அறிய முடியாது. தொழிலில் கஷ்டம், பொருளில் ஏக்கம், பணத்தால் பெருமூச்சு, கைகால் உளைவு, நித்திரையின்மை எனக்காலம் போகும்; ஆயினும் தெய்வபக்தியால் அனைத்தையும் சமாளித்து விடுவீர்கள்,

**கன்னி:-** உங்களுக்கு மூக்கு நுனியில் கோபம் அடிக்கடி வரும். இருந்தாலும் எதையும் துருவித் துருவி ஆராயும் நீங்கள் நிதானமாகச் செயற்படுவீர்கள். புத்திரரால் செலவுகளும், தாரத்தால் மனவேதனையும், தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்புக்களும் ஏற்பட்டாலும் ஆறவிட்டுச் சிந்தித்துச் செயற்படுங்கள். தூரதேசத்துச் செய்தியால் மனநிறைவு ஏற்படும்.


**துலாம்:** உலகத்தைப் பற்றி அதிகம் கவலைப்பட வேண்டாம்? உங்களால் முடிந்ததைச் செய்ய முயற்சி எடுங்கள். சோதனைக்கு மத்தியில் தான் சாதனை வரும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என அதிகம் சிந்திக்கும் நீங்கள் சற்று குடும்ப நிலையை எண்ணிப் பாருங்கள். காலில் நோ அல்லது காயங்கள் வந்தால் வைத்தியத்தால் சுகம் வராமல் போகுமா? தொழில் ஸ்தானத்தில் நன்மைகளும், [illegible] களின் உதவிகளும் கிடைக்கும்.

(X-ஆம் பக்கம் பார்க்க)

## மகாதேவா ஜோதிடம்

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 06



சொற்சிலம்பம் இல. 06
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : ................................................

விலாசம் : ................................................

................................................

——— இங்கே வெட்டுக ———

**முடிவு திகதி: 18 - 07 - 1997**

### இடமிருந்து வலம்

1. திடுக்காட்டம் 4. வகுப்பு 6. பருவம் 7. ஐக்கியமாகும் இடம் 8. வீரிட்டு அழுவது இப்படி 10. கீர்த்தி 12. ஔவையார் இயற்றியது 14. மூத்தது. 16. ராசிகளில் ஒன்று. 19. அரைவாசி 20. இரண்டுதான். வேறில்லை. 21. யானை மேலிருக்கும் பீடம். 22. மீனாட்சி கோலோச்சும் இடம்.

### மேலிருந்து கீழ்

1. திசை மாற்றுதல். 2. இப்போது வகைதொகையின்றி இடம் பெறுவது, 3. தானிய அளவை அலகு. 4. செய்தி. 5. ஒரு குடிவகை. 8. சரிவு. 9. கண்: 11. அறுபத்தினான்கு வகையுடையது. 12. சீரியபுத்தி. 13. பலகாரங்களில் ஒன்று. 15. உழைத்துப்பெறு. 17. நாற்காலி. 18. ஏவுகணை வகைகளில் ஒன்று. 20. துறவி.

## சொற்சிலம்பம் இல. 04 - விடைகள்

### இடமிருந்து வலம்

1. விவேகம். 4. பவிசு. 7. குதம். 8. வஞ்சனை. 9. திம்பு. 10. தசம். 11. வனம். 13. அவசரம். 16. ரவி. 17. திலகம். 19. காது. 20. புதல்வன். 22. நீ. 23. காவிரி.

### மேலிருந்து கீழ்

1. விகுதி. 2. வேதம். 3. கம்பு. 4. பஞ்சம். 5. விசம். 6. சுனை. 8. வதனம், 11. வரம்பு. 12. நாவிதன். 13. அதிகாரி. 14. வலது. 15 சக. 18. தோல்வி. 21. வரி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதலாம் பரிசு :- செல்வி ஆர்த்திகா சிவகுமார், 15, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.
★ இரண்டாம் பரிசு:- ந. ஞானேந்திரா, புத்தூர் கிழக்கு, புத்தூர்,
★ மூன்றாம் பரிசு:- ப. அபர்ணா, 'பங்கஜ வாசம்' கல்வயல், சாவகச்சேரி.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுகள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.


சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு:- ரூபா. 150.00
இரண்டாம் பரிசு:- ரூபா. 100.00
மூன்றாம் பரிசு:- ரூபா. 50.00

★ புதிர்ப்போட்டி இலக்கம். 05 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கப்பல் நல்ல கப்பலாம்

கப்பல் நல்ல கப்பலாம் கடலில் செல்லும் கப்பலாம்
அக்கரைக்குச் செல்லவே ஆட்கள் ஏறும் கப்பலாம்!

கப்பல் தன்னில் பலவிதம் கடலின் மீது செல்லுமாம்
தூர தேசம் செல்லவே துறைமுகத்தில் நிற்குமாம்!

சரக்கு தன்னை ஏற்றியே சடுதியாகச் செல்லுமாம்
பரக்கக் கடலின் மீதிலே பாங்காய்ப் பயணம் செய்யலாம்!

நீலக் கடல் தன்னிலே நீந்திச் செல்லும் கப்பலாம்
ஓல மிட்ட காற்றையும் உதறிச் செல்லும் கப்பலாம்!

கப்பல் நல்ல கப்பலாம் கடலில் செல்லும் கப்பலாம்
சிட்டாய்ப் பறந்து போகலாம் சீக்கிரம் நீ ஓடி வா!

-ஜெ. கணன்

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஓர் ஊரிலே ஒரு குடியானவர் வாழ்ந்து வந்தார். அவருக்குப் பெயர் தீனதயாளன். அவர் நேர்மையும் நல்லொழுக்கமும் உடையவர். ஐந்து பிள்ளைகளின் தந்தை. நான்கு ஆண்கள், ஒரு பெண், இவர்கள் சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர்.

தீனதயாளனின் ஐந்து பிள்ளைகளும் ஐந்து துருவங்கள். ஒருவரோடொருவர் ஒற்றுமையின்றி எதற்கெடுத்தாலும் போட்டி, பொறாமையுடன் சண்டையிட்டுக் கொண்டனர். அதனால் கவலையுற்ற தந்தை எப்படியும் இவர்களை ஒன்று சேர்த்து ஒற்றுமையாக வாழச் செய்ய வேண்டும் என்று எண்ணினார்.

ஒரு நாள் தனது ஐந்து பிள்ளைகளையும் ஒன்றாக அழைத்தார். எல்லோரும் ஒன்று கூடினர். அவர்களைப் பார்த்த தீனதயாளன், ''பிள்ளைகளே! உங்களுக்கு ஒரு போட்டி வைக்கப் போகின்றேன். இதில் யார் வெல்கிறார்கள் என்று பார்ப்போம்'' என்று கூறி நாலடி நீளமான ஐந்து தடிகளை அவர்கள் முன்னே வைத்தார்.

பிள்ளைகளோ ஒன்றும் புரியாமல் பார்த்துக்கொண்டு நின்றனர். ''இந்த ஐந்து தடிகளையும் இருபது துண்டுகளாக முறிக்கவேண்டும். உங்களால் முடியுமா?'' என்றார் தீனதயாளன்.

''இது பெரிய வேலையா?'' —என்ற மூத்தவன் உடனே அந்தத் தடிகளில் ஒன்றை எடுத்து முறிக்கப் போனான்.

''கொஞ்சம் பொறு மகனே! போட்டியில் ஒரு நிபந்தனை இருக்கிறது. அதன்படியேதான் முறிக்க வேண்டும்.''

''என்ன நிபந்தனை?'' எல்லோரும் ஒரே குரலில் கேட்டார்கள்.

''இருங்கள் வருகிறேன்'' என்ற தந்தையார் ஒரு கயிறு கொண்டு அந்த ஐந்து தடிகளையும் ஒன்றாகக் கட்டினார்.

''எங்கே முறியுங்கள் பார்க்கலாம், கட்டைஅவிழ்க்காமல் தடிகளை முறிக்க வேண்டும்'' என்றார்.

ஒவ்வொருவராக முயன்று பார்த்தார்கள் தடிகளை முறிக்க முடியவில்லை.

''இது எங்களால் முடியாது'' — என்றனர்.

அதைக்கேட்ட தந்தையார் உடனே அந்தக் கயிற்றை அவிழ்த்து எடுத்தார்

''இனி முறியுங்கள்!'' என்று சொல்லி அவர் வாய் மூடுவதற்குள் ஐவரும் தடிகளை இருபது துண்டுகளாக முறித்துப் போட்டு விட்டார்கள்.

''பிள்ளைகளே! இந்த ஐந்து தடிகளும் ஒன்றாகச்சேர்ந்து இருந்த பொழுது உங்களால் முறிக்க முடியாமற் போய் விட்டது. பின்னர் கயிற்றை அவிழ்த்துத் தனியாக விட்ட பொழுது சுலபமாக முறித்து விட்டீர்கள். இதிலிருந்து என்ன அறிந்து கொண்டீர்கள்?'' —என்று கேட்டார் தீனதயாளன்.

பிள்ளைகள் மௌனமாய் நின்றார்கள்.

''நான் சொல்வதை அவதானமாகக் கேளுங்கள். எப்போதும் நீங்கள் ஐவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அவ்வாறு நீவிர் ஒற்றுமையாக இருந்தால் உங்களை யாரும் ஒன்றும் செய்யமுடியாது. பாசம்என்ற அன்புக் கயிற்றினால் உங்களைக் கட்டிக் கொள்ளுங்கள். ஆளுக்காள் கோபித்து சண்டையிட்டுக் கொண்டீர்களோ மற்றவர்கள் சுலபமாக உங்களை வென்று விடுவார்கள்,'' என்று கூறி முடித்தார்.

''எங்களை மன்னித்து விடுங்கள் தந்தையே! நாங்கள் இனிமேல் ஒற்றுமையாக இருப்போம்!'' —என்றனர் பிள்ளைகள், தந்தையின் முகத்தில் திருப்திக்களை தென்பட்டது.

அவரின் கடைசிப் பெண் பிள்ளை ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கிடில் தாழ்வு'' என்று பாடிக்கொண்டு போனாள்.

அனைவரும் 'கொல்' லென்று சிரித்தனர்.

நாங்களும் எல்லோரும் ஒற்றுமையாக வாழப்பழக வேண்டும். அப்போதுதான் 'நிம்மதி' கிடைக்கும்.

''ஒற்றுமையே பலம்,''

- த. தாரணி.

## வானவில்

வான வில்லைப் பாரு!
வளைத்து விட்டது யாரு?
ஆன வரைக் கூறு!
அவருக்கென்ன பேரு?
வர்ண வில்லைப் பாரு!
வர்ணம் இட்டது யாரு?
எண்ணிக் கொஞ்சம் கூறு!
என்ன அவர் பேரு?

அ. கனிசியஸ்
(உசன்)




# நொடிப் பொழுது

1. முறையின்றித் தொட்டால் வரையின்றித் தாக்குவான். அவன் யார்?
2. செக்கச் சிவந்தவன்; ஆனால் தண்ணீருக்கு மட்டும் பயந்தவன். அவன்யார்?
3. அடிக்காமலேயே துடிப்பான். அவன் யார்?
4. தண்டில்லாத வட்ட இலை. அது எது?
5. தீப்பொறி பறக்கும். ஆனால் தீப்பற்றாது. அது என்ன?
6. அழைக்காமல் வருபவன்; அலைக்கழிக்காமல் செல்ல மாட்டான். அவன் யார்?
7. இளம் வயதில் பச்சை நிறத்தாள். முதிர் வயதில் சிவப்பு நிறத்தாள். ஆனால் இரண்டு பருவத்திலும் குணம் ஒன்று. அவள் யார்?
8. மேல் கீழாய்க் கோடுகள். நனைத்தாலும் அழியாதவை. அவை என்ன?
9. தண்ணீரில் தாவும் கப்பல்; தரையிலும் தாவும். அது என்ன?
10. எங்கள் வீட்டுப் பெண்ணுக்கு வாய் நிறையப் பற்கள். அது என்ன?

- சி. காந்தருபன் -

விடை

1. மின்சாரம். 2. நெருப்பு. 3. தொலைபேசி. 4. அப்பளம் 5. மின்மினிப்பூச்சி. 6. நோய். 7. மிளகாய். 8. ரேகைகள். 9. தவளை. 10. துருவுபலகை.

# பிற்படுத்தப்பட்ட....

(IV ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வரையும், அமைச்சர்களையும் தீர்மானிக்கும் நிலை மாறி மாநில முதல்வர்களும் பிராந்தியக் கட்சிகளின் தலைவர்களும் பிரதமரைத் தீர்மானிக்கின்ற நிலைமை அங்கு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் பல கட்சிகளும் நீ முந்தி நான் முந்தி என ஆட்சியமைக்க முற்படுகையில் இறுதி முடிவை எடுக்கும் ஜனாதிபதி முக்கியமான நபராகிறார். எனவே ஜனாதிபதி மாளிகையில் தமக்கு ஆதரவான ஒருவரை குடியேற்றிவிட முன்னெப்போதும் இல்லாத வகையில் கட்சிகள் முண்டியடிப்பது இயல்பே.

## ஆட்சிமுறை மாறுமா?

மேலும் இந்தியத் தேசிய வாதம் என்ற கருதுகோள் கேள்விக்குறியாக மாறிவரும் இக்கால கட்டத்தில் இந்தியாவிலும் சோவியத் யூனியன் போல் உடைவு ஒன்று நிகழாமல் தடுக்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து தேசிய வாதிகளால் வலியுறுத்தப்பட்டு வருகிறது. அப்படி ஒரு மாற்றம் கொண்டுவரப்படும் பட்சத்தில் இந்தியாவின் முதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற பெருமை கே. ஆர். நாராயணனுக்குக் கிடைக்கக் கூடும். இந்த வகையில் தமக்கு முன்பு பதவியில் இருந்த எந்த ஜனாதிபதியைக் காட்டிலும் அதிக முக்கியத்துவத்தை அவர் பெறுவார்.

எதிர்காலத்தில் இந்திய அரசியலில் தலைதூக்கக் கூடிய எத்தகைய அரசமைப்பு நெருக்கடியையும் தீர்த்து வைக்கும் திறமை நாராயணனுக்கு உண்டு என்பதற்கு அவரது கடந்த கால ராஜதந்திர அனுபவங்கள் சான்று பகர்கின்றன.

## கேரளாவில் பிறந்தவர்

கேரள மாநிலத்தில் கோட்டயம் மாவட்டத்தில் உள்ள ஒரு குக்கிராமத்தில் 1921 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வறிய ஆயுள் வேத வைத்தியரது மகனாகப் பிறந்தார் நாராயணன்.

கல்லூரிப் படிப்பை திருவனந்தபுரத்தில் பெற்ற நாராயணன் திருவாங்கூர் பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் எம். ஏ. பட்டம் பெற்றார். பின்னர் புலமைப் பரிசில் பெற்று புகழ் பூத்த அறிஞர் ஹரோல்ட் லஸ்கியின் மாணவராக இருந்து கலாநிதிப் பட்டம் பெற்றார்.

பின்னர் அறிஞர் லஸ்கியின் சிபார்சின் பேரில் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் காலத்தில் இந்திய ராஜதந்திர சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். தாய்லாந்து, துருக்கி, சீனா ஆகிய நாடுகளில் இந்தியத் தூதராக நாராயணன் பதவி வகித்தார்.

ஓய்வு பெற்ற பின் ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இரு ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் 1980 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இந்தியத்தூதராக நியமிக்கப்பட்டார்.

திரு. நாராயணனின் அரசியல் பிரவேசம் 1984 இல் இந்திரா காந்தியின் ஆசியுடன் ஆரம்பித்தது. அதே ஆண்டின் இறுதியில் ஒட்டப்பாலம் மக்களவைத் தொகுதியில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார். தொடர்ந்து 1989, 1991 ஆம் ஆண்டுகளில் நடந்த தேர்தல்களிலும் அவர் வெற்றியீட்டினார்.

ஒரு ராஜதந்திரியாக வாழ்க்கையை ஆரம்பித்த நாராயணன் பிற்படுத்தப்பட்ட வகுப்பின் பிரதிநிதியாக 1992 இல் உப ஜனாதிபதியானார்.

பர்மிய பிரஜை ஒருவரை மணம் முடித்த நாராயணனுக்கு இரு புதல்விகள் உள்ளனர்.

## களத்தில் குதித்த சேஷன்

14 ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தலில் கே. ஆர். நாராயணனை எதிர்க்கும் ரி. என். சேஷன் மகாராஷ்டிராவின் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சிவசேனையின் ஆதரவுடன் மட்டுமே களத்தில் குதித்திருக்கிறார்,

கடந்த காலங்களில் நடந்த தேர்தல்களில் முன்னாள் நீதியரசர்கள் சிலரே இவ்வாறு வெற்றி நிச்சயமாகிவிட்ட வேட்பாளர்களை எதிர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது வழக்கமாக இருந்தது. கடைசியாகநடந்த ஜனாதிபதித் தேர்தலில் பேராசிரியர் ஜி. ஜி. ஸ்வெல் போட்டியிட்டார். இந்தமுறை சற்று வித்தியாசமாக நாட்டின் தேர்தல் திணைக்களத்தை தமது அதிரடிச் சீர்திருத்தங்களால் ஒரு கலக்குக் கலக்கிய முன்னாள் தேர்தல் ஆணையாளரானசேஷன் போட்டியிடுகிறார்.

## உப ஜனாதிபதி பதவி யாருக்கு?

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டி கே. ஆர். நாராயணன் இந்தியாவின் முதல் பிரஜை ஆவது உறுதியாகி விட்டதால் தற்போது எல்லோருடைய கவனமும் காலியாகப் போகும் உப ஜனாதிபதிப் பதவி மீதே திரும்பியிருக்கிறது.

இந்தியாவில் உப ஜனாதிபதியே மாநிலங்களவையின் தலைவராக இருப்பதாலும்—

அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட அதி கூடிய வாய்ப்பு உபஜனாதிபதிக்கே உரியது என்பதாலும் இப் பதவியின் முக்கியத்துவத்தை இலகுவில் உதாசீனம் செய்துவிட முடியாது.

உபஜனாதிபதிப் பதவிக்கு பலரது பெயர்கள் அடிபடுகின்றன. அவர்களில் சுதந்திரப் போராட்ட வீரர் மௌலானா அப்துல் கலாம் ஆஸாத்தின் பேர்த்தியான டாக்டர் திருமதி நஜ்மா ஹெப்துல்லாவின் (வயது 57) பெயரே முன்னணியில் திகழ்கிறது.

இவர் தொடர்ந்து மூன்று முறை மாநிலங்கள் அவையின் துணைத் தலைவர் பதவியை சிறப்புற வகித்து வந்துள்ளார். அத்துடன் திருமதி நஜ்மா உப ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் இந்தியாவின் முதல் முஸ்லிம் பெண் உப ஜனாதிபதி என்ற புகழும் இவரையே சாரும். எனவே இவரது தெரிவு முக்கியத்துவம் பெறும் ஒன்றாக உள்ளது.

உப ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிட முன்வந்துள்ள ஏனையோரில் முன்னாள் மத்திய அமைச்சரும் தேசிய மாநாட்டுக் கட்சியைச் சேர்ந்தவருமான டாக்டர் கரண் சிங் முக்கியமானவர்.

எனினும் அரசியலில் திருமதி நஜ்மாவுக்கு உள்ள செல்வாக்கை மீறி இவரால் வெற்றியீட்ட முடியுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்தியா தனது சுதந்திர தினப் பொன் விழாவைக் கொண்டாடவுள்ள தருணத்தில் புதிய ஜனாதிபதி பதவியேற்க உள்ளதால் இம்முறை புதிய ஜனாதிபதித் தேர்தல் அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்வலங்கள்....

(V ஆம் பக்கத் தொடர்ச்சி)

போய்விடுவார். தப்பித்தவறிக் கூட எவராவது நாதனிடம் அக்காச்சி குடும்பத்தைப் பற்றி விசாரிக்கமாட்டார்கள். ஏனென்றால் அந்த விசாரிப்பை அவரால் சீரணித்துக்கொள்ள முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் '' வேலுப்பிள்ளை அண்ணேன்ரை இந்த வளவு இருக்கிறதாலை எங்களுக்குச் சீவியகாலம் முழுக்க ஆட்டுக்குக் குழைக்குப் பஞ்சமில்லைப் பாருங்கோ; சீமான் புண்ணியவான் '' -- இது அவர் குழையறுத்துக்கொண்டிருக்கும் போது அந்த வளவோரமாகப் போவோர் வருவோரிடம் அடிக்கடி கூறிக் கொள்ளும் வசனம்.

வருடாந்த ஆவணிச் சதுர்த்தி விழா ஊர்க்கோயிலில் களை கட்டுவது வழக்கம். ஊரே விழாக்கோலம் பூண்டு நிற்கும். வருடம் ஒரு முறை நடைபெறும் கோலாகலத் திருவிழாவாதலால் சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள் ஆகிய எல்லோரும் அலங்கார ஆடைகளோடும், உற்சாகத்தோடும், குதூகலத்தோடும் காணப்படுவர்.

விழாவின் உச்சக்கட்டமாக விநாயகப் பெருமான் ஊரிலுள்ள வீதிகள் தோறும் வலம் வருவதால் சகல வீதிகளும் கூட்டிச் சுத்தமாக்கப்பட்டு அலங்கார தோரணங்களோடு காட்சியளிக்கும்.

ஒவ்வொரு வீட்டு வாசல்களிலும் எம்பெருமான் தரித்து நிற்பதால் ஒவ்வொருவரும் தத்தமது வீட்டு வாசல்களை அலங்கார வளைவுகளால் அலங்கரித்து பூரண கும்பம் வைப்பர்.

சங்கீத நாதஸ்வர கலாபூஷணம் விஸ்வநாதன் குழுவினரின் நாதஸ்வர மேளதாள வாத்தியங்களோடும், பக்தர்களின் பஜனைப்பாடல்களுடனும் ஊர் வீதி வலம் வரும் எம்பெருமானின் திருக்காட்சி காணக்கிடைக்காத பெரும் பேறாகும்.

இத்திருவிழாவின் உபயகாரர் மாத்தறை வர்த்தகரான இந்த ஊரைச் சேர்ந்த நாணயம் நாராயணசுவாமி. அவர்கள் இவ்விழாவுக்கென்றே ஒரு வாரம் முன்பதாக மாத்தறையிலிருந்து ஊருக்கு வந்து விடுவார்.

சும்மா சொல்லக் கூடாது பாருங்கோ, பூணூல் தெற்பையோடை சங்கற்ப கோலத்திலை புன்சிரிப்போடை மனிசன் ஊர்வலத்திலை வந்தாரேயெண்டா பார்க்கக் கண்கொள்ளாக் காட்சிதான்.

அக்காச்சியும் எப்பிடியோ கடன்பட்டோ படாமலோ தன்பங்கிற்கும் ஒரு கும்பம் வைத்துவிடவேண்டும் என்று ஒவ்வொரு வருடமும் துடியாய்த் துடிப்பாள். அதனை ஒவ்வொரு வருடமும் சாதித்தும் விடுவாள்.

அவளுடைய நான்கு பிள்ளைகளும் ஊர்வல பஜனையோடு சேர்ந்து ஆடிப்பாடிக் குதூகலித்து மகிழ்வர்.

இப்படியாக எப்படிப்பட்டேனும் தானும் இந்த நிகழ்களில் தன்னுடைய உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்ற ஓர் உறுதியான எண்ணங்கொண்டவள் அக்காச்சி.

கோயில் திருவிழா என்றால் சிவராசாச் சட்டம்பியாருக்கு ஒரு தனிக்குதூகலம். கப்பல் பிரயாணத்துக்குக் 'கிளியரன்ஸ்' சேட்டிபிக்கேற் கிடைச்ச புழுகம். மனிசன்பூசிப் புனர்த்திஆசார சீவராகக் காட்சியளிப்பார். சட்டம்பியாருக்குச் சடங்குகள் சம்பிரதாயங்களிலை கொஞ்சம் அறிவிருப்பதால் கோயில் விஷயங்களில் அவருக்கு ஒரு தனி மரியாதை. சரியோ பிழையோ அவர் சொல்லுறதை குருக்களாயிருந்தாலென்ன யாராயிருந்தாலென்ன கேட்க வேண்டியதுதான்.

அவர் இப்படித்தான் ஒரு கொஞ்ச அறிவோடு கூடிய முரட்டுப் பிடிவாதக்காரன்.

வழமை போல சென்ற வருடம் எம்பெருமான் ஊர்வீதி வலம் வந்தார். அக்காச்சி வீட்டு வாசலில் அவர் நிற்கவில்லை. ஏனென்றால் எம்பெருமானிடம் ஆசீர்வாதம் பெற அந்த வீட்டில் எவருமில்லை. பக்தர்களின் அரோகரா கோஷம் வானைப் பிளந்தது. ஊர்வலத்தின் முன்னணியில் சென்று கொண்டிருந்த சிவராசாச் சட்டம்பியார் அந்த வளவுப் பக்கம் பார்க்க விருப்பமில்லாதவராக முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டார்; பின்பு தனது சங்கடமான நிலைமையை மூடிமறைப்பதற்காக அதியுச்ச தொனியில் ஓர் அரோகரா போட்டார். சட்டம்பியாரின் குரல் வானைப் பிளந்து சொர்க்கத்திலிருக்கும் பரம் பொருளின் காதுகளைக் கூட செவிடாக்கியிருக்கும்.

மீண்டும் இவ் வருடமும் எம்பெருமான் ஊர் வீதி வலம் வந்தார். ஆனால் அவர் அக்காச்சி வளவில் தரித்து நிற்கவில்லை. கூரையற்ற அக்காச்சி வீட்டுத் தூண்கள் எம்பெருமானை சோகத்தோடு வழியனுப்பின.

அந்த வளவின் சுற்றுப்புற மரங்களின் வேர்களிலும், இலைகளிலும், தண்டுகளிலும் ஓடும் ஜீவ நீரோட்டமானது அக்காச்சி குடும்பத்தின் கடந்த கால வாழ்க்கையின் இலட்சியங்களையும், எதிர்பார்ப்புக்களையும், நம்பிக்கைகளையும் சுமந்து நிற்கும்.

துண்டும் துணுக்குமாக ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் அவர்களின் பழைய பாவனைப் பொருள்கள் எல்லாம் இடிந்து போய்விட்ட அவளின் வாழ்க்கைக் கோட்டைக்குச் சான்று பகரும். காற்றினால் அங்குமிங்கும் சுற்றிச் சுழன்று ஊசலாடும் காய்ந்து சருகாகிப் போய் விட்ட இலைகுழைகளின் சரசரப்புச் சத்தமானது வேலுப்பிள்ளையரின் பொக்கை வாய்ச்சிரிப்பு நினைவு மீட்கும்.

சரிந்து நிற்கும் கூரையற்ற கற்தூண்கள் இன்னும் கீழே விழுந்து விடவில்லை. என்றோ ஒருநாள் எம்மைத் தாங்கிப் பிடிக்க அவள் வருவாள், வருவாள் என ஏங்கித் தவித்து நிற்கின்றன.

இவையெல்லாம் எம்பெருமானை ஊமையாக நின்று வழியனுப்பின.

மீண்டும் எம்பெருமான் அடுத்த வருடமும் ஊர்வீதி வலம் வருவார். ஆனால் அக்காச்சி வருவாளா? ஊர்வலங்கள் மீண்டும் மீண்டும் வரும். ஆனால் அக்காச்சி...?

★

## இந்த வார...

(VIII ஆம் பக்கத் தொடர்ச்சி)

உதவிகள் செய்வார்களா? என எதிர்பார்க்கக் கூடாது. தொழில் ஸ்தானத்தில் புகைச்சல்கள் ஏற்படச் செய்யும். அடிக்கடி உடம்பில் களைப்பு ஏற்படும். கை, கால் தாக்கம் வரலாம். தெய்வ வழிபாடுகளும் தர்மச் செலவுகளும் அதிகரிக்கும்.

**மீனம்:** உங்களுக்குப் பலவித கஷ்டங்கள் ஏற்படச் செய்யும். சிறைப்பட்ட வாழ்வு போன்ற உணர்வுகள் ஏற்படச் செய்யும். புத்திரர்களால் மகிழ்ச்சி ஏற்படும். சிலருக்குப் பழைய கடன்கள் வசூலாகும். நம்பி ஏமாறும் நீங்கள் பொருளிலும் கொடுக்கல் வாங்கலிலும் அவதானமாக இருக்க வேண்டும். தூரதேசத்து யாத்திரைகளை விலக்கி நடக்கவும். நண்பர்களையும், இன சனங்களையும் நம்பி நடக்கக் கூடாது. தெய்வ வழிபாடு முக்கியமாகும்.

# எய்ட்ஸை விட வேகமாக பரவும் ஈரல் அழற்சி நோய்!

உலகம் முழுவதும் எய்ட்ஸைப் பற்றியும் அதைப் பரப்பும் நுண்ணுயிர்க் கிருமிகள் குறித்தும், அந்நோய் வராமல் காப்பாற்றுவது— அதற்குத் தடைமருந்துகண்டு பிடிப்பது ஆகியவை குறித்தும் மிகப்பரபரப்பாக—ஆரவாரமாக — பிரலாபித்துக் கொண்டிருக்க—

மற்றொரு புறத்தில் நவீன உலகின் கவனத்தை ஈர்க்காமலேயே பிறிதொரு நுண்ணுயிர்க் கிருமி அதைவிடப் பயங்கரமாக—ஆனால் அமைதியாக— சந்தடியின்றி— பரவி, மனித உயிர்களைக் கபளீகரம் செய்து வருகின்றது.

கல்லீரல் அழற்சி எனப்படும் மங்கன்மாரி (Hepatitis B) என்ற நோயை ஏற்படுத்தும் HBV வைரஸே அதுவாகும்.

கல்லீரல் அழற்சியை ஏற்படுத்தும் HBV நுண்ணுயிர்க் கிருமியானது எய்ட்ஸ் நுண்ணுயிர்க் கிருமிகளை (HIV) விட நூறு மடங்கு தொற்றும் சக்தி உடையதாகும்.

இந்த HBV நுண்ணுயிர்க் கிருமிகள் ஒருவரைத் தொற்றிக் கொண்டதும் — மிகவும் அமைதியாக— தொற்றிக் கொண்டவர் உணராதவகையில்—தனது தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ளுகின்றன. மிகவும் முற்றிய நிலையை அடையும் வரை எவரும் இந்த நுண்ணுயிர்க் கிருமிகளின் தாக்கத்தை உணர்வதில்லை.

### உலக சுகாதார ஸ்தாபனக் கணிப்பு

எய்ட்ஸ் நோயால் பீடிக்கப்பட்ட அல்லது எய்ட்ஸ் கிருமிகளைக் காவுகின்ற ஒருவரின் இரத்தத்திலிருந்து இன்னொருவருக்கு எய்ட்ஸ் நோய் தொற்றவேண்டுமானால் — குறைந்தது 0.1 மில்லிலீற்றர் அளவுடைய இரத்தம் தேவை. ஆகக்குறைந்தது அந்தளவு இரத்தத்தினூடாகவே அத் தொற்று ஏற்பட முடியும்.

ஆனால் ஈரல் அழற்சி நோய் தொற்ற வேண்டுமானால் இதில் பத்தாயிரத்தில் ஒரு பங்கு இரத்தம் இருந்தாலே போதும். அதாவது 0.00004 மில்லி லீற்றர் இரத்தம் இருந்தாலே போதும்.

ஆகவே மிகச் சிறிய துளி இரத்தம் ஊடாகவே HBV வைரஸுக்கள் தொற்றிப் பரவி விடும் என்பது கண்கூடு.

எய்ட்ஸ் நோயின் தொற்றுக்கு உலகில் ஒரு கோடி 85 லட்சம் பேர் இலக்காகியிருக்கின்றார்கள் என்றும்—

ஆனால் ஈரல் அழற்சி நோய்த் தொற்றுக்கு உலகில் இருநூறு கோடிப் பேர் ஆளாகியிருக்கின்றார்கள் என்றும்— உலக சுகாதார ஸ்தாபனக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

உலகம் முழுவதும் எய்ட்ஸ் நோய் பீடிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 45 லட்சம். ஆனால் ஈரல் அழற்சி நோய் பீடித்தவர் எண்ணிக்கையோ 35 கோடி ஆகும்.

ஓர் எய்ட்ஸ் நோய் காவியிலிருந்து விபத்து முறையில் எய்ட்ஸ் நோய் தொற்றுவதற்கு 0.5 வீத வாய்ப்பே உள்ளது.

ஆனால் HBV வைரஸ் காவியிலிருந்து மற்றொருவருக்கு விபத்து முறையில் தொற்று ஏற்படுவதற்கு 7.30 வீத வாய்ப்புகள் உள்ளன என்று உலக சுகாதார ஸ்தாபனம்.

HBV வைரஸ் தாக்கத்துக்கு உட்படுபவர்களில் 35 வீதமானோர் நோய் முற்றிய கட்டத்தை அடைந்துள்ளனர்.

இந்த HBV நுண்ணுயிர்க் கிருமிகள் எவ்வாறு மனித உயிருக்கு அச்சுறுத்தலாக அமைகின்றன? முக்கியமாக அவற்றுக்குள்ள தொற்றும் ஆற்றல் மற்றும் அவை கடத்தப்படும் வழிகள் காரணமாகவே அவை மனித உயிர்களுக்கு அச்சுறுத்தலாகின்றன.

பின்வரும் வழிகளால் இந்த வைரஸ் மனிதனைத் தொற்றிக் கொள்ளலாம்.

1. சிகை அலங்கார நிலையங்களிலுள்ள சவர அலகுகளால் —
2. காது, மூக்குத் துவாரங்கள் ஊடாக ஊடறுத்துச் செல்வதால் அல்லது உடலின் எப்பாகத்திலேனும் பச்சை குத்துவதால் —
3. மருத்துவமனைகளில் உரிய முறைப்படி கிருமிகளை அகற்றாத ஊசிகளைப் பயன்படுத்துவதால் —
4. துப்புரவற்ற நீர் மூலமாக —
5. இந்த நோய்க் குறிகள் எவையும் தென்படாத — ஆனால் HBV நுண்ணுயிர்க் கிருமிகள் தொற்றியவருடன் உடலுறவு கொள்வதால் —
6. தொற்று நோய்க் கிருமிகளைக் கொண்ட இரத்தத்தை உடலில் ஏற்றுவதால் —
7. தாயிலிருந்து குழந்தைக்கு —

ஒருவரை HBV வைரஸ் தொற்றுமாயின் பின்வரும் மூன்றில் ஏதாவது ஒன்று நிகழலாம்.

(அ) இந்தக் கிருமிகள் தொற்றிக் கொண்டவருக்கு கல்லீரல் புற்று நோய் ஏற்பட்டு அதன் காரணமாக அவர் இறக்க நேரிடலாம்.

(ஆ) இக் கிருமிகளின் தாக்கத்தை எதிர்த்து தாக்குப் பிடிக்கக் கூடிய உடலமைப்பைக் கொண்ட அதிர்ஷ்டசாலியாக அவர் இருப்பின் அவர் வாழ்நாள் முழுவதும் பாதுகாப்புடன் இருக்கலாம்.

(இ) இந்த HBV வைரஸ் காவியாக (CARRIER) ஆக அவர் இருப்பார்.

### புற்று நோயை தூண்டும் காரணி

புற்றுநோய்க்குத் தூண்டும் முதல் காரணியாக புகையிலை உள்ளது. அதற்கு அடுத்து புற்று நோயைத் தூண்டும் காரணியாக HBV வைரஸ் உள்ளது.

ஆண்டொன்றுக்கு சுமார் 8 லட்சத்து 50 ஆயிரம் பேர் HBV வைரஸின் தாக்கத்தால் ஏற்பட்ட கல்லீரல் புற்றுநோய்க்கு இலக்காகி உயிரிழக்கின்றார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்த இழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன.

மிகவும் பாதுகாப்பான— ஆற்றல் மிக்க — தடையூசி (பால்) குத்தும் முறை ஒன்று உள்ளது. (Hepatitis B Vaccine).

ஆறுமாத இடைவெளிக்குள் இத்தகைய பால் ஊசிகளை மூன்று தடவைகள் குத்த வேண்டியிருக்கும்.

சிசுக்களுக்கு தடை ஊசி போடும் திட்டத்துக்குள் இந்த HBV வைரஸுக்கு தடை ஊசி போடுவதையும் சேர்த்துக் கொள்ளும் திட்டம் நடைமுறைக்கு வந்திருக்கின்றது.

### நோய் தொற்றும் ஆபத்து யாருக்கு அதிகம்?

சரி. இந்த HBV வைரஸ் தொற்று நோய்க்கு அதிகம் ஆளாகக் கூடிய ஆபத்து யார் யாருக்கு உள்ளது?

1. மருத்துவ மற்றும் உப மருத்துவ சேவையில் ஈடுபட்டிருப்போர் மற்றும் அவர்களின் குடும்பத்தவர்கள்.
2. அடிக்கடி இரத்த மாற்று சிகிச்சைக்கு உட்பட வேண்டிய நோயாளர்கள் மற்றும் அவரது குடும்பத்தவர்கள்.
3. தொற்று நீக்காத ஊசிகள் மற்றும் கருவிகளின் பாவனைக்கு உட்படுத்தப்படும் எல்லாவகை நோயாளர்கள்.
4. ஒரு பால் மற்றும் பலருடன் உறவு வைத்திருப்பவர்கள்.
5. முட்டி மோதும் விளையாட்டுக்களான உதைபந்தாட்டம், ஹொக்கி, குத்துச் சண்டை, றகர், கூடைப்பந்து போன்ற விளையாட்டுக்களில் பங்குபற்றுபவர்கள்.
6. தொற்றுநீக்காத கருவிகளால் காது குத்துபவர்கள், பச்சை குத்துபவர்கள்.
7. தொற்றுக்கு இலக்கான தாய்மாருக்குப் பிறக்கும் குழந்தைகள்.
8. தொற்றுக்கு இலக்கான குழந்தைகள் சொறி, சிரங்கு போன்ற நோய்களுக்கு ஆளாகும் போது அந்த குழந்தைகளைத் தொட்டு விளையாடி ஒன்றாக உண்டு, உடுத்து, படுக்கும் ஏனைய குழந்தைகள்.
9. பொது முகச்சவர கத்திகள், பொது பல்லுத் தீட்டும் பிரஷ்கள் போன்றவற்றைப் பயன்படுத்துபவர்கள்.
10. நன்னீரை அருந்தாத குடும்பங்களைச் சேர்ந்தோர்.

HBV வைரஸ்கள் ஈரல் இழைகளை அழித்து ஈரல் புற்று நோய்க்கு வழி கோலுகின்றன.

உலகில் தொற்று மூலம் பேரழிவை —அதிக உயிரிழப்பை— ஏற்படுத்தும் நோயாக ஈரல் அழற்சி நோய் கருதப்படுகின்றது.

இந்த HBV வைரஸ் தொற்றினால் வருடாந்தம் இருபது லட்சம் பேர் உயிரிழப்பதாக ஒரு புள்ளி விவரம் கூறுகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை இருபது இந்தியர்களில் ஒருவர் இந்த வைரஸைக் காவித் திரிவதாகக் கூறப்படுகின்றது.

HBV வைரஸ் குழந்தைகளில் இலகுவாகத் தொற்றிக் கொள்கின்றது. எனினும் தொற்றின் விளைவை அது உடனே வெளிப்படுத்துவதில்லை. குழந்தைக்குள் இருந்தவாறு வேறு குழந்தைகளிலும் வேறு நபர்களிலும் அது தொற்றிக் கொள்ளும்.

உடல் வலுவுள்ள குழந்தைகள் இந்த வைரஸைத் தோற்கடித்து அதற்கு எதிரான தடுப்பு நிர்ப்பீடனத்தைப் பெற்றுக் கொள்கின்றன. வலுவற்ற குழந்தைகளில் நிலையாகத் தங்கியிருக்கும் இந்த வைரஸின் சந்ததி, அந்தக் குழந்தை வளர்ந்து ஆளாகிய பின்னர் ஈரலை அரிக்கத் தொடங்குகின்றது; ஈரல் புற்று நோய் போன்ற ஆபத்துகளை உருவாக்கி உயிரிழப்பை ஏற்படுத்துகின்றது.

★

## வைத்திய சஞ்சீவி

- கஜனி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் உள்நாட்டு யுத்தத்தை நோக்கி நகரும் கம்போடியா

## தலைமைப் பீடத்தில் அதிகாரப் போட்டி

கெமரூச் தலைவர் பொல் பொட் பிடிபட்டதாகச் செய்தி வெளிவந்து கம்போடியாவில் அரசபடைகளுக்கும் கெமரூச் கெரில்லாக்களுக்கும் இடையிலான யுத்தம் முடிவுக்கு வந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், கம்போடியாவின் ஆட்சி பீடத்தில் அதிகாரப் போட்டி ஆரம்பித்துள்ளது.

கம்போடியாவின் முதலாவது பிரதமர் நொரடோம் றணரித்தின் படைகளும் இரண்டாவதுபிரதமர் ஹூன்சென்னின் படைகளும் தலைநகர் நொம்பெனில் சண்டையில் ஈடுபட்டுள்ளன.

ஹூன்சென் ஆதரவுப் படைகளின் முழுக் கட்டுப்பாட்டில் நொம்பென் வந்து விட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நொம்பெனில் சிக்கி இருக்கும் வெளிநாட்டுப் பிரசைகளை பாதுகாப்பாக அகற்றும் முயற்சியாக தாய்லாந்து விமானம் ஒன்று நூற்றுக்கும் மேற்பட்ட தாய்லாந்துப் பிரசைகளை பாங்கொக் கொண்டு போய்ச் சேர்த்துள்ளது. அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் தமது பிரசைகளை, வெளியேறத் தயாராக இருக்கும்படி கேட்டுள்ளன.

பல தசாப்தகால உள்நாட்டு யுத்தம் காரணமாக சீரழிந்துபோய் உள்ள கம்போடியா மீண்டும் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

### ஒருநாட்டுக்கு 2 பிரதமர்கள்

கம்போடிய தேசிய ஐக்கிய முன்னணித்தலைவர் நொரடோம் றணரித்தையும் (Norodom Ranaridh) கம்போடிய மக்கள் கட்சித்தலைவர் ஹூன்சென்னையும்(Hun Sen) பிரதமர்களாகக் கொண்ட தற்போதைய கம்போடிய அரசாங்கம் 1993 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தலின்பின் பதவி ஏற்றது.

பலகோடி ரூபா செலவில் ஐ. நாவினால் நடத்தப்பட்ட அந்தத் தேர்தலில் நொரடோம் றணரித் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி கட்சியே அதிக இடங்களைக் கைப்பற்றியது.

தேர்தலில் மோசடி இடம் பெற்றதாகக் கூறி தேர்தல் முடிவுகளை ஹூன் சென் ஏற்க மறுத்தார். ஐ. நாவின் முயற்சியால் இரு கட்சிகளுக்கும் இடையில் அதிகாரப் பங்கீடு செய்யப்பட்டது.

உலகிலேயே எந்த நாட்டிலும் இல்லாதவாறு இரு பிரதமர்கள் — முதலாவது பிரதமராக நொரடோம் றணரித்தும் இரண்டாவது பிரதமராக ஹூன் சென்னும் — கம்போடியாவில் பதவி ஏற்றார்கள்.

1998 மே மாதம் கம்போடியாவில் மீண்டும் தேர்தலை நடத்துவது என்று ஐ. நா தலைமையிலான சமாதான ஒப்பந்தத்தில் இரு தலைவர்களும் இணக்கம் கண்டிருந்தனர்.

கம்போடிய அரசியலில் மூன்றாவது சக்தியான கெமரூச் இயக்கம், ஐ.நா வின் மத்தியஸ்தத்துடன் செய்து கொள்ளப்பட்ட அந்த ஒப்பந்தத்தில் அப்போது கையெழுத்திடவில்லை. கடந்த நான்கு வருட காலமாக மிகக் குறைந்த அளவிலான தாக்குதல்களை றணரித் — ஹூன்சென் தலைமையிலான கம்போடிய கூட்டரசுக்கு எதிராக கெமரூச் இயக்கம் நடத்தி வந்தது. எனினும் ஆட்சியைக் கைப்பற்றும் அளவுக்கு கெமரூச் பலம் இழந்திருந்தது.

### கெமரூச் இயக்கத்தில் பிளவு

1975 — 79 ஆண்டு காலத்தில் கம்போடியாவில் கெமரூச் ஆட்சியில் இருந்த போது அதன் வெளிநாட்டமைச்சராக இருந்தவர் இயங்சாரி (Ieng Sary).

1996 இல் பொல் பொட்டுடன் கருத்து முரண்பாடு கொண்டு கெமரூச் இயக்கத்தில் இருந்து அவர் வெளியேறி இருந்தார்.

அவருடன் ஆயிரக் கணக்கான கெமரூச் அதிருப்தியாளர்களும் வெளியேறினர்.

தற்போது பொல்பொட் இவர்களின் காவலில் இருப்பதாக நம்பப்படுவதால் கம்போடிய அரசுடன் பேரம் பேசும் வலுவான நிலையில் இவர்கள் இருந்து வந்தனர்.

உலக உலா

ஏன்.பி.சீலன்

இந்த நிலையிலேயே கம்போடிய ஆட்சிப் பீடத்தில் தற்பொழுது அதிகாரப் போட்டி ஏற்பட்டுள்ளது.

### 1971 இல் ஆரம்பித்த போராட்டம்

கெமரூச் இயக்கத்தின் கெரில்லா நடவடிக்கைகள் கம்போடியாவில் லொன் நொல் (LON NOL) ஆட்சிக்கு எதிராக 1971 ஆம் ஆண்டே முதல் தடவையாகி ஆரம்பித்தன.

நொரடோம் றணரித்தின் தந்தை நொரடோம் சிஹானூக்கின் ஆட்சியை 1970 இல் அமெரிக்க ஆதரவுடன் கவிழ்த்துவிட்டு லொன்நொல் பதவிக்கு வந்திருந்தார்.

1975 ஏப்ரலில் தென் வியட்நாமின் தலைநகர் சைகோன் வியட்கொங் கெரில்லாக்களிடம் வீழ்ச்சி அடைவதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் கம்போடியாவில் லொன் நொலின் ஆட்சியைக் கவிழ்ப்பதில் கெமரூச் வெற்றி கண்டிருந்தது.

தென் வியடநாமிலிருந்து தனது ஆதரவு ஜனாதிபதி நுயன்வான் தியூவையும் நொம்பெனில் இருந்து லொன் நொல்லையும் அமெரிக்கா அப்பொழுது பாதுகாப்பாக விமானம் மூலம் வெளியேற்றி இருந்தது.

### 2 பிரதமர்களும் வெளிநாட்டில்

கம்போடியாவின் முதலாவது பிரதமர் ரணரித் தற்போது பிரான்ஸில் தங்கி உள்ளார்.

இரண்டாவது பிரதமர் ஹூன்சென் வியட்நாமில் தங்கி இருக்கிறார்.

பிரதமர்கள் இருவரும் வெளிநாடுகளில் தங்கி இருக்க அவர்களது ஆதரவுப் படைகள் கம்போடியாவில் அதிகாரப் போட்டியில் ஈடுபட்டுள்ளன.

### வியட்நாம் படையெடுப்பு

1979 ஆம் ஆண்டு வியட்நாம் படைகள் கம்போடியாவுக்குள் நுழைந்து பொல் பொட்டையும் அவரது முக்கிய சகாக்களான இயங்சாரி, கியூசாம்பன், சொன்சென் ஆகியோரையும் பதவியில் இருந்து துரத்திய பின்னர் வியட்நாம் ஆதரவாளரான ஹூன்சென்னைப் பிரதமர் பதவியில் அமர்த்தின.

சமீபத்தில் பொல் பொட்டினால் கொலை செய்யப்பட்ட சொன்சென் கெமரூச் ஆட்சிக் காலத்தில் கம்போடியாவிலுள்ள ருவோல் சிலாங் சித்திரவதை முகாமில் 20 ஆயிரம் கம்போடிய மக்கள் கொல்லப்படக் காரணமாக இருந்தவர். கெமரூச்சின் நான்கு வருடகால ஆட்சியில் 10 லட்சத்துக்கும் அதிகமானோர் மரணமடைந்தனர். இவர்களில் ஒரு லட்சம் பேர் வரை கொல்லப்பட்டனர். ஏனையோர் கெமரூச்சின் நடவடிக்கையால் ஏற்பட்ட பட்டினி, நோய்

(XII ஆம் பக்கம் பார்க்க)

# போதைத் தீ....

(VI ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாயிகள் இச்செடியின் விளைவுகளைத் தாம் பயன்படுத்துவது கொடிய பாவம் என நினைக்கிறார்கள்; எனவே பிழைத்தார்கள். தமது சிறார்களை மறந்தும் பயிர்ப் பகுதிக்குள் இவர்கள் அனுமதிப்பதும் இல்லை. இதன் பாவனை பாலியல் தாக்கங்களையும் பிற நோய்களையும் தருதலால் தமது மதமும் இனமும் அழிந்துவிடும் எனவும் இவர்கள் பயப்படுகிறார்கள்.

அரசின் கடுமையான சட்டங்களினால் கண் காணிக்கப்பட்டு பயிரிடப்படும் இச்செடியின் விளைவுகளுக்கு அரசு தரும் விலையைவிடப் பலமடங்கு விலை கள்ளச் சந்தையில் கிடைக்கிறது. இதுவே இத் திட்டத்தின் பலவீனமாகவும் — ஆகிவிடுகிறது.

மூன்று முதல் நான்கு அடிவரை வளரும் பொப்பிச் செடியின் அறுவடைக் காலத்தில் கிடைக்கும் பால் போன்ற திரவம் மோர்பின் (Morphine) என்ற அல்க்கலோயிட், போதை அலகுகளைப் பெருமளவில் கொண்டுள்ளது. அறுவடையின்போது கிடைக்கும் செங்கபில நிறமான — வாசனையுள்ள — உலர்ந்த பால்தான் அபின் (Opium) எனப்படுகிறது. இதனை உண்பதன் மூலம் அல்லது புகைப்பதன் மூலம் போதையைப் பெறலாம்.

இந்த அபினைப் பெறுபவர்கள் களவாகவே பல ஆய்வுகூடச் செயற்பாடுகளைத் தொடருகிறார்கள். இதனை நீரில் கொதிக்க விட்டு, கரைத்து, சுண்ணாம்பு சேர்த்து கலக்கி வடிக்கிறார்கள். பின்பு அமோனியம் குளோரைட் சேர்க்கப்பட்டு மேலும் பல படிமுறை மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டு மோர்பின் தனித்துப் பிரித்து எடுக்கப்படுகிறது. இறுதியில் கிடைக்கும் தூய வெண்ணிறமான தூள் ஹெரோயின் எனப்படுகிறது.

இப்பாதையில் எத்தடைவரினும் சாவுக்கும் அஞ்சாமல் செயற்படும் கடத்தல் வியாபாரிகள் உள்ளவரை ஹெரோயின் கிடைத்துக்கொண்டே இருக்கும். இவர்களின் பணபலம் அரசியல் தலைவிதியைக் கூட மாற்றும் அளவுக்குச் செல்வாக்காக இருப்பது துர் அதிர்ஷ்ட வசமானது. மேலும் பொதுக் காரியங்களிலும் இவர்கள் பெருமளவு பணத்தை வாரி இறைத்து மக்களின் செல்வாக்கைத் தட்டிச் செல்கின்றனர். இவர்களின் வாகனங்கள், விமானங்கள் எல்லாம் சோதனைச் சாவடிகளில் பரிசோதனைக்கு உள்ளாக்கப் படுவதில்லை.

ஏவராவது சிறிய அளவுகளில் போதைப் பொருள்களைக் கடத்தி பிடிபடும் போதுதான் மரண தண்டனை வரை சட்டம் செயற்படமுடிகிறது.

### கஞ்சா

எமது பிரதேசங்களில் இவை புகமுன்னரே நீண்ட காலமாக கஞ்சா என்ற சொல் பழக்கப்பட்ட ஒன்றாக இருந்து வந்துள்ளது. இது பாரம்பரிய நாட்டு வைத்திய துறையில் கொடிகட்டிப் பறந்த ஒரு மூலிகை என்றால் அது மிகையாகாது. பல பரம்பரைகளாக இது மனிதனைத் திருப்திப் படுத்தும் ஒரு போதைப் பொருளாகவும் பயன்பட்டே வந்துள்ளது.

சுங்கான் புகைப்பவர்களுக்கு புகையிலையுடன் கலந்து பயன்படுத்த இது வாய்ப்பான ஒரு சந்தர்ப்பத்தை தந்துவிடுகிறது. மூளைக்குள் [illegible] வகையான THC (Tetradydro Cannabinol) என்ற பதார்த்தம் கஞ்சாவின் சாரமாக உள்ளது. ஒரு முறை புகைக்கப்பட்டால் மனித உடலில் இருந்து முற்றிலும் வெளியேற ஒரு வாரகாலம் பிடிக்கும் இதைத் தினம் தினம் புகைத்தால் நிலைமை என்னாகும்?

ஆரம்பத்தில் ஆராய்ச்சியாளர்கள் இதனைக் கெடுதல் இல்லாத ஒன்றாகவே கருதி வந்திருக்கிறார்கள். எனினும் அமெரிக்க ஆராய்ச்சிகள் கஞ்சாவின் தொடர்ச்சியான பாவனை பல பக்க விளைவுகளைத் தருதலை உறுதிசெய்துவிட்டது.

தீவிரமான கஞ்சாப் பாவனையாளர்களில் மூளை அலைவரிசைப் பரிசோதனையான EEG (Electro Encephalogram) செய்யப்பட்டபோது இவர்கள் சமநிலை குலைந்தமையும் வயதுக் கேற்ற விருத்தியின்மையும் கண்டுபிடிக்கப்பட்டது. இது மூளையை மட்டுமன்றி பாலியல் தொடர்பான ஓமோன்களையும் பாதித்து விடுகிறது. விதையிலும் சூலகத்திலும் படிவுறும் இயற்கையான ஒருவித கொழுப்புப்படையினை கஞ்சாப் பாவனை பாதித்து விடுகிறது.

ஒரு பெண் பிறக்கும்போது வயிற்றில் காணப்படும் சுமார் 400,000 முட்டைகள் அவளின் இனவிருத்திப் பருவம்வரை காக்கப்பட வேண்டியவை. தாயின் வயிற்றில் இக் குழந்தை இருக்கும்போதோ, பிறந்து வளரும் காலங்களிலோ தொடர்ச்சியான கஞ்சாப் பாவனை சந்திக்கும் என்றால் இந்த முட்டைகள் அழிக்கப்பட்டு விடலாம். மீண்டும் உருவாக்கம் பெற மாட்டாத இவை அழிக்கப்பட்டால் மலட்டுத்தன்மை நிரந்தரம் ஆகிவிடும்.

கலங்களில் உலக DNA [illegible] விழக்கச் செய்யும் தன்மையும், புற்று நோய்க்குரிய காரணிகளைத் தூண்டி விடுகையும், வெண்குருதி கலங்களைத் தாக்கி நோய் எதிர்ப்பு சக்தியை தகர்ப்பதும் கஞ்சாவுக்கு கைவந்த கலை என இப்போது நிரூபிக்கப் பட்டிருக்கிறது.

எனவே எமது சூழலில் கிடைக்கும் இப்போதைப் பொருள்கள் பற்றி மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய காலகட்டம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. அன்றாடம் சமுதாயத்தில் சீர்கேட்டையும் தாக்கத்தையும் தரும் இவற்றின் கடுமையான பாவனை சந்ததி அலகுகளின் DNA வரை சென்று மனித சந்ததியையே உருமாற்றி விடும் வல்லமை கொண்டவை என்பதையும் இங்கு தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் எழுகிறது.

### ஜப்பான் ஒரு முன்மாதிரி

பலதுறைகளிலும் உலகினுக்கோர் வழிகாட்டிபோல முன்னேறிக் கொண்டிருக்கும் ஜப்பான். 1970 களில் போதைப் பொருள் ஒழிப்பில் தொடர் நடவடிக்கைகள் மூலம் உலகிலிருந்து அம்மை நோய் ஒழிக்கப்பட்டது போலவே அங்கு இது அருகி விட்டது. அந்நாட்டு மருத்துவத் துறை மாணவர்கள் தமது கல்விக்குத் தேவையான அனுபவத்தைப் பெறக்கூட ஒரு போதையால் பாதிக்கப் பட்டவனை காணமுடியாத நிலை இருக்கிறது.

இடைக்காலத்தில் 50,000 வரையிலான பாவனையாளர்களும் பல விநியோகத்தர்களும் ஜப்பானுக்குள் புகுந்து கொண்டது உண்மை தான். நிலைமை மோசமடை முன் அரசு விழித்துக் கொண்டது. கடுமையான சட்டங்கள் மட்டும் கொண்டுவரப் படவில்லை. அவை செயல் வடிவமும் பெற்றன. அரசின் போக்கை அவதானித்த பலரும் தாமாகவே ஒதுங்கிக் கொண்டார்கள்.

பாவனையாளர்கள் வைத்தியசாலையில் நீண்ட காலம் பராமரிக்கப் பட்டு அந்தச் சிந்தனையே அற்ற நிலையும் — பட்டது போதும் இனி வேண்டாம் என்ற ஞானமும் — வந்தபின்பே வெளியேற அனுமதிக்கப்பட்டார்கள். அமெரிக்காவிலோ ஹெரோயின்பாவனையாளரைதிருத்த வலு குறைந்த மெதடோன் (Methadone) போன்ற மருந்துகளைக் கொடுத்து தமக்கே உரிய பாணியில் நோயாளியை — பாவனையாளரை — திருப்திப்படுத்தி திருத்த முனைகிறார்கள். இப்படியான மென் போக்குகள் போதை விடயத்தில் ஜப்பானில் எடுபடாது. கடும் போக்குகள் மூலமே —பாவனையாளரை கட்டி வைத்துக் கூட— இதை மறக்கச் செய்யவே ஜப்பான் முயலுகிறது.

திடீரென போதைப் பாவனையை நிறுத்தினால் நோயாளிக்கு ஏற்படும் அசௌகரியங்கள் — தலைச் சுற்று — விரக்தி போன்ற பல தன்மைகள் பற்றி எல்லாம் சுறுசுறுப்பாக இயங்கும் ஜப்பானுக்கோ சவலைப்பட நேரம் கிடையாது. 1870 லேயே ஜப்பானில் போதைப்பொருள் தடுப்பு சட்டம் இருந்திருக்கிறது. சுமார் 100 ஆண்டுகள் கழிந்த நிலையில் வெற்றியும் கிடைத்துள்ளது.

இந்த நிலை நீடிக்குமா? இடையில் யாராவது புகுந்து விளையாட முடியாத அளவுக்கு ஜப்பானால் தொடர்ந்து விழிப்பாக இருக்க முடியுமா? ஜப்பானின் போக்கை இது விடயத்தில் அமெரிக்காவோ, அடுத்த நாடுகளோ கடைப் பிடித்தால் என்ன?

இப்படிப் பல வாதங்கள். இப்பிரச்சினையை அரசுகளோ, தனிப்பட்டவர்களோ நுட்பமாக களைந்தெறிய முயலாதபோது, தீ நாக்குகள் வைக்கோற் போரிலே பரவுதல் போலவே மனிதசமுதாயத்தை இப் போதைத் தீ காவு கொண்டு விடும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் போக்குக் குறித்து டக்ளஸ் அதிருப்தி!

நாடாளுமன்றத்தில் ஆகக் கூடிய உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்க்கட்சி ஈ.பி.டி.பி.

அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, அரசுத் தரப்புடன் இணைந்து செயற்பட்டு வருகின்ற போதிலும்



சந்திரிகா

பொது மக்கள் ஐக்கிய முன்னணி குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறித்தும் அவர் அதிருப்தி கொண்டிருந்ததாகக்ப கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் — குறிப்பாக பிரேமதாஸா ஜனாதிபதியாக இருந்த போது — டக்ளஸின் அமைப்பு அரசுடன் மிக நெருக்கமான செயற்பாட்டை கொண்டிருந்தது.

பின்னர், சந்திரிகாவின் அரசு பதவியேற்றதைத் தொடர்ந்து அந்த அரசுடனும் அனுசரணைப் போக்கையே ஈ.பி.டி.பி. பின்பற்றத் தொடங்கியது.

என்றாலும் இப்போது அதிருப்தி நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் அரசு இன்னும் சரிவர ஆக்கபூர்வமாகச் செயற்படத் தொடங்கவில்லை என்று நினைக்கின்றார் டக்ளஸ்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும் அரசின் தீர்வுத் திட்டமும் புதரில் இருக்கும் பறவை போன்றது. அப்பறவை கையில் சிக்குமா? எப்போது சிக்கும்? — என்பவை எல்லாம் இப்போது பதில் கூற முடியாத விடயங்கள்.

ஆனால் 13 ஆவது திருத்தச் சட்டம் கையில் இருக்கும் பறவையைப் போன்றது.

புதரில் இருக்கும் பறவையைப் பிடித்துத் தருவதாகக் கூறிக்கொண்டு, கையில் இருக்கும் பறவையை இழப்பது போன்ற செயலையே அரசு செய்வதாக டக்ளஸ் நினைக்கிறார்.

13 ஆவது அரசமைப்புத்



டக்ளஸ்

திருத்தத்தை நடைமுறைப் படுத்தி, வடக்கு — கிழக்கு மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க இடைக்கால நிர்வாகம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கூறி வருகின்றார் டக்ளஸ். ஆனால் அக்கோரிக்கை 'செவிடன் காதில் ஊதிய சங்கு' போலவே உள்ளது.

போதாக்குறைக்கு, கடந்த வாரம் கொழும்பில் பி. நவரட்ணராஜா ஞாபகார்த்த உரையை நிகழ்த்திய நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ், 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் ஏற்க முடியாதது என்றும் —

வெளிநாட்டு (இந்திய) அழுத்தத்தால் கொண்டு வரப்பட்ட இந்த அரசமைப்புத் திருத்தத்தால் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு கெட்டதுதான் மிச்சம் என்றும் —

டக்ளஸுக்கு பதில் கூறுவது போல பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

அதிருப்தி அடைந்துள்ள டக்ளஸ், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிலும் பார்க்க ஐ.தே.கவுடன் இணைந்து செயற்படுவது இலகுவானது என்று தமது நண்பர்களிடம் கூறி வருகின்றார்.

இது தவிர, தம்மால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட இரு யாழ். எம். பிக்களின் முறைப்பாட்டைக் கேட்டுவிட்டு அதனடிப்படையில் தம்மை விசாரிக்கப் பொலீஸ் அலுவலர்களை ஜனாதிபதி தம்மிடம் அனுப்பி வைத்ததும் டக்ளஸைச் சீற்றமடைய வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

பொலீஸ் விசாரணையில் ஆக்கபூர்வமான பெறுபேறு ஏதும் கிட்டாமல் போனாலும் கூட ஈ.பி.டி.பி. தொடர்பான ஜனாதிபதியின் போக்கு நல்ல திசையில் இல்லை என டக்ளஸை எண்ண வைத்துவிட்டது இச்சம்பவம்.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் அப்போது ஆட்சியில் இருந்த ஐ. தே. கவின் பக்கத்தில் ஈ. பி. டி. பி. இருந்தது.

ஐ. தே. கவின் செல்வாக்கைக் குறைக்கவும், தேர்தல் பிரசாரத்தில் வாக்குகளை வேட்டையாடவும் ஈ. பி. டி. பிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முன்வைத்தது.

அவற்றில் ஒன்று சந்திரிகாவைக் கொல்வதற்கு ஈ. பி. டி. பி. சதித் திட்டம் தீட்டுகின்றது என்ற குற்றச்சாட்டாகும். இவ்வாறு தமக்கு எதிராக சந்திரிகா அணியினர் சுமத்திய குற்றச்சாட்டுக்களை டக்ளஸ் இலகுவில் மறந்துவிடமாட்டார் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

டக்ளஸின் சீற்றத்தின் விளைவு என்னவென்பதை அடுத்து வரும் வாரங்களில் நாம் காணலாம் என்று எதிர்பார்க்கலாம்.

இயன்றவரை அரசுக்குத் தலையிடி கொடுக்காமல் இணங்கிப் போகும் கொள்கையைக் கடைப்பிடிக்கவே டக்ளஸ் விரும்புகின்றார். ஆனால் அது எல்லை மீறினால், நாடாளுமன்றத்தில் நூலிழைப் பெரும்பான்மையில் ஆடிக்கொண்டிருக்கும் சந்திரிகா அரசு ஒன்பது எம். பிக்களைக் கொண்ட தமிழ்க் கட்சியுடன் பகைத்துக் கொள்ளவும் அதன் எதிர்ப்பைச் சம்பாதிக்கவும் நேரும்.

## மீண்டும் உள்நாட்டு....

(XI ஆம் பக்கத் தொடர்)
கள் மற்றும் காரணங்களால் இறந்தனர். ஒரு தூய்மையான விவசாய கம்யூனிஸ சமுதாயத்தைக் கம்போடியாவில் உருவாக்கும் நோக்கத்துடன் (Pure Agricultural Communist Society) பொல் பொட்டின் அரசு செயற்பட்டு நகரங்களில் உள்ள மக்களைக் கிராமங்களுக்கு விரட்டியது. அவரது முயற்சி சமுதாயத்தின் அடித்தளத்தையே நாசமாக்கி இருந்தது.

### பொல் பொட் விடயத்தில் மட்டும் இணக்கம்

நீண்ட காலமாக முரண்பாடு கொண்டிருந்த றணரித்தும் ஹுன்சென்னும் கெமரூச் தலைவர் பொல்பொட்டை சர்வதேச நீதி விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்பதில் மட்டுமே சமீபத்தில் கருத்து உடன்பாடு கண்டிருந்தனர்.

எனினும் கெமரூச்இயக்கத்திலிருந்து பிரிந்து வந்த தலைவர்களுக்கு மன்னிப்பு வழங்கக் கூடாது என்று ஹுன்சென் கருதுகிறார், அவர்கள் தேசத் துரோகிகள்என்கிறார் அவர்.

1993 இல் ஐ. நா. மத்தியஸ்தத்துடன் கம்போடியாவில் தேர்தல் நடைபெறும் வரை ஹுன்சென்னே பிரதமராக இருந்தார்.

வியட்நாம் ஆதரவுடன் ஹுன்சென் நடத்திய 14 வருடகால ஆட்சியின் போது தேசிய ஐக்கிய முன்னணித் தலைவர் றணரித், கெமரூச் தலைவர் பொல்பொட் ஆகியோர் இணைந்து அரசு எதிர்ப்புச் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர்.

1993 இல் றணரித்—ஹுன்சென் கூட்டாட்சி ஏற்பட கெமரூச் தனித்து எதிர்ப்பு இயக்கம் நடத்தி வந்தது.

### பல மாதங்களாக இயங்காத ஆட்சி மன்றம்

ஹுன்சென் — றணரித் கருத்து மோதல்கள் காரணமாக கம்போடிய ஆட்சி மன்றம் பல மாதங்களாகக் கூடவில்லை. அடுத்த ஆண்டு மே மாதம் நடைபெற உள்ள பொதுத் தேர்தலுக்கான சட்டங்கள் கூட இன்னும் நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்படவில்லை.

சமீபத்தில் டென்வெர் நகரில் நடைபெற்ற ஜி — 7 நாடுகளின் கூட்டத்தில் (தற்போது மேலதிகமாக ரஷ்யாவும் சேர்த்துக் கொள்ளப் பட்டதால் ஜி—8) கம்போடியப்பிரச்சினை குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

பிரெஞ்சு வெளி விவகார அமைச்சின் பிரதிச் செயலாளர் நாயகம் குளோட் மாட்டின், நொம்பெனின் முன்னாள் ஜப்பானிய தூதுவர் யூகியோ இமாகாலா ஆகியோரை கம்போடியாவுக்கு அனுப்பி இரு பிரதமர்களுக்கும் இடையில் சமரசம் செய்து வைக்க முயற்சிக்கப்பட்டது.

ஐ. நா. தலைமையிலான ஒப்பந்தத்துக்குஇணங்கி 1998 மே மாதம் கம்போடியாவில் தேர்தல் நடத்த இரு பிரதமர்களும் அப்பொழுது ஒப்புக் கொண்டனர்.

எனினும் தற்போது நொம்பெனில் நடைபெறும் சண்டை தேர்தல் நடப்பதை சந்தேகத்துக் கிடமாக்கி உள்ளது.

### ஹுன்சென்னின் செல்வாக்கு

கம்போடியாவின் கிராமங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் அனேகமாக ஹுன்சென்னின் கட்சியேஅதிகாரத்தில் இருந்து வருகிறது. இதனைப் பயன்படுத்தி 1998 மே பொதுத் தேர்தலில் பயமுறுத்தல், மோசடிகள் மூலம் ஹுன்சென் வெற்றி பெறக்கூடும் என்று றணரித் கருதுகிறார்.

இத்துடன் கெமரூச் இயக்கத்தில் இருந்து பிரிந்தவர்களை தமது கட்சியில் சேர்த்துக் கொள்வதில் றணரித்தும் ஹுன்செனும் போட்டி போட்டு வந்தனர்.

சமீபத்தில் இவர்கள் இருவரும் தனித்தனியே காடுகளுக்குள் ஹெலிகளில் சென்று கெமரூச் அதிருப்தியாளர்களைச் சந்தித்திருந்தனர். ஏற்கனவே றணரித்தின் தனிப்பட்ட இராணுவத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கெமரூச் அதிருப்தியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

ஆகவே தேர்தலை நேர்மையாக நடத்தி அதில் வெற்றி பெற முடியுமா என்பதில்இரு தலைவர்களுக்கும் ஏற்பட்ட சந்தேகமே தற்போதைய அதிகாரப் போட்டிக்குக் காரணம் ஆகும்.

சர்வதேச அரங்கில் ஐ. நா. மத்தியஸ்தம் வெற்றி பெற்ற நாடுகளில் கம்போடியாவும் ஒன்றாகக் கருதப்பட்டது.

தற்போதைய அதிகாரப் போட்டி இதனைக் கேள்விக் குறியாக்கிவிட்டது. ★

## உள்ளும் புறமும்

குறுமுனி

### அனுராவின் விழாவுக்கு அழைப்பு!

1977 நடுப்பகுதியில் நடந்த பொதுத் தேர்தலில் குதித்ததுடன் அனுரா பண்டாரநாயக்காவின் அரசியல் வாழ்வு உத்தியோகபூர்வமாக ஆரம்பமானது. அத்தேர்தலில்நுவரெலிய — மஸ்கெலியத்தொகுதியில் வென்று — நாடாளுமன்றத்தில் மிகப் பலம் வாய்ந்த கட்சியாக இருந்த ஐ. தே. கட்சிக்கு எதிராக —அப்போதைய தமது கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில எம். பிக்களுடன் இணைந்து நாடாளுமன்றத்தில் துடிப்புடன் செயலாற்றிய இளைஞர் அவர். அப்போது அவருக்கு வயது 28.



அவரது அரசியல்பிரவேசத்தின் இருபதாவது ஆண்டு இதுவாகும். அதனை ஒட்டி அவரைப் பாராட்டும் வைபவம் ஒன்று எதிர் வரும் 25ஆம்திகதி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது. அதில் பங்கு பற்றும்படி ஆசியாவில் மிக முக்கியத்துவம் வாய்ந்த மூன்று பெண் அரசியல்வாதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

உலகின் முதலாவது பெண் பிரதமரும் வயதில் மூத்த பழுத்த அரசியல் வாதியும், இலங்கையின் தற்போதைய பிரதமரும், அனுராவின் தாயாருமான சிறிமாவோ பண்டாரநாயக்காமுதலாவது பெண்மணி. அவர் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார்.

விசேட விருந்தினராக அழைக்கப்பட்டிருக்கும் மற்றைய பெண்மணி பாகிஸ்தானின் தற்போதைய எதிர்க் கட்சித்தலைவரும் முன்னாள் பிரதமருமான பெனாஸிர் பூட்டோ. இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அவர் சம்மதம் தெரிவித்து விட்டதாகத் தெரியவருகின்றது.

மூன்றாவது பெண்மணி முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா.

பண்டாரநாயக்கா குடும்பமும், நேரு குடும்பமும் காலங் காலமாக நட்புறவைப் பேணி வந்தவை. அதனால் இந்தநிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்கு சோனியா விரும்புகின்றார்.

எனினும் முன்னர் இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதி சந்திரிகா நேரில் விடுத்த அழைப்பை சோனியா ஏற்றிருக்கவில்லை. இந்நிலையில் — அனுராவுடன் அவரது அக்காவும் ஜனாதிபதியுமான சந்திரிகா அரசியலில் முரணான போக்கை கடைப்பிடிக்கும் நிலையில்க் — அக்காவின் அழைப்பை ஏற்காமல் தவிர்த்து விட்டு, தம்பியின் பாராட்டு நிகழ்ச்சிக்கு வந்து வீண் சங்கடங்களைத் தேடிக் கொள்ள சோனியா விரும்பவில்லை எனத்தெரிகின்றது.

பங்களாதேஷின் பிரதமர் ஷேக் ஹஸீனா, பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் மாக்கிரட் தட்சர் போன்ற அரசியல் தலைவர்கள் ஏற்கனவே அனுராவுக்கு வாழ்த்துக்களை அனுப்பியுள்ளனர்.

சரி. தமது பாராட்டு விழாவுக்கு ஆசியாவின் பிரபல அரசியல் பெண்மணிகளை அழைக்கும் 48 வயதான அனுரா, தமது வீட்டுக்குப் பொறுப்பாக ஒரு பெண்மணியை அழைத்து வரப் போவது எப்போது?—இப்படிக் கேட்கிறார் ஒரு குறும்புக்காரர்.

டட்லி வழியில் செல்லப் போகிறாரா அனுரா?

## செவ்வாய்....

(முதலாம் பக்கத் தொடர்)
தனது மேற்பரப்பில் பொருத்தப்பட்டுள்ள சோலர் பற்றரிகள் மூலம் சக்தியைப் பெற்று நகரும் இந்த மினி றோவர் ஆங்காங்கே தரித்து நின்று அங்குள்ள தரைப் பகுதியை, பாறைகளை சோதனை செய்கின்றது.

றோவரில் பொருத்தப்பட்டுள்ள அல்பா புரோட்டோன் எக்ஸ்—றே வண்ண நிழலுருக்காட்டி செவ்வாயின் தரைப் பகுதியை ஆங்காங்கே, ஊடுருவி ஆராய்ந்து, அவற்றின் உள்ளடக்கம் மற்றும் ஊடு மூலகங்கள் பற்றிய பல தகவல்களைப் பூமிக்கு அனுப்பிக்கொண்டிருக்கின்றது.

விண்கலத்தில் பொருத்தப்பட்டுள்ள வானிலை ஆய்வுக் கருவிகள் செவ்வாயின் சூழல், வளிமண்டலம் ஆகியவை பற்றிய தகவல்களை சேகரித்த வண்ணம் உள்ளன.

இந்த விண்கலத்தின் சாதாரண ஆய்வுக்காலம் 30 செவ்வாய் நாள்கள் என உத்தேசமாகத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் அது மேலும் பல காலம் இயங்கக் கூடும்,

விண்கலமும் அதிலிருந்து இறங்கி செவ்வாய்த்தரையில் ஓடித்திரியும் 'மினி றோவர்' வாகனமும் தொடர்ந்து பூமிக்கு அனுப்பிக்கொண்டிருக்கும் தகவல்களை அமெரிக்க விஞ்ஞானிகள் தொகுத்து, பகுத்து, நுணுகி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அவை செவ்வாயின் தோற்றம், தரையமைப்பு, சூழ்நிலை, அங்குள்ள வானிலை மற்றும் விடயங்கள் குறித்து அரிய தகவல்களை, உண்மைகளை வெளிக்கொணரும் என்பது மட்டும் நிச்சயம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org